www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
11/00
ஜூலை 20–26,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 214

## மூன்று முனைகளில்
# புலிகளின் வியூகம்!
### அறிகுறிகளும் - ஆயுதமும்




## கொல்லப்பட்ட பிரஜைகள்குழுத் தலைவர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## புதிய நீரோ மன்னர்கள்!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'நடக்குமென்பார் நடக்காது
நடக்காதென்பார்
நடந்துவிடும்'
கண்ணதாசன் எழுதியதாக ஞாபகம்.
நம் நாட்டு
அரசியல் கட்சிகளின்
நா நாணயமும்
அப்படித்தான் இருக்கிறது!
ஒருபோதும் இவர்கள்
சொன்னதைச் செய்ததுமில்லை;
செய்வதைச் சொன்னதுமில்லை.
எரிகிற வீட்டிலே
பிடுங்கிக்கொள்ள நினைப்போரை
'பாவிகள்' என வசைபாடுவர்.
அந்தப் பாவச் செயலுக்கு
அரசியலில் மட்டும்
சாணக்கியம்-சமயோசிதம்
என்று பல பெயர்கள்!
ரோம் பற்றி எரிந்தபோது
ஃபிடில் வாசித்தான்
நீரோ மன்னன்.
இன்று ஒன்றா, இரண்டா?
எத்தனை எத்தனை
நீரோ மன்னர்கள்?
ஆளும் கட்சியின் அறிவிப்புக்கள்;
எதிர்க்கட்சியின் தெரிவிப்புக்கள்;
தமிழ்க் கட்சிகளின் அறிக்கைகள்;
இது கட்டம் ஒன்று!
ஆளும் கட்சி-
எதிர்க்கட்சி இணக்கப்பாடுகள்;
ஆளும் கட்சி-
தமிழ்க் கட்சி பேச்சுவார்த்தைகள்;
எதிர்க்கட்சி
தமிழ்க் கட்சி சந்திப்புக்கள்;
இது கட்டம் இரண்டு!
அன்றாடப் பிரச்சனைகள்
பற்றி அடித்துப் பேச்சு;
உடனடியாகத் தீர்க்க உறுதி;
கைதுகளுக்கு கண்டனம்;
கவனிப்பதாக உறுதி!
பாலியல் வல்லுறவு;
அவசரத் தந்தி!
உடன் விசாரணை!
ஷெல் அடிகள்;
'ஃபக்ஸ்' பறந்தது;
நிறுத்த நடவடிக்கை!
அவசரமாநாடு;
தமிழ்க் கட்சிகள்
பிரச்சனைகளை பட்டியலிட்டன;
பார்த்துக் கொள்வதாக
அமைச்சர் உறுதி!
இவையெல்லாம் கட்டம் மூன்று!
கடந்த ஒரு வருடகால
பத்திரிகைகளைப் புரட்டிப்பாருங்கள்.
ஆளும் கட்சி-
எதிர்க்கட்சி உறுதிமொழிகள்;
இரண்டு தரப்போடும்
பேசியது தொடர்பாக
தமிழ்க் கட்சிகள் வெளியிட்ட
விளம்பரமான செய்திகள்
அனைத்தையும் பிரட்டிப் பார்த்தால்,
இந்த நாட்டில் இனப்பிரச்சனை
என்றோ தொலைந்திருக்க வேண்டும்!
அரசியல் தீர்வுக்கு
அடுத்தது அன்றாடப் பிரச்சனைகள்!
அமைச்சர்கள் முதல்
ஜனாதிபதி வரை
தமிழ்க் கட்சிகளால் நடத்தப்பட்ட
சந்திப்புக்களின் முடிவில்
எந்தவொரு தமிழ்க் கட்சியாவது
நம்பிக்கையீனம் தெரிவித்துள்ளதா?
ஊன்றிக் கவனியுங்கள்!
இல்லையல்லவா?
தாங்கள் சொன்னதால்
தக்க நடவடிக்கை என்ற ரீதியில்
செய்தி கொடுத்திருக்கக் காண்பீர்கள்!
தாங்கள் பேசியதால்
தக்க நடவடிக்கை, என்று
தமிழ்க் கட்சிகள் கூறியதையெல்லாம்
எடுத்துத் தொகுத்துப் பார்த்தால்,
இன்றைய அன்றாட அவலங்களில்
ஒன்றுகூட மிஞ்சியிருக்காது!
ஆனால் நிலமை தலைகீழாக
இருக்கக் காண்கிறோம்.
அரசியல் கட்சிகள் கூறியதில்
ஒன்றுகூட நடந்ததில்லை.
இனி நடக்காது என்று கூறப்பட்ட
அனைத்து அவலங்களும்
தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன!
பிரச்சனைகளைத் தீர்ப்பதைவிட,
பிரச்சனைகளை பேசிப் பேசியே
பிரபலமாக ஆசைப்படுவதால்
பிரச்சனைகள் தொடர்வதிலேதான்
அரசியல்வாதிகளுக்குப் பிரியம்!
இந்த விடயத்தில்
இன-மத-மொழி பேதமின்றி
அரசியல்வாதிகளுக்குள்
இணக்கப்பாடு இருக்கவே செய்கிறது.
'புதிய நீரோ மன்னர்கள்
யார்?' என்பதை
சுட்டிக்காட்டித்தான்
நீங்கள் அறியவேண்டியதில்லையே!
மீண்டும் மறுமடலில் ■ ■
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள்!

# ஆன்மீகம்



பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்கு பிரியமானது என்று கொலோசெயர் 3:20 வசனத்தில் வாசிக்கிறோம்.

இன்று எத்தனையோ பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் பிரச்சனையாக வாழ்கிறார்கள். "உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும் பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்று எபேசியர் 6:2-3 வசனங்களில் ஒரு விசேஷ கடமையாக இருக்கிறது.

இன்று எத்தனையோ பெற்றோர் தங்கள் பிள்ளைகள் நிமித்தம் கண்ணீரோடும் கவலையோடும் வாழ்கிறார்கள். "நாம் கஷ்டப்பட்டு வளர்த்த நம் பிள்ளைகள் எங்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு விரோதமாகவும் மாறாகவும் நடக்கிறார்கள்."

"மூடனாகிய மகன் தன் தகப்பனுக்கு மிகுந்த துக்கம்." நீதி 19:13 என்று வேதம் குறிப்பிடுகிறது.

ஆகவே பிள்ளைகளே! (உங்களுக்கு நன்மை உண்டாக) தகப்பனையும் தாயையும் கனம் பண்ணி அவர்கள் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

ஆர். தேவராஜ், கட்டுகஸ்தோட்டை.

## அதிகமாக சிந்தனை செய்யுங்கள்!

"எனது உம்மத்தவர்களே! நான், உங்களுக்கு ஐந்து விஷயங்களை உபதேசிக்கின்றேன். அவற்றை அதிகமாக சிந்தனை செய்வீர்களாயின் உங்களுக்கு இறைவனின் அன்பும், அருளும் உண்டாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அவை:

* ஜனங்கள் உங்களுக்குச் செய்த உபகாரங்களை அதிகமாக சிந்திப்பதைவிட, இறைவன் உங்களுக்குச் செய்திருக்கும் உபகாரங்களை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.
* இவ்வுலகின் இன்பங்களை அதிகம் சிந்திப்பதைவிட, மறுமையின் இன்பங்களை அதிகமாகச் சிந்தியுங்கள்.
* பிறருடைய குற்றங்குறைகளை துருவித் துருவி ஆராய்வதை விட, உங்களிடம் உள்ள குறைகளைப் பற்றி அதிகமாகச் சிந்தியுங்கள்.
* நீங்கள் செய்திருக்கும் நற்கிரியைகளை அதிகமாகச் சிந்திப்பதைவிட, உங்களால் நிகழ்ந்துள்ள துற்கிரியைகளை அதிகமாக சிந்தனை செய்யுங்கள்.
* நீங்கள், உங்களின் ஜீவியத்தை அதிகம் சிந்திப்பதைவிட, உங்களுக்கு நிகழப்போகும் மரணத்தை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.

செயிட் அஸ்லம் எஸ். மௌலானா.

## கவிதைப் போட்டி இல. 211



### பரிசுக்குரிய கவிதை

### மீழுங்காலம் வந்திடாதோ...?

மூழும்போர் அனர்த்தமோ-உன்னை
பாழுங்கிணற்றுள் விழ்த்தியதோ
வாழுங்காலத்துப் பயிரே- உனக்கு
மீழுங்காலம் வந்திடாதோ....?

அ-மரியதாஸ்- கச்சேரி, மன்னார்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**களித்திடுவோம் வாரீர்!**

காடழிப்பு தொடர்ந்ததால்
கழனிகளில் நீரில்லை;
கட்டி வைத்த கேணியில்
கடுகளவும் நீரில்லை;
விடழிந்து போனது
விளையாடவோர் இடமில்லை;
கேணிதனில் விளையாடி
களித்திடுவோம் வாரீரோ!
பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

**நிர்ணயம்**

'வெற்றி நிச்சயம்' அவர்களுக்கென்றால்,
மரணம் நிச்சயம் எங்களுக்கே!
இடையில் அகப்படுவோம்,
இடைவிடாது இடம்பெயர்வோம்,
இவர்கள் நாங்களே!!
திருமதி.க.கமலாம்பிகை- பண்டாரிகுளம், வவுனியா.

**வெற்றி உண்டு!**

உயர்த்திய கைகளை,
ஊன்றி எழும்பு!
உண்டு வெற்றி,
உன் வாழ்வில்!
ஏ.எம்.எம்.ஜபீர்ஸ்-
திருகோணமலை.

**உண்மை!**

உறங்கி(ப்) போன
உணர்வுகள் - சிலநேரம்
எட்டி(ப்) பார்க்கிறது--
எம்மை அறியாமல்....!
மனசு-நீர்கொழும்பு.

**வெற்றி....**

குழியென்று தெரிந்தும்
காலை வைத்துவிட்டு
விழுந்த பின்
விழவில்லை என்றால்....?
சுபா வரன்-கண்டி.

**(B)பங்கர்**

இருப்பது
தமிழரென்றால்
கட்டாயம்-இது
(B)பங்கர்தான்!
ம.பிரதீபன்-
மாங்குளம்.

**அமைதி!**

பாதாளம் வரை
சென்று பார்த்தேன்-இப்
பாரில் அமைதி என்பது
இருக்கவில்லை!
சிறினிவாசன் சிவா, வட்டவளை.

**நிம்மதி**

அம்மா நீயும் வா இங்கே....
யாருமில்லை தொந்தரவுக்கு!
ஷிரோ - பொல்கொல்ல, கண்டி.

**2000ம் வரும்போது!**

யாவருக்கும் புகலிடமோ?
அதற்கான ஒத்திகைதான்
ஐந்தினிலே ஆரம்பமோ?
கனகராஜா கார்த்திகாயினி-
மஞ்சள் தொடுவாய், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.214



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 26.07.1997

**முகவரி:** கவிதைப் போட்டி இல.214
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

**அய்யய்யோ....!**

பாம்புக்கறி சமையல் சம்பந்தமான புகைப்படத்தைப் பார்த்ததிலிருந்து புடலங்காய் சமைப்பதையே விட்டு விட்டேன். அதை தூக்கினால் பாம்பு ஞாபகம்தான் வருகின்றது. 'உடைந்த இரவு' தொடர் நல்ல விறுவிறுப்பு. சிந்தியாவின் பதில்கள் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றன. கேள்விகளை தெரிவு செய்வதிலும் நீர் பலே கில்லாடிதானய்யா!

இந்திராணி பாலகிருஷ்ணன், அட்டன்.

பாம்பு என்றாலே படையும் நடுங்கும் என்பார்கள். முரசுக்கோ பாம்புமீது தீராத மோகம். ஏனென்றால் ஒவ்வொரு வாரமும் பாம்புகளை பற்றிய படங்களும் விமர்சனங்களும். போதாததற்கு பாம்புக்கறியை வேறு இரசித்து படங்களோடு வெளியிட்டு விட்டீர்களே!

திருமதி. ராதா சிவபெருமாள், டவுன்சைட் எஸ்டேட்.

அன்பின் முரசே,

ஏற்கனவே உனது அணியில் பலமான துடுப்பாட்டக்காரர்கள் இருக்கிறார்கள். இப்போது முத்தமிழனை அறிமுகப்படுத்தியிருக்கிறாய். வந்திறங்கியவுடன் 3 பந்துகளில் 3 'சிக்ஸர்' களை அடித்துவிட்டு 'கம்' என்று நிற்கிறார். ஒரே திசையில் அவை 3 ம் அடிக்கப்பட்டவை எனினும் சலிக்கவில்லை.

ம. பிரேம்குமார், லிங்கநகர், திருமலை.

முரசு 212ல் காதில பூ கந்தசாமியாரின் "கனவில் இனிக்கும் கலைஞரின் முழக்கம்" கற்பனை அபாரம் தான். கற்பனையும் கற்கண்டாய் இனித்தது. அதிரடி ஐய்யாத்துரையர் கில்லாடிதான் போலும். எங்கெல்லாம் புகுந்து குடைகிறார். 'உடைந்த இரவு' அடுத்த அங்கத்தை அவலுடன் எதிர்பார்க்க வைக்கும் விறுவிறுப்பு. முரசு சார்பில் ராஜேஸ்குமாருக்கு பாராட்டுக்கள்.

இரத்தினபுரியூர்- செல்வன் சி. ஸ்ரீரவி, சிலாபம்.

எனதருமை முரசே!

யாழ் மு. கலை எழுதிய பொழுதுபோக்கு என்னும் சிறுகதை இளம் பெண்களோடு சேட்டை செய்யும் ஆண்களுக்கு ஒரு பாடமாக அமைந்தது.

எஸ். சங்கரலிங்கம், பழுகாமம்-2.

கொள்ளைராணி பூலான் தேவியை எமக்கு அறிமுகப்படுத்திய ரசிகன் மென்மேலும் வளர வேண்டும். கிரைம் சக்கரவர்த்தியின் உடைந்த இரவு அபாரம். என்னையும் பரிசு மழையில் நனையச் செய்ததற்கு நன்றி. மென்மேலும் பொழிவு பெற்று முரசு வளர வாழ்த்துகின்றேன்.

என்.ஜீ. நாகேஸ்வரன், பூண்டுலோயா மேல்பிரிவு.

இனிய முரசுக்கு!

தித்திக்கும் செய்திகளுடன், திகட்டாமல் வாரம் தோறும் திக்கெட்டும், வலம் வரும் முரசே! உன்னில் அடங்கி உள்ள அனைத்து அம்சங்களும் அருமை. அதிலும் அற்புதன் எழுதும் அரசியல் தொடர், நாரதரின் எக்ஸ்ரே ரிப்போர்ட், ரசிகனின் இலக்கிய நயம், அதிரடி அய்யாத்துரை அனைத்தும் என்னை வியப்பில் ஆழ்த்துகின்றன!

ஏ. செபஸ்தியன், உடுப்பிட்டிய.



# வாசக(ர்)சாலை

அன்பான முரசுக்கு!

கடந்த 3 வருடங்களுக்கு மேலாக தங்களின் பத்திரிகையை வாசித்து வருகிறேன். அதிலும் குறிப்பிட்டுச் சொல்வதானால் அற்புதன் எழுதும் அரசியல்தொடர் என்னைப்போன்று பலர் விரும்பி வாசிக்கும் கட்டுரையாகும். இதனை ஆரம்பம் முதல் வாசித்தாலும் முழுமையாக நீங்கள் இதனை ஒரு புத்தக வடிவத்திற்கு கொண்டுவரவேண்டும் என தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

க. கேசவன், சூரிச், சுவிற்ஸர்லாந்து.

### காத்திருப்பேன்

என் அபிமானத்தை வென்ற முரசே!

நான் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் (முகாமில்) கொழும்பு பயணத்தை தொடர்வதற்காக மடுவில் இருந்து 1997 தை மாதம் வந்தேன். அன்று முதல் 'முரசை' ஆவலுடன் வாங்கி படிப்பேன். அதில் அடங்கும் சகல பகுதிகளும் என்னைக் கவர்ந்துள்ளன. தினந்தோறும் வரமாட்டாதோ என ஏங்குவேன். இது இவ்வாறிருக்கும் வேளையில் எனது கொழும்பு பயணம் நிறைவேறாத பட்சத்தில் யாழ்ப்பாணம் செல்கின்றேன். எனது நிலைமையை தங்களுக்கு அறியத் தந்துள்ளேன். இதனை நிவர்த்தி செய்வீர்களா? 'முரசு' யாழ் வருமா?

மீண்டும் மீண்டும் உன்னை தீண்டும் வரை ஆவலுடன் காத்திருக்கும்.

ஜே. ஜெபர்சன், குருநகர், யாழ்ப்பாணம்.

### அரங்கம் வேண்டும் அவர்களுக்கு!

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தோல்வியை தமிழ்கட்சிகள் கண்டும் காணாமல்தான் இருப்பர். அவர்கள் பேசிக்கொண்டிருக்கவும், பேசியதைப் பத்திரிகைகளுக்குச் சொல்லவும் ஒரு வாய்ப்பான அரங்கம் வேண்டாமா? இது தெரியாமல் 'முரசு' அதிகம் எதிர்பார்க்கலாமா?

இ. பேரின்பநாயகம், முல்லைத்தீவு.

### காந்தி சொன்னதை....

இனிய முரசுக்கு,

'செய் அல்லது செத்துமடி'- "காந்தி கதருடனும், கைத்தடியுடனும் நின்று சொன்னதை. பிரபாகரன் துப்பாக்கியுடனும் சீருடையுடனும் நின்று சொல்கிறார்" என்று நாதரர் குறிப்பிட்டிருந்தது 'நச்' எனக் குத்திய முத்திரை வார்த்தை.

எம். பசுபதி, கொழும்பு-13.

### பனிப்போர்

'கிழக்கின் தனித்துவத் தலைவருக்கும் அவரது சிஷ்யருக்கும் பனிப்போர்' என்று முரசு சொன்னது சரிதானுங்க. சிஷ்யரை ஒரு பிடி பிடித்து அக்கட்சியின் பிரமுகர் ஒருவர் அறிக்கை கொடுத்திருக்கிறாரே! தலை சொல்லாமல் வால் ஆடுமாங்க? எங்கள் ஆதரவு சிஷ்யருக்குத்தாங்க.

எல். ஜமால்டீன், புதிய காத்தான்குடி.

### பந்தாட்ட விளம்பரம்

'பந்தாட்டமும் தமிழ்க்கட்சிகளின் திண்டாட்டமும்' அப்பழுக்கற்ற உண்மை. அப்பப்பா... ஐந்து கட்சிக் கூட்டம், எட்டுக் கட்சிக் கூட்டம் என்று எப்படியெல்லாம் புழுதி கிளப்பினார்கள். பின்னர் சிலகாலம் சத்தம் இல்லாமல் இருக்கும். அதன்பின்னர் நினைவுக்கு வந்ததுபோல மறுபடி கட்சிக்கூட்டம் என்று கலாட்டா பண்ணத் தொடங்குவார்கள். இவர்களில் விளம்பர டெக்னிக்குகள் தாங்கமுடியவில்லை. அதற்காக எங்கள் தலையிலா மிளகாய் அரைப்பது?

சி. நிவாஸ், மட்டக்களப்பு.

### கையறு நிலை

தனி மாகாணமா, இரு மாகாணமா? எதுவுமில்லாத பொய்க்கால் வாகனமா என்பதை அறிய முன்னர் தமிழ்-முஸ்லிம் கட்சியினர் தமக்குள் முட்டி மோதுவானேன்? அவர்கள் அதனை வேடிக்கை பார்ப்பானேன்? இப்படியாகவேண்டுமா எம் கட்சிகளின் கையறு நிலை?!

ஜெ. கே. ராஜ், கொழும்பு-06.



படிப்பகம்

www.padippakam.com

# மூன்று முனை முற்றுகைக்கு திட்டம்

## அழுத்தங்களை முறியடிக்க உத்தரவு

## கிழக்கில் உள்ள புலிகளுக்கு பிரபா பாராட்டு

புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் முக்கிய செய்தி அடங்கிய ஓடியோ கசட் ஒன்று கிழக்கில் உள்ள புலிகளுக்கு அனுப் பப்பட்டுள்ளது. கிழக்கில் தொடர் தாக்குதல் களை நடத்திவரும் புலிகளின் அணியினரை பாராட்டுவதற்காகவே தனது குரலில் பதிவு செய்யப்பட்ட கசட்டுக்களை பிரபாகரன் அனுப்பியிருக்கிறார்.

கிழக்கில் இருப்பதால் தன்னை நேரடி யாக சந்திக்க முடியாத உறுப்பினர்களை பாராட்டவும், உற்சாகம் கொடுக்கவுமே பிரபாகரன் தானே பேசி பதிவு செய்த கசட் டுக்களை அனுப்பியுள்ளார்.

கிழக்கில் உங்கள் செயற்பாடுகளை திறம்பட செய்து வருகிறீர்கள். தொடர்ந்தும் உங்கள் ஆற்றலை வெளிப்படுத்துங்கள் என்று தெரிவித்துள்ள பிரபாகரன், ஏனைய தமிழ்க் கட்சிகள் தொடர்பான கடும் போக்கையும் வெளியிட்டுள்ளார்.

அரை குறைத் தீர்வுகளுக்காக விடுத லைப் போராட்டத்தையும், தாயகக் கோட்பாட் டையும் தாரை வார்க்கவும், காட்டிக்கொடுக்க வும் நினைப்பவர்களை சகித்துக் கொண்டி ருக்க முடியாது. அவர்களுக்குரிய தண்டனை களை வழங்கியே ஆகவேண்டும்' என்று பிரபாகரன் தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள வேறு சில அரசியல் வாதிகளுக்கும் புலிகள் குறி வைத்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு பா.உ ஜோசப் பரராஜசிங்கத்தின் உரைகளுக்கு புலிகளின் செய்திகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. "புலிகளுடன் பேசித்தான் பிரச்சனையை தீர்க்க முடியும்" என்று சமீபத்தில் அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை புலிகளின் குரல் வானொலியும், ஈழநாதம் பத்திரிகையும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

மூன்று முனைகளில் புலிகளின் இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

அரசியல் ரீதியிலான அழுத்தத்தை முறியடிக்கவும், தமது கட்டுப்பாட்டுப் பகுதி களில் உள்ள மக்கள்மீதான பொருளாதார அழுத்தங்களை முறியடிக்கவும், இராணுவ ரீதியிலான அழுத்தத்தை முறியடிக்கவும் என்று மூன்று முனைகளில் புலிகள் தமது நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஏற்கனவே இதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கியுள்ளன.

**முதல் எச்சரிக்கை**

அரசியல் தீர்வொன்றை காண்பதற்கு தாம் மனப்பூர்வமாக முயல்வதாகவும் புலி களே தடையாக உள்ளதாகவும் அரசு கூறி வருகிறது. இன்றைய போருக்கான அச்சாணி யாக அரசியல் தீர்வு யோசனையை அரசு பாவித்து வருகிறது. அரசியல் தீர்வுக்கு அரசு தயாராக இல்லையென்று வெளியுலகம் கருதினால் போரின் அச்சாணியே முறிந்த மாதிரியாகிவிடும்.

தமிழ்க் கட்சிகள் குறிப்பாக கூட்டணி யினரே அரசியல் தீர்வு யோசனைகளை ஆதரித்து வருகின்றனர். ஏனைய தமிழ்க் கட்சிகளை ஒத்துழைக்குமாறும் கோரியுள்ள னர். அரசின் அரசியல்ரீதியான அழுத்தத் துக்கு உதவும் தமிழ்க் கட்சிகளுக்கு விடுக்கப் பட்ட முதல் எச்சரிக்கையே தங்கத்துரை கொல்லப்பட்டமையாகும். இது கூட்டணியின ருக்கான எச்சரிக்கை மட்டுமல்ல. சகல தமிழ்க் கட்சிகளுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும்.

மேலும் இந்த எச்சரிக்கைப் படலம் தொடரும் என்றே தெரிகிறது. ஏனைய தமிழ்க் கட்சிகளும் இலக்காகக்கூடும்.

வன்னியில் பொருளாதார அழுத்தத்தை ஏற்படுத்தியபடி, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு உணவு அனுப்பும் முயற்சியை முறியடிக்கவே கப்பல் போக்குவரத்தில் புலிகள் கைவைத்துள்ளனர்.

தரைப்பாதை ஒன்றை திறக்கப்போவ தாக அரசு கூறிவரும் வேளையில், கடற் பாதைப் போக்குவரத்தையே கேள்விக்குள் ளாக்கும் விதமாகவும் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. அதேவேளை புலிகளின் இந்த நடவடிக்கை தரைப்பாதையொன்றை திறந்தாக வேண்டிய கட்டாயத்தையும் அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது என்று இராணுவ விமர்சகர்கள் கூறுகின்றனர்.

தரைப்பாதை திறப்பாதை தம்மால் தடுக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் கடற்பாதையில் நெருக்கடி கொடுக்க புலிகள் முன்வந்தனர் என்றும் ஒரு சாரார் தெரிவிக் கின்றனர்.

**புலிகளின் செய்தி**

வட கொரியா கப்பல் கடத்தப்பட்டது தொடர்பாக புலிகளின் செய்திக் குறிப்பு பின்வருமாறு தெரிவிக்கிறது:

சிறீலங்கா அரசினால் தமது விநியோகத் துக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பலையே வழிமறித்தோம். வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் காணப்பட்ட அக்கப் பலை கடற்புலிகள் வழிமறித்தனர். கடற்புலி கள் நிறுத்துமாறு கேட்டும் பயணத்தை தொடர்ந்ததாலேயே கடற்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போதுதான் கப்பற் சிப்பந்தி ஒருவர் பலியானார்" என்று புலிகள் தெரிவித்துள்ளனர். சிப்பந்தி தப்பமுயன்றபோது புலிகள் சுட்டதாக வெளியான செய்திகள் தவறானவை.

தமது கட்டுப்பாட்டுப் பகுதிகள்மீது பொருளாதார அழுத்தத்தை பிரயோகித்து, மக்களை அங்கிருந்து வெளியேற்ற அரசு முயல்வதாக கருதியே புலிகள் இந்த பதிலடி நடவடிக்கையை எடுத்துள்ளதாக கூறப்படு கிறது.

இராணுவரீதியில் வன்னியில் படைக் குவிப்பை தொடரமுடியாமல் செய்ய, ஏற்கனவே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகளின் ஊடுவல் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாகும் என்று தெரிகிறது.

யாழ் குடாநாட்டில் புலிகளின் அணிகள் அதிகமாகிவரும் தகவல் படையினருக்கும் எட்டியுள்ளது. இதனையடுத்து சிறு முகாம் களை மூடத் தொடங்கியுள்ளனர். அதற்கு பதிலாக பெரும் முகாம்களை அமைத்து வருகின்றனர். சமீபத்தில் சுண்டிக்குளி, ஈச்சமோட்டை பகுதிகளில் உள்ள சிறு முகாம்கள் மூடப்பட்டு, நாலாம் குறுக்குத் தெருவில் பாரிய முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

## வீடு புகுந்து வெறியாட்டம்!

## நாயையும் வெட்டிப் போட்டனர்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பின ரான பிரபாகரன் என்பவரும், அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களும் படு கொலைத் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

14.07.97 அன்று அதிகாலையில் நடை பெற்ற இச்சம்பவத்தில் மாநகர சபை உறுப்பினர் பிரபாகரனின் 4 வயதுப் பிள்ளை ஒன்றும், அவரது நண்பர்கள் இருவரும் பலியாகியுள்ளனர். அவரது மனைவியும் வெட் டுக் காயங்களுக்கு உள்ளானார். கத்தி வெட்டுக் காரணமாக கைவிரல்களை இழந்த நிலையில் கடும் காயங்களுடன் பிரபாகரன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இச்சம் பவத்தின் பின்னணி தொடர்பாக கிடைத் துள்ள தகவல்களை கீழே தருகிறோம்:

மாநகர சபை உறுப்பினரான பிரபாகரன் முன்னாள் ஈரோஸ் இயக்க உறுப்பினராவார். ஈரோஸ் இயக்கத்தினர் புலிகளுடன் இணைந் தனர். தற்போது ஈரோஸ் அமைப்பாக செயற்பட்டுவரும் சங்கர்ராஜு" தலைமையி லான ஈரோசுடனும் பிரபாகரனுக்கு பிரச் சனை உண்டு. 'மட்டக்களப்பு ஈரோஸ்' என்று தமது குழுவை அழைத்துக் கொள்கிறார்.

**வெளியேற்றம்**

மட்டக்களப்பு கோவிந்தன் வீதியில் உள்ள வீட்டை பலாத்காரமாக கைப்பற்றி, அங்கி ருந்த மலையகக் குடும்பம் ஒன்றை வெளி யேற்றிவிட்டு அதனை தனது அலுவலகமாக வும், வீடாகவும் பாவித்துவருகிறார். அந்த வீட்டின் உரிமையாளர்கள் அவுஸ்திரேலியா வில் உள்ளனர். அவர்களால் வீட்டைப் பார்த்துக் கொள்ள குடியமர்த்தப்பட்ட மலை யக குடும்பத்தினர் தற்போது அவ்வீட்டின் பின்புறமாகவுள்ள சிறிய வீட்டில் குடியி ருக்கின்றனர்.

அக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும் தாக்குதலில் பங்குபற்றியதாக தெரிகிறது. ஏழுபேர் கொண்ட கோஷ்டியே வீடு புகுந்து வெறியாட்டம் நடத்தியதாகத் தெரிகிறது.

இக் கோஷ்டிக்கு தலைமை தாங்கியவர் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள். அவரது பெயர் சமயரஜீந்திர. இவர் மாநகர சபை உறுப்பினர் பிரபாகரனுக்கு மெய்க்காப் பாளராக முன்னர் கடமையாற்றியவர்.

இவர் மெய்க்காப்பாளராகக் கடமையாற் றியபோது கொழும்பு ஈரோஸ் அலுவலகத் துக்கு ஃபோன் செய்து "எனக்கு பிரபாகரன் ரூபா 30 ஆயிரம் பணம் தரவேண்டும். திருப்பிக் கேட்டபோது கொழும்பில் உங்களிடம் கேட்கச் சொல்லுகிறார்," என்று கூறினாராம்.

**காதலுக்கு எதிர்ப்பு**

இதே கான்ஸ்டபிள் மாநகர சபை உறுப்பினரின் இல்லம் அருகே உள்ள பெண் ஒருவரைக் காதலித்துள்ளார். இவ்விட யத்தை அறிந்த உறுப்பினர் கான்ஸ்டபிளை எச்சரித்தாராம். அதற்குப் பின்னரும் காதல் தொடர்ந்தது. அதனால் சிவில் உடையில் உள்ளபோது அவரைப் பிடித்துவந்து உறுப் பினரும், அவரது நண்பர்களும் நாலு தட்டுத் தட்டிவிட்டு அனுப்பியதாகவும் கூறப் படுகிறது.

இதன் பின்னரே கான்ஸ்டபிளும், உறுப் பினரால் வெளியேற்றப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவரும் தாக்குதலுக்குத் திட்டமிட்டனராம். சொந்த விரோதம் காரணமாகவே இக் கோரச் செயலில் இறங்கியுள்ளனர்.

கைக்குண்டை வீசிவிட்டு வாளால் வெட்டி வெறியாட்டம் நடத்தினர். தாக்க வேண்டாம் என்று கையெடுத்து ஒருவர் கும்பிட்டாராம். கும்பிட்ட கையையும் வெட்டி னார்களாம். கை இரண்டும் துண்டாகிப் போனது. நாய் ஒன்றையும் துண்டாக வெட் டிப் போட்டிருக்கிறார்கள். இக் குரூரத் தாக்குதல் நடைபெற்ற முறை மட்டக்களப்பு நகரில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

## 13 ஆயிரம் படையினர் வெளியேற்றம்

## ஆங்கில வார இதழ் தெரிவிப்பு

ஜயசிக்குறுய் நடவடிக்கையை இரண்டா வது தடவையாகத் தாக்கிய 'செய் அல்லது செத்துமடி' அணி வடக்கை நோக்கி முன்னே றிய படைகளைத் தொடர்ந்து முன்னேறாமல் தடுத்திருப்பதுடன், இருபடையினரும் ஒன்றிணையவொட்டாமலும் தடுத்துள்ளனர். இவ்வாறு கொழும்பு வார இதழான சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவத் தலைமையகத்தின் அறிக்கையின்படி ஏற்கனவே 20 ஆயிரம் துருப்பினர் வெளியேறிவிட்டனர் என்று தெரிகிறது. 8 மாதங்களுக்கு முன்னர் வெளி யேறியவர்களில் 13 ஆயிரம் பேர் திரும்பி விட்டனர் என்று இராணுவ தலைமை அறிவித்தது. ஆனால் தற்போதும் 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகையினர் வெளியேறிவிட்டனராம்.

ஒருவாரத்துக்கு முன்னர்தான் இராணு வத் தளபதி லெப்ட் ஜெனரல் ரோகன் டி.எஸ்.தலுவத்த, வெளியேறிய அனைத்து இராணுவத்தினரையும் கைது செய்யும் படி உத்தரவிட்டார். அவர்கள் மீது இராணுவச் சட்டதிட்டங்களுக்கு அமைய கோட்மார்ஷல் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அறிவித்தார்.

இதற்கமைவாக ஜூலை 3ம் திகதி விசேஷ கோட்மாஷல் விசாரணையின் பின் ஒரு படைவீரருக்கு 3 வருடக் கடூழியச் சிறைவாசம் விதிக்கப்பட்டது. குற்றவாளி வெலிக்கடைச் சிறை அதிகாரிகளிடம் ஒப் படைக்கப்பட்டார்.

இதற்கிடையில் கடந்த 10ம் திகதி வியாழக்கிழமை, அரசாங்கம், படையிலிருந்து வெளியேறியவர்களுக்கு ஜூலை 21ம் திகதிக்குள் திரும்பி வந்தால் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பொது மன்னிப்புத்திட்ட அறிவித்தலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா செய்தியாளர் மாநாட்டில் அறிவித்தார். இக் கூட்டத்துக்கு இராணுவத் தளபதி தலுவத்தையே தலைமை தாங்கினார். உயர்தர அதிகாரிகள் 35 பேர்வரை இக்கூட்டத்தில் சமூகமளித்திருந்த னர். திரும்பி வரும் படையினருக்கு எத்தகைய பாகுபாடும் காட்டாமல் மரியாதையுடன் நடத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

ஜயசிக்குறுய் நடவடிக்கையில்டுபட்ட இராணுவ வீரர்கள் பலர் வெளியேறி தலை மறைவாகிவிட்டனர். ஜயசிக்குறுய் நடவடிக் கையை மேற்கொண்டும் நடத்த முடியாத நிலை ஏற்பட்டமைக்கு இதுவும் முக்கிய காரணமாகும்.

## ஆசிரியைமீது பாலியல் வல்லுறவு

## அடுத்தடுத்து இரு சம்பவங்கள்!

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார். 12.07.97 அன்று இச் சம்பவம் இடம்பெற்றது. இதன்பின்னர் 14.07.97 அன்று ஆசிரியை ஒருவரும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார். இச் சம்பவங்கள் தொடர்பாக கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு:

வட்டுக்கோட்டையில் அராலி தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர் யோ.விஷாலினி. வயது 17. யாழ் அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்றுவருகிறார்.

12.07.97 அன்று கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்தபோது இராணுவ சிப்பாய் ஒருவர் அங்கு வந்திருக்கிறார். விஷாலினியுடன் அத்துமீறி நடக்க அவர் முற்பட்டார். அதனால் விஷாலினி தப்பியோட முயன்றார். உடனே விஷாலினியை பிடித்து அவரது வாய்க்குள் துணியை அடைத்தாராம் சிப்பாய். அதன்பின்னரே தனது சதை வெறியைத் தீர்த்துக் கொண்டாராம்.

இச் சம்பவம் தொடர்பாக உடனடியாக முறையிடப்பட்டதும் மேஜர் ஜெனரல் பலகல குறிப்பிட்ட சிப்பாய்மீது நடவடிக்கை எடுத் தார். அவரைக் கைது செய்து சுன்னாகம் பொலிஸில் ஒப்படைத்தார்.

இச் சம்பவம் தொடர்பாக மேஜர் ஜெனரல் பலகல விடுத்த அறிக்கையில், இச் சம்பவத் துக்காக மன்னிப்புக் கோருவதாகவும் குறிப் பிட்ட சிப்பாயை ஏனைய இராணுவத்தினரே பொதுமக்கள் முன்பாக நையப்புடைத்தனர் என்றும் தெரிவித்திருந்தார்.

இச் சம்பவத்தில் ஈடுபட்ட சிப்பாயின் பெயர்-: சமன் குமாரதுங்க. அத்துல குமார என்ற சிப்பாய் இவருக்குத் துணையாக இருந்தாராம்.

இந்த அறிக்கை வெளியான அதே தினத்தில்- 14.07.97 யாழ்ப்பாணம் வடமராட்சி யில் வல்லைவெளியில் ஆசிரியை ஒருவர் இரண்டு இராணுவ சிப்பாய்களால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தபட்டார். கரவெட்டி யைச் சேர்ந்த இ.சந்திரகலா, வயது 22, என்பவரே பாலியல் வல்லுறவுக்கு உள்ளானவராவார்.

பகல் ஒரு மணியளவில் இச்சம்பவம் நடந்ததாகவும், மாலை ஆறுமணியளவில் சுய நினைவுக்கு வந்த அப் பெண், ஈ.பி.டி.பி. காரியாலயத்துக்குச் சென்று முறையிட்டுள்ளார். உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு ஈ.பி.டி.பி. யினர் இத்தகவலைக் கொண்டுசென்றுள்ளனர்.

## படை முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன!

புலிகள் இயக்கத்தினர் கிழக்கில் தமது தாக்குதல்களைத் தீவிரமாக்கக்கூடும் என் பதனை எதிர்பார்த்துப் படையினரும் பொலி ஸாரும் கிழக்கிலுள்ள தமது முகாம்களைச் சுற்றி புல்டோசர் இயந்திரங்களைக் கொண்டு பாரிய 'பண்ட்' அமைத்து வருகின்றனர். அத்துடன் முகாம்களைச் சூழவுள்ள பகுதிகளிலிருந்த பற்றைக்காடுகளும் பிரதான வீதி மருங்குகளிலிருந்த கண்ணாக் காடுகளும் கணிசமான தூரத்திற்கு அழிக்கப்பட்டுள்ளன.

புதிய கம்பிகள், மண்மூடைகள் கொண்டு முகாம்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு அதி கூடிய கண்காணிப்பு அரண்களும் அமைக் கப்பட்டுள்ளன.

## சுற்றிவளைப்பு தேடுதல்

(யாழ் நிருபர்)

யாழ் குடாநாட்டில் பாரிய தேடுதல் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

12.07.97 அன்று சுன்னாகம், கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், சீரணி, சங்குவேலி, உடுவில், மருதனாமடம் ஆகிய பகுதிகள் அடங்கிய பாரிய பிரதேசத்தில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இத் தேடுதல் நடவடிக்கையின்போது துப்பாக்கி சூட்டுச் சத்தங்களும் கேட்டன. இந்த நடவடிக்கையின்பின்னர் 35 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலம் சுன்னாகம் பொலிசாரால் யாழ் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

## இடை நடுவே ஏற்பட்ட மோதல்!

## மூன்று புலிகள் பலியாகினர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சின்னவத்தை பொலிஸ் நிலையம் 13.07.97 அன்று புலிகளால் தாக்கப்பட்டது.

இத் தாக்குதலுக்காக நள்ளிரவில் புலி களின் அணி புறப்பட்டுச் சென்றது. அப் போது எதிர்பாராதவிதமாக விசேஷ அதி ரடிப்படையினரை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அதிரடிப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் மூண்டது. புலிகள் தரப்பில் மூவர் பலியாகினர். கப்டன்குளக்கோட்டன், லெப்டினன்ட் ஜெயராம், இரண்டாம் லெப்டி னன்ட் ஜெயஜோதி ஆகியோரே பலியானவர் களாவர்.

இம் மோதலின் பின்னரும் புலிகளின் தாக்குதல் அணி பொலிஸ் நிலையம் நோக்கிச் சென்றது. பொலிஸ் நிலையம்மீதான தாக்கு தலில் இரு பொலிசார் பலியாகியதாகவும், ஏனையோர் வெளியேறிச் செல்ல, அங்குள்ள ஆயுதங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அதே நாளில் மட்டக்களப்பு மாவட்டத் தில் நடந்த மற்றொரு தாக்குதலில் ஒரு பொலிஸ்காரர் பலியானார். அவரிடமிருந்த ஆயுதம் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டது.

## புலிகளுக்கு படையினர் அழைப்பு?

கிழக்கில் ஹெலிக்கொப்டர் மூலமாக படையினர் துண்டுப்பிரசுரங்களை போட்டுள்ளனர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் போடப்பட்ட அப் பிரசுரங் களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுத்தத்தின் அர்த்தமற்ற விளைவுகளி னால் கடந்த 10 வருடத்திற்கும் மேல் உடல் நிலையினாலும், மன நிலையினாலும் கஷ்டப் பட்ட உமக்கு அங்குள்ள அநியாயமான அர்த்தமற்ற செயல்களைப் பற்றி புரிந்திருப் பீர்கள். இவ்யுத்தத்தினால் நீங்கள் இழந் தவைதான் எவ்வளவு? உமக்கு முன்னால் உங்கள் சகாக்களின் உயிர் போனதே யுத்தத்தின் கொடூரமான தன்மையை உணர்த்திய வண்ணமாகும். அதனால் முடிவற்ற யுத்தத்திற்கு விடை கொடுத்து சமாதானத்தை நாடவும். இலங்கை இராணுவம் வருவது உங்களை அழிப்பதற் கல்ல. அவர்கள் முயற்சிப்பது யுத்தத்திற்கு விடை கொடுப்பதற்கே. உங்கள் வாழ்க் கையை பற்றி அவர்களுக்கு சிந்தனை உண்டு. துப்பாக்கியை கைவிட்டு சரணடை யவும். அல்லது தப்பிச் சென்று உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும். உங்கள் வாழ்க்கை நாளை இத்தேசத்திற்கும் எதிர்கால சந்ததிகளுக்கும் பெறுமதியானதொன்றாகும்.

நீர் சில நேரம் பாடசாலை மாணவராக இருக்கக்கூடும். தாமதமில்லாமல் நாசகர மான செயல்களிலிருந்து உங்கள் எதிர்கால வாழ்க்கையை கட்டி எழுப்பவும். சீர்குலைந்த உங்கள் கல்வியை சீரமைப்பதற்கு உங் களால் முடியும். உங்களுக்கு ஒத்துழைப் புக்காக நாம் தயாராக உள்ளோம். ஆகையால் துப்பாக்கியை விட்டு எம்முடன் சேரவும்." இவ்வாறு படையினர் விடுத்துள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்திலும் பிரசுரம் வெளியிடப் பட்டுள்ளது.

## கடற்படைமீது இராணுவம் சூடு

## இனம் தெரியாமல் தாக்குதல்

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையில் முன்ன ணியில் நின்று எதிரிகளின் தாக்குதல்களை முறியடிக்கக் காத்திருந்த படைகளின் எதிரே வித்தியாசமான சீருடையணிந்த சிலர் தென்பட்டனர். உடனே சுட ஆரம்பித்து விட்டனர். எதிரணியிலிருந்தும் எதிர்த்தாக்கு தல் தொடங்கியது. சற்று நேரம் நடைபெற்ற மோதலின் பின்னர், படையினருக்கு எதிரில் வந்த வித்தியாசமான சீருடை அணியில் வந்த இருவர் கொல்லப்பட்டு தரையில் விழுந்ததும் அவர்கள் பின்வாங்கினர். "புலிகள் இருவரை வீழ்த்திவிட்டோம்!" என்று ஆரவாரத்துடன் நெருங்கிப் பார்த்ததில்தான் உண்மை தெரிந்தது.

செத்து வீழ்ந்து கிடந்த இருவரும் கடற் படையைச் சேர்ந்தவர்கள்: சுட்டவர்கள் சிறி லங்கா இராணுவ-காலாட் படைப் பிரிவினர்.

இராணுவத்துக்கு பக்கபலமாக நின்று உதவுவதற்கு கடற்படையினரும் சென்றுள்ளனர். கடற்படையினரை புலிகள் என்று நினைத்தே இராணுவத்தினர் சுட்டிருக்கின்றனர்.

## பாய்ந்ததும் சுட்டனர்

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பில் மரண வீடொன்றில் கலந்துகொண்டுவிட்டு சைக்கிள் ஒன்றில் இரு நண்பர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் சென்ற பாதையில் படையினர் புலிகளை எதிர்பார்த்து பதுங்கியிருந்தனராம். படையினர் பதுங்கிருந்தது இவர்களுக்கு தெரியாது. மதுவும் குடித்திருந்தனர்.

சரியாக படையினர் பதுங்கியிருந்த இடமருகே வந்தபோது சைக்கிளின் பிறேக் பிடிக்கவில்லை. உடனே போதையின் உற்சா கத்தில் சைக்கிளைவிட்டு துள்ளிப் பாய்ந்தனராம்.

பதுங்கியிருந்த படையினர் புலிகள்தான் தம்மைக் கண்டு பாய்கிறார்கள் என்று நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தன ராம். இருவரும் விழுந்துவிட்டனர்.

பின்னர் அவர்கள் யாழ் மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். "பாய்ந்தோம், வெடிச்சத்தம் கேட்டது. விழுந்தோம்!" என்று சொல்லுகிறார்களாம். செல்லத்துரை புலேந்திரன் (வயது 26)- வடலியடைப்பு, முருகேசு முருகானந்தன் (வயது 33)- அரசடி றோட், வடலியடைப்பு ஆகியோரே காயப்பட் டவர்களாவர்.

## தோட்டக் குடியிருப்புக்களுக்கு மின் விநியோகம்

மலையகத்திலுள்ள தோட்டப்புற மக்களின் குடியிருப்புக்களுக்கு மின்சார விநியோகம் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு கோடி ரூபாவை கடனாக ஒதுக் கீடு செய்துள்ளது.

தசாப்த காலங்களாக இருளில் இருந்து வந்த தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப் புக்களில் இனி மின் விளக்குகள் பளிச்சிடும். இந்தக் கடனுதவியின் கீழ் ஏற்கனவே, தெரணியாகலைத் தேர்தல் தொகுதியிலுள்ள நூரி தோட்டப் பகுதிக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்ததாக உடபாகைப் பகுதிக்கும் மிக விரைவில் மின் இணைப்புக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையத்தின் ஏனைய தோட்டப்புற மக்களின் குடியிருப்புக்களுக்கும் மின் இணைப் புக் கிடைக்க வழி செய்யப்படும் இலக்கிலேயே வெளிநாட்டுக் கடன் பெற்றுள்ளதாக கேகாலை மாவட்டப் பா.உ.வும் கல்வி உயர் கல்விப் பிரதி அமைச்சருமான பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்திற்குச் சகல தனியார் துறைத் தோட்ட உரிமையாளர்களும் பூரண ஒத்து ழைப்பு வழங்கி தோட்டத் தொழிலாள மக்கள் அனைவருக்கும் மின் விநியோகம் கிட்டுவதற்கு எதுவித தடைகளுமின்றி உதவ வேண்டு மென்றும் அவர் கேட்டுள்ளார்

இதனிடையே ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவின் படைப்பின் பேரில் அத்தனகல்லைத் தேர்தல் தொகுதியில் இதுவரை மின்சார விநியோகம் கிடைக்கப் பெறாத பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்க 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மின் விநியோக இணைப்பு வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

# நடுநிசியில் திருட்டுச் சம்பவங்கள்!
## மக்கள் நித்திரை செய்ய அச்சம்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-கொம்மாதுறைப் பகுதியில் சம்ப சில நாட்களாகத் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அறியப்படுகிறது. திருட்டில் ஈடுபடுவோர் நடுநிசியில் வந்து வீட்டுக் கதவைத் தட்டி எழுப்பி எல்லாவற்றையும் சோதனை செய்துவிட்டு வீட்டில் உள்ளோர் அணிந்திருக்கும் நகைகளை மட்டும் பிடுங்கிக் கொண்டு செல்கின்றனர்.

இரண்டு அல்லது மூன்று பேராக முகங்களை மறைத்துக் கட்டியபடி வரும் இவர்கள் வாய் திறந்து எதையுமே பேசுவதில்லையாம். நகைகள் கண்ணில் பட்டதும் எந்தவித சலசலப்பும் இல்லாமல் எடுத்துக் கொண்டு மாயமாய் மறைந்துவிடுகிறார்களாம்.

ஆயுதபாணிகளான இந்த மர்மத் திருடர்களின் தொல்லையினால் பொதுமக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் நிலவி வருகிறது.

இதனிடையே மட்டக்களப்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் இனந்தெரியாத நபர்கள் பொது மக்களை மிரட்டிப் பணம் பெறுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. பலரிடம் ரூபாய் 2000/= இற்கு மேற்பட்ட தொகை பெறப்பட்டுள்ளது. இதே குழுவைச் சேர்ந்த மேலும் சிலர் வசதி படைத்தோரினதும் உத்தியோகம் பார்ப்போரினதும் விவரங்களைத் திரட்டி வருகிறார்களாம். இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகிறது.

ஏற்கனவே இது போன்ற விபரங்களை திரட்டி தம் கைவசம் புலிகள் இயக்கத்தினர் வைத்துள்ளதோடு அதற்சேற்ப அதிகரித்த நிதி வசூலிப்பையும் செய்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தளபாடம் இல்லாத அலுவலகம்!

(திருமலை நிருபர்)

கதிரை, மேசை இல்லாமல் அதிகாரியொருவர் கடமையாற்ற முடியுமா? முடியும் என்று நடைமுறையில் நிரூபித்து வந்துள்ளது திருக்கோணமலைக் கல்விப் பிராந்தியம்.

மேற்படி அலுவலகத்தில் உதவிக்கல்விப் பணிப் பாளராகக் கடமையாற்றுபவர் எம்.எச்.ஏ. சமது. இவர் 4.4.1988 தொடக்கம் இதே அலுவலகத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளர் (கைவினை) பதவியில் கடமையாற்றி வருகிறார். இன்றுவரை இவருக்கு அலுவலகத்தில் கதிரையோ மேசையோ வழங்கப்படவில்லையாம்.

அலுவலகப் பணியாளர்களுக்குக்கூட கதிரை, மேசை வழங்கப்படும் இன்றைய நாட்களில் தான் நிர்க்கதியாக நிற்பதையிட்டு அலுவலகத்தில் முறையிட்ட போதெல்லாம், "நீங்கள் வெளிக்கள உத்தியோகத்தர்தானே: உங்களுக்கேன் கதிரை, மேசை?" என்ற பதிலே கிடைத்து வந்திருக்கிறது. ஆனால் இவரைத் தவிர்ந்த ஏனைய உதவிக்கல்விப் பணிப் பாளர்கள் அனைவருக்கும் அலுவலகத்தில் கடமையாற்ற கதிரை, மேசை வழங்கப்பட்டே உள்ளன.

மென்போக்காளரான இவரிடம் முரசு நிருபர் தொடர்பு கொண்டு "உங்கள் நிலை ஆச்சரியமாக இருக்கிறதே?" என்று கேட்டபோது "இன்னும் ஒரு வருடத்தில் நான் ஓய்வு பெற இருக்கிறேன். அப்போது பத்தாண்டு காலம் கதிரை மேசையில்லாமல் அலுவலகமொன்றில் கடமையாற்றிய அதிகாரி இலங்கையிலேயே நான் ஒருவனாகத்தான் இருப்பேன். அந்தப் பெருமை போதும்!" என்றார் அமைதியாக.

'கற்றோரால் கற்றோர் காய்வுறுகின்றனர்' என்று சொல்லலாமா?

# புதிய நடைமுறை அறிமுகம்!

ஓய்வூதியக்காரர்கள் ஒப்பந்த அடிப் படையில் அரச திணைக்களங்களில் மீள வேலைக்கமர்த்தப்படும்போது புதிய நடை முறைகள் கையாளப்பட உள்ளன.

இதனடிப்படையில் மீள வேலைபெறும் உத்தியோகத்தர் பெற்றுவந்த ஓவ்வூதியம் நிறுத்தப்படுவதோடு அவரால் பெறப்பட்ட பணக்கொடைகளும் கடனாகக் கருதப் படும்.

கூட்டுறவு, மாகாணசபைகள், உள்ளூ ராட்சி, சுதேச வைத்திய அமைச்சு தனது திணைக்களங்களுக்கு இவ்வாறான உத்தர வொன்றை 19.06.1997 திகதியிட்ட சுடித மொன்றின் மூலம் பிறப்பித்துள்ளது.

தற்போது மீளவேலைக்கமர்த்தப் பட்டுள்ள ஓய்வூதியக்காரர்கள் தமது சம்பளத்துடன் ஓய்வூதியமும் பெற்று இரட்டை வருமானக்காரர்களாக இருக் கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் புதிய உத்தரவில் மீளப் பணிக்கமர்த்தப்பட்டோரின் சம்பளம் புதிய சம்பள விகிதங்களுக்கமைய வழங்கப்படல் வேண்டும் என்பதும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

# தமிழ்ச்சேவை சீர்கேடு!

கிலக்கிலங்கைவாசிகளால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி களை எஃப்.எம். அலை வரிசையில் இப் போது தெளிவாகக் கேட்க முடியவில்லை. மாறாக இவ்வலைவரிசையில் இரைச்சல் களே பெரிதாய்க் கேட்கின்றன.

வர்த்தக சேவையிலும், தேசிய சேவை யிலும் இந்நிலை தொடர்கிறது. போதாக் குறைக்கு வர்த்தக சேவையின் தமிழ் அலை வரிசையில் தற்போது சிங்கள சேவை நிகழ்ச் சிகள் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன.

சிங்கள சேவை நிகழ்ச்சிகள் மட்டும் எக் காலமும்-எப்போதும் எந்த அலைவரிசையிலும் தெளிவாகக் கேட்பதற்குக் காரணம் என்ன? தமிழ் ஒலிபரப்புக்கு மட்டும்தானா இந்நிலை?

முன்பெல்லாம் நாட்டு நடப்புக்களையும் நல்லபல நிகழ்ச்சிகளையும் இந்நாட்டு தமிழ் பேசும் மக்கள் இலங்கை வானொலியில் தமிழ் அலைவரிசை மூலம் தெளிவாகக் கேட்க முடிந்தது. ஆனால் இப்போது இவை எல்லாம் கேள்விக் குறியாகவே உள்ளன.

எம்.சி. கலீல், கல்முனை-05.

# பஸ்சேவை இடை நிறுத்தம்!

அட்டன்-மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபையால், பொகவந்த லாவ- லொயினோன் பேரூந்துச் சேவை, கடந்த ஆறு மாதங்களாக இடை நிறுத்தப் பட்டுள்ளது.

இதன் காரணமாக லொயினோன், கெம்பியன் போன்ற தோட்டங்களிலிருந்து பொகவந்தலாவ நகரிலுள்ள பாடசாலை களுக்கு வருகின்ற பள்ளி மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்காளாகு கின்றனர். ஒவ்வொரு நாளும் தனியார் வாகனங்களுக்கு ஒருவர் 30/= செலவழிக்க வேண்டியுள்ளது. பேரூந்துக்கு 10/= மாத்திரமே. இதன் நிமித்தம் மேற்படி தோட்டப்புற வருமானம் குறைந்த தொழிலாளர்களுக்குப் பொருளாதார சிக்கலும் ஏற்படுகின்றது. இதுசம்பந்தமாக உடனடி நடிவடிக்கை எடுப்பார்களா? என்று இப்பகுதிவாழ் மக்கள் அங்கலாய்க் கின்றனர்.

சோ. ஸ்ரீதரன், பொகவந்தலாவ.

# 31ம் நாள் நினைவாஞ்சலி



**திருமதி சிவஞானம் செல்வரத்தினம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை-நாரந்தனை றோ.க.ம.வித்தியாலயம்.)
சரவணை மேற்கு, வேலணை.

**தோற்றம்-01.06.1933 மறைவு-19.06.1997**

கண்டியைப் பிறப்பிடமாகவும், சரவணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் செல்வரத்தினம் வவுனியாவில் காலமானார்.

இவர் அமரர் வெள்ளைச்சாமி பார்வதி தம்பதியரின் மகளும், இராசையா-சிவஞானத்தின் அருமை மனைவியும் சிவமலர், சிறி, பிரபா, அருள், திரு (ஜெர்மனி), தவமலர் (சுவிஸ்), சுகிர்தமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புக்கினிய தாயாரும், மகாதேவன், செல்வி, அருட்சோதி (மோகன்-சுவிஸ்), தயானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், கிரிஜா, நிரோசன், மதுரசன், சிந்துஜா, கீர்த்திகா, சாருஜா (சுவிஸ்) ஆகியோரின் பாசமுள்ள பாட்டியுமாவார்.

அன்னாரின் 31ம் நாள் அந்தியேட்டிக் கிரிகைகள் 20.07.97ல் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் (குட்ஷெட் றோட், இல. 15) நடைபெற உள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இத் துயரச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் ஆறுதல் கூறி துயரத்தில் பங்குகொண்ட நல்லிதயங்களை நன்றி உணர்வோடு நினைவில் கொள்கிறோம்.

தகவல்: ப. மோகன்- மருமகன் சுவிஸ்.சர்கான்ஸ்,
தொ.பே:- 081-7833111, 079-2160216

# பொதுவாகனங்களில் சிறைக்கைதிகள்!

மட்டக்களப்பிலிருந்து அம்பாறைவரை பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் சிறைக் கைதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் கூட்டிச் செல்கின்றனர். அத்துடன் பொதுமக்கள் முன்னிலையில் கைதிகள் விலங்கிட்டுக் கொண்டு வரப்படுகிறார்கள்.

சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளுடன் பயணிகளின் வாகனங்களில் ஏறிக்கொண்டு, கைதிகளை அழைத்துச் செல்லும் இடம்வரை வாகனங்களைப் பயணிகளுடன் எடுத்துச் செல்கின்றனர்.

இதனால் குறிப்பிட்ட பஸ்களை நம்பி விரைவாகப் பயணம் செய்யவுள்ள பயணிகள்பாடு அநாவசிய நேரத் தடங்கலால் முடங்கிப் போகிறது. தமிழ் சிறை அதிகாரிகளே இவ்வாறு முறைக்கேடாக நடந்து கொள்கின்றனர்.

பொதுப்போக்குவரத்து வாகனங்களில், பொதுமக்கள் முன்னிலையில் சிறைக்கைதிகளைக் கூட்டிச் செல்வது சிறைக் கைதிகளின் நலன்களிற்கு முற்றிலும் முரணானது என்பது தெரிந்ததே.

# எங்களை மறந்தது ஏன்?

நாங்கள் காலி நகரைச் சேர்ந்த தமிழ் பேசும் சமூகத்தினர். எங்கேயோ, எப்போதோ இலங்கையின் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் வர்த்தக சேவையை இரசித்துள்ளோம். ஆனால் இப்போதெல்லாம் தேசிய சேவையை மாத்திரமே கேட்கக் கூடியதாகவுள்ளது. அதுவும் சிலவேளைகளில் விளையாட்டு, கிரிக்கெட் என்று இடை மாற்றப்படுகிறது.

எங்களுக்கும் வர்த்தக சேவையின் இனிய பாடல்கள், கதைகளைக் கேட்க ஆசையிருக்காதா என்ன? தென் னிலங்கையில் கண்மூடிக்கிடக் கிறது? தென் மாகாணத்திலும் தமிழ்பேசும் மக்கள் இருப்பதை உணர வில்லையா? ஏன் சிங்கள மக்கள்தான் தமிழ் பாடல்களை ஆசையாகக் கேட்கவில் லையா? இலங்கையின் சிங்கள, ஆங்கில சேவைகள் இவ்வளவு துல்லியமாக, தெளி வாகக்கேட்கக்கூடியதாக இருக்கும் வேளை ஏன் இந்த தமிழ்ச்சேவைகளுக்கு மாத்திரம் அவல நிலை? சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கொஞ்சம் கவனித்து தகுந்த நடவடிக்கை களை எடுக்கமாட்டார்களா?

சியாம், அனீஸ், முனவ்வர், காகீர்,
கராபிடிய, காலி.

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

**(10.07.97)**



**செல்வன் சிற்சபேசன் சாரங்கன்**

நீர்வேலியைச் சேர்ந்த சிற்சபேசன்- சத்தியபாமா தம்பதியினரின் செல்வப்புதல்வன் **சாரங்கன்** (10.07.97)அன்று தனது 2 ஆவது பிறந்த நாளை நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, நோர்வே சித்தப்பா, ஹொலண்ட் மாமா, இலங்கையில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், அம்மப்பா, அம்மம்மா, பெரியமாமா, மற்றும், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கச்சிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நீர்வைக் கந்தன் அருளால் நலம் பல பெற்று- கலை பல கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: விஜி அத்தை(கொழும்பு)

# விளம்பரப் பகுதி




33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

**மலையாள மாந்திரீகம்**

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:-

**P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.**
**ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)**
**உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி**
**பி.கே. சாமி (J.D.G.A.N.)JP**
**NO.162, MAY FIELD ROAD**
**KOTAHENA, COLOMBO-13**

தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
பக்ஸ் இல-342464
பேஜர் சென்டர் இல- 588407
தொடர்பு கொண்டு இல- 972 இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
**COMPUTER INTERNET, NO.....**
**E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,**
**WWW LGO SLT.LK.**

நேரில் சந்திக்க-
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.



**பழுது பார்த்தல்**

வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்

**நியூ விக்ரேஸ்**
**New Victors**

40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
**T.P-594492**



**UNION**

யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
*Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)*

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411



# மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHOTHERAPHY)

மனோதததுவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை ந்க்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்).

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைபேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

**கொழும்பில் ஜூலை 20 முதல் 31 வரை**

Dr. P. Arumugam, Abamed Tourist inn, Bang Building No:10, Reclamation Road. (Entrance Bankshall St.. Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.

கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடி ஆகஸ்ட் 5, 6 ம் தினங்களில்**

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.

**கல்முனையில் ஆகஸ்ட் 9, 10, 11, 12, தினங்களில்**

T.M.M. பாமசியிலும் T.P. 065/29329
மற்ற நாட்களில் **Dr. P. Arumugam** No. 33, Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.



**A/L முடித்ததும் என்ன செய்வீர்கள்?**

**A/L பரீட்சை நன்றே அமைய எங்கள் வாழ்த்துக்கள்!**

**ஒரு திறனுள்ள கற்கைநெறி**

தற்போதைய கணனியுகத்தில் A/L முடித்ததும் உங்கள் காலத்தை வீணடிக்காதிருங்கள்.

நான்குமாத, முழுநேரக் கணனிக் கற்கைநெறி யொன்றில் சேர்ந்துகொள்வதற்கு உடனடியாக ஆவன செய்யுங்கள். நீங்களோ அல்லது உங்கள் பெற்றோரை அனுப்பியோ உடனடியாக உங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

- A/L பரீட்சையின் பின்னரே எமது கற்கைநெறி ஆரம்பமாகும்.
- முன்கூட்டியே பதிவுசெய்வோருக்கு விசேட கட்டணக்கழிவு வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு:

**BRIGHTON SYSTEMS INTERNATIONAL**
414A, Galle Road,
Wellawatte, Colombo 6.
Phone : 597409.


**7வது நினைவு தினம்**



**சிவானந்தன் சதீஸ்வரன்**
மலர்வு-01.11.1981 உதிர்வு-26.07.1990

உயிருக்குயிராகி
உள்ளம் நிறைந்து விட்ட
உத்தமனே 'சக்குட்டி'
உனை எப்போதினிக் காண்போம்?

—நினைவால் வருந்தும்—
இ. சிவானந்தன் தம்பதி(பெற்றார்)
சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்.
களுதாவளை-3, களுவாஞ்சிக்குடி.



படிப்பகம்

www.padippakam.com

# தங்கத்துரை கொலை!

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# புதிர்களும் — புரளிகளும்

திருமலை மாவட்ட எம்.பி.தங்கத் துரையின் கொலை தொடர்பாக அதிர்ச்சியான தகவல்கள் எல்லாம் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அனைத்தையும் அறிந்திருந்தும் மென்னவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவதிப்படுகின்றனர் கூட்டணியினர்.

தங்கத்துரை பலியான மறுநாள் வன்னியில் புலிகளின் குரல் வானொலி தெரிவித்த செய்தி மறைபொருள் கொண்டது.

"திருமலை மக்கள் கரும்புலிகள் தினத்தை நேற்று அனுஷ்டித்தனர்" என்று தெரிவித்தது. அதே நாள் வெளியான 'ஈழநாதம்' பத்திரிகையிலும் அதே செய்தி இடம்பெற்றிருந்தது.

திருமலையில் கரும்புலிகள் தினம் நடைபெற்றதாக முரசு செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் நடைபெற்ற இடம் தம்பலகாமம் என்பது தவறு.

**ஈச்சிலம்பற்றை உபஅரச அதிபர் பிரிவில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தான் கரும்புலிகள் தினம் நடைபெற்றது. தம்பலகாமம் புலிகள் இயக்கப் பொறுப்பாளரான பிரகாஷ், வெங்கடேஷ் ஆகியோரும் அதில் கலந்துகொண்டனர். அதனையே தம்பலகாமத்தில் நிகழ்ச்சியும் நடந்ததாக தவறுதலாக இடம்பெற்றிருந்தது.**

தங்கத்துரையின் சொந்த ஊர் மூதூரில் உள்ள கிளிவெட்டி. அங்கிருந்து கிட்டத்தட்ட பத்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இடம்தான் இலங்கைத்துறை முகத்துவாரம் பாடசாலை. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் ஒன்று.

தங்கத்துரையின் சொந்த பகுதியான மூதூரில் கரும்புலிகள் தினம் நடந்து கொண்டிருந்தபோது அவர் திருமலை நகரில் பாடசாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டிருந்தார்.

மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்தபோது மூதூர் எம்.பி.யாக இருந்தவர் தங்கத்துரை. அங்கு அரசமரமொன்றை வெட்டியெறிந்தது மூலமாக மூதூர் காவலர் என்று கூட்டணியினர் அவரை அழைத்தனர்.

அதே தங்கத்துரை திருமலை மாவட்ட எம்.பி.யான பின்னர் மூதூரில் அக்கறை செலுத்த தவறிவிட்டார் என்னும் குறை நிலவியது.

கடந்த மாத முதல் வாரத்தில் மூதூர் பள்ளிக் குடியிருப்பில் புலிகள் இயக்கத்தினரால் ஆசிரியர்களும், அதிபர்களும், உப அதிபர்களும் அழைக்கப்பட்டு கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அப்பகுதி புலிகளின் இராணுவப் பொறுப்பாளர் தேவா, கட்டை பறிச்சான் பொறுப்பாளர் சேகர் ஆகியோர் கூட்டத்தை நடத்தினார்கள்.

"ஆசிரியர்களும் அதிபர்களும் அனாவசிய விடுமுறைகள் எடுக்கக்கூடாது. மாணவர்களின் கல்வியை பாதிக்க இடமளிக்கலாகாது. எங்கள் சந்ததியின் கல்வி வளர்ச்சி முக்கியமானது என்பதை மறந்து விடாதீர்கள்" என்று தேவா கூறியிருக்கிறார்.

அத்தோடு தங்கத்துரை எம்.பி.யின் போக்கையும் தேவா குறை கூறினார். **மட்டக்களப்பு எம்.பி. ஜோசப் பரராஜ சிங்கம் போல தங்கத்துரையால் ஏன் செயற்படமுடியவில்லை? இங்கே வந்து செல்லக்கூட அவர் அக்கறை எடுப்பதில்லை. அவரை வரச் சொல்லுங்கள். மக்களுக்கு உதவினால் நாம் இடையூறாக இருக்க மாட்டோம்" என்று அக் கூட்டத்தில் தெரிவித்துவிட்டுப் போனார்களாம்.**

இது தவிர தங்கத்துரை தம்மை வந்து சந்திக்க வேண்டும் என்று திருமலை மாவட்ட புலிகளின் தளபதி. பல தடவைகள் தகவல் அனுப்பியிருக்கிறார்.

மட்டக்களப்பில் எம்.பி.கள் சிலரை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரவழைத்து புலிகள் பேசிய செய்திகள் தெரிந்ததுதான். அவர்களும் புலிகளின் அழைப்பைத் தட்டாது சென்றிருந்தனர்.

ஒரு எம்.பி தான் தனியாகச் சென்றால் ஏதாவது நடக்குமோ என்று தயங்கி தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு சென்று பவ்வியமாக பேசிவிட்டு திரும்பியதும் உண்டு.

தாங்கள் அவர்களிடம் என்ன எதிர் பார்க்கிறோம். அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் புலிகளின் பொறுப்பாளர்கள் அவர்களிடம் விளக்கி அனுப்பினார்கள்.

**முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யும் பிரதி அமைச்சருமான ஹிஸ்புல்லா மட்டும் புலிகளுடன் தனக்குள்ள தொடர்பையும், அவர்களுடன் பேசி சில அபிவிருத்திகளை செய்து வருவதையும் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். ஏனையோர் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள தயங்குகின்றனர்.**

ஆயினும், அரசியல் தீர்வு முயற்சிகளை பாராட்டியோ, அல்லது அரசியல் தீர்வு தொடர்பாக கொழும்பில் உள்ள கூட்டணித் தலைமை எடுத்துவரும் நிலைப்பாடுகள், விட்டுக் கொடுப்புக்கள் தொடர்பாகவோ மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம்.பி.கள் எவருமே இதுவரை வாய்திறந்து ஒருவார்த்தை சொன்னதில்லை.

கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி மாகாணம் என்று கூட்டணித் தலைமை உடன்பாடு கொண்டுள்ளது. நியாயமாகப் பார்த்தால் கூட்டணியின் கிழக்கு மாகாண எம்.பி.கள்தான் அது தொடர்பாக முன்னின்று பேசியிருக்க வேண்டும். அவர்கள் தமக்கும் அதற்கும் தொடர்பில்லாதது போலவே காட்டிக் கொள்கின்றனர் என்பது ஒன்றும் இரகசியமல்ல.

திரு.ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி கூட்டணித் தலைமையின் முடிவுகளை தனிப்பட்டரீதியில் ஏற்கவில்லை என்று செய்திகள் வெளியாகின. அதனை அவர் மறுக்கவும் இல்லை.

**தங்கத்துரை மட்டும் புலிகளின் அழைப்பை ஏற்கவில்லை. தனது நடவடிக்கைகள் தொடர்பாக கட்சிக்குள் உள்ள தனது எதிர் முகாமைச் சேர்ந்தவர்கள் பல தகவல்களை புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ளனர் என்று அவருக்கு தெரியும். நேரில் சென்றால் அது பற்றிய கேள்விகள் எழுப்பப்படும். மழுப்ப முடியாது என்று நினைத்தே சந்திப்புக்களுக்கு செல்லாமல் இருந்தார்.**

புலிகளின் தகவல் தனக்கு கிடைக்க வில்லை என்பதுபோல காட்டிக் கொண்டிருந்தார்.

**அதே சமயம் ஏனைய தமிழ்க் கட்சி களுடன் நெருக்கமானார் தங்கத்துரை. கிழக்கில் முஸ்லிம்களுக்கான தனி மாகாணக் கோரிக்கையை ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஏற்க வேண்டும் என்று எட்டுக் கட்சிக் கூட்டத்தில் தங்கத்துரை முன்னின்று வாதிட்டதோடு, தொடர்ந்து இணக்கம் காணச் செய்யும் முயற்சிகளிலும் ஈடுபட்டார்.**

கொழும்பில் இ.தொ.கா. அலுவலகத்தில் நடைபெற்ற எட்டுக் கட்சிகள் கூட்டத்தில் தங்கத்துரை புலிகள்மீதும் சாடித்தான் பேசினாராம்.

1988ல் சென்னையில் புலிகளுக்கும் முஸ்லிம் ஐக்கிய முன்னணிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுப் பற்றிக் குறிப்பிட்ட தங்கத்துரை, புலிகள் மட்டும் விட்டுக் கொடுக்கவில்லையா, அவர்கள் கொடுக்க சம்மதித்ததைவிட நாம் ஒன்றும் கூடுதலாகக் கொடுக்கவில்லை" என்று கூறினாராம்.

காணி அதிகாரத்தில் நெளிவு சுழிவான விட்டுக் கொடுப்பிலும் கூட்டணியின் கிழக்கு மாகாண பிரதிநிதிகளில் சம்பந்தனும், தங்கத்துரையுமே முன்னணியில் நின்றனர்.

கூட்டணியின் செயற்குழுக் கூட்டங்களில் யார் என்ன பேசுகிறார்கள் என்ற விபரங்கள் எல்லாம் புலிகளுக்கு விலாவாரியாக கிடைத்தி

## அரசு வெளியிடும் திடீர் அறிவிப்புக்கள்

## மொழி அமுலாக்கல்–தீர்வு யோசனை கருத்தரங்கு

ருக்கின்றன. ஒரு முக்கிய பிரமுகர் மூலம் அவை பெறப்பட்டனவாம். அதுபோல எட்டுக் கட்சிக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களும் புலிகளின் காதுகளை எட்டினவாம்.

கடைசியாக சுதந்திர தின பொன்விழாக் கமிட்டியில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் சார்பாக தங்கத்துரை இடம்பெற்றதும் திருமலை மாவட்ட புலிகளுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்திவிட்டது.

தலைமையிடம் அனுமதி கேட்டனர். 'போடலாம்' என்று பச்சைக்கொடி காட்டப்பட்டது. முன்னரே தகவல்கள் திரட்டப்பட்டிருந்தமையால் காரியத்தை முடிக்க வசதியாகிவிட்டது.

**பின்னர் நிஜன் என்பவர் செய்த தவறுதான் நடவடிக்கையில் ஈடுபட்ட பிஸ்டல் குழுவினர் மாட்டிக்கொள்ள காரணமாகியது. ஆனாலும் பிஸ்டல் குழுவில் உள்ள ஒருவர்தான் பிடிபட்டிருக்கிறார். நிஜனும், பாபுவும் தகவல் திரட்டிக் கொடுத்தவர்களே தவிர பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஜெரோம் என்று அழைக்கப்படும் இனியவன்தான் பிஸ்டல் குழு உறுப்பினர். மற்றொருவர் தப்பிவிட்டார். அவரது பெயர் குமார்.**

குமார் பிஸ்டலால் குறிபார்த்து சுடுவதில் படு கெட்டிக்காரர். ஜெரோம் கைக்குண்டை உருட்டி வெடிக்கவைத்ததும் பதுங்கிக் கொண்டார். பின்னர் தங்கத்துரையை நெருங்கி பிஸ்டலால் வெடிவைத்தவர் குமார் தான்.

கைக்குண்டு வெடிப்பால் ஏற்பட்ட அதிர்வுக்கு இடையிலும், பரபரப்புக்கு இடையிலும் தங்கத்துரைமீது குறிதவறாமல் சுட்டு முடித்திருக்கிறார் குமார்.

மற்றொரு தகவலும் உண்டு; சம்பவம் நடந்த அன்றுதான் கொழும்பில் இருந்து திருமலை வந்திருக்கிறார் தங்கத்துரை. நிச்சயமாக பாடசாலை விழாவுக்காக வந்தே தீருவார் என்ற தகவல் உள்ளேயிருந்துதான் கிடைத்ததாம்.

**தங்கத்துரையுடன் பலியானவர் பொறியியலாளர் ரட்ணராஜா. அவரது மைத்துனர் புலிகளின் அனுதாபி. ரட்ணராஜாவுக்கே அது தெரியாது. ஆனால் ரட்ணராஜாவிடம் பேச்சோடு பேச்சாக தங்கத்துரையின் வருகை பற்றிய தகவலைக் கறந்த மைத்துனர் அதனை புலிகளுக்கு தெரிவித்துவிட்டார்.**

சம்பவம் நடைபெற்ற அதேதினத்தன்று ரட்ணராஜாவின் மைத்துனரும், பிஸ்டல் குழுவைச்



சேர்ந்த குமாரும் தங்கத்துரை வழக்கமாக தங்கியிருக்கும் இடத்துக்கு சென்றுள்ளனர். தங்கத்துரைக்கு எத்தனைபேர் பாதுகாப்பு என்ற இறுதிக் கட்ட கண்காணிப்பை நடத்த நோட்டமிட்டனரா, அல்லது வாய்ப்புக் கிடைத்தால் அங்கேயே தீர்த்துக் கட்ட நினைத்தனரா என்பது தெரியவில்லை.

தங்கத்துரை பற்றிய தகவல் திரட்டிய நிஜன் திருமலை துறைமுக அபிவிருத்தி சபையில் வேலை செய்தவர். இவரது தந்தையாரும் அங்குதான் பணிபுரிகிறார்.

**நிஜனின் தந்தையாரின் நெருக்கமான நண்பராம் கூட்டணியின் திருமலைக் கிளைத் தலைவர் ஈழத்து நாதன். திருமலைக் கிளைக்கு தங்கத்துரையை கண்ணிலும் காட்டக்கூடாது. சம்பந்தனைத்தான் பிடிக்கும். இத் தகவல்** திருமலையில் லேசாக கசியத் தொடங்கியதும்தான் தங்கத்துரை கொலை தொடர்பாக விசாரணை ஆணைக்குழு வைக்குமாறு திருமலைக் கிளை அவசரமாக ஒரு அறிக்கைவிட்டது. தலைமையே கேட்காத போது, தலையிருக்க வால் ஆடியது அதனால்தான். தங்களை நிரபராதிகளாக சித்தரிக்கக் காட்டிய அவசரம்தான் அது.

**இதேவேளை சம்பந்தனின் மனைவிக்கு இந்தியாவில் சத்திர சிகிச்சை செய்ய குறித்த திகதி இயல்பாக நடந்ததாக, அல்லது தங்கத்துரைக்கு குறிவைக்கப்பட்ட நாள் யார் மூலமாவது கசிந்ததால் செய்யப்பட்ட முன்னெச்சரிக்கை ஏற்பாடா என்பது சிலருக்கு சந்தேகமாக உள்ளதாம்.**

நிஜனின் தந்தைக்கு ஏதாவது ஒரு வழியில் தகவல் கசிந்து அது அவர் நண்பர் மூலமாக சம்பந்தன் காதுக்கு எட்டியிருக்கலாமோ என்றொரு சந்தேகம். ஆனால் இதனை உறுதிப் படுத்த முடியவில்லை என்பதால் விசாரணைகள் மூலமே வெளிக் கொணர வேண்டும்.

புலிகள் காரணம் என்பதை கண்டு பிடித்ததோடு பொலிசார் விசாரணைகளை சுருக்கிக்கொண்டனர். கூட்டணித் தலைவர்களிடம் விசாரணைகளே நடத்தப்படவில்லை.

முன்னர் காணி அதிகாரி பீரிஸ் சுட்டுக் கொல்லப்பட்டபோது திருமலையில் உள்ள தமிழ்க் கட்சி அலுவலகங்கள் சோதனையிடப்பட்டன. சந்திரகுமார் எம்.பி.யின் அலுவலகம் மீதும் பொலிசாரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டது.

ஆனால் தங்கத்துரையை கூட்டணியின் திருமலைக் கிளை பதவி விலகுமாறு கோரி வந்தது. சம்பந்தனுக்கும் அவருக்கும் பனிப்போர் இருந்தது. அப்படியிருக்கையில் தகவல்கள் அவ்வழிகளில் கசிந்ததா இல்லையா என்பதை கண்டறிய பொலிசார் முயலாதது ஏன்? என்பதும் மக்கள் மத்தியில் அலசப்படும் கேள்விகளில் ஒன்றுதான்.

எனினும் தகவல்கள் புகார்கள் சென்றிருக்கலாமே தவிர, இவர்கள் தூண்டித்தான் புலிகள் செய்தனர் என்பது சரியாக இருக்காது. ஏனெனில் புலிகள் தங்கள் சொந்த அனுபவங்கள், சூழ்நிலைகள் என்பவற்றை பொறுத்தே முடிவுகளை எடுக்கின்றனர்.

இதேவேளை கூட்டணியினருக்கு உள்ள சங்கடம் யாதெனில், தங்கள் செயலதிபர் சம்பந்தன்மீதும் சந்தேகம் வந்துவிடக்கூடாது.

அதைவிட முக்கியம் துரோகிகள் என்று பட்டம் சூட்டலை ஆரம்பித்துவைத்த கூட்டணியினரே அந்தப் பட்டத்தை சுமக்க வேண்டியதாகிவிட்டதே என்பதை மக்கள் அறிந்துவிடக்கூடாது என்பது தான். அதனால்தான் தாமே முன்னின்று சந்தேகங்களை கிளப்ப முற்பட்டனர். சட்ட நுணுக்கமான தந்திரம் இது.

**புலிகள் சில நடவடிக்கைகளுக்கு உரிமை கோரமல் இருப்பதுண்டு. தந்திரோபாயரீதியில் அது அவர்களுக்கு அவசியம். ஆனால் ஒருபோதும் தாம் செய்யாத செயலை தம்மீது சுமத்துவதை பார்த்துக்கொண்டு இருக்க மாட்டார்கள். முதலில் மறுப்பு விடுவர். பின்னர் தம்மீது பழிபோடுவோரை ஒரு வழி பண்ணி விடுவர்.**

அதேசமயம் மறுப்பு விடுவதற்காக குறிப்பிட்ட சம்பவத்தில் பலியானவரை போலித்தனமாக பாராட்டுவதும் கிடையாது. அமிர் கொலையை புலிகள் முதலில் தந்திரோபாய காரணங்களுக்காக மறுத்தனர். ஆயினும் அமிர் தொடர்பாக பாராட்டு எதனையும் கூறவேயில்லை.

இதேவேளை சில தமிழ்க் கட்சிகள் தம்மால் பலியான பிரமுகர்களை பாராட்டியதோடு அனுதாபக் கூட்டங்களைக் கூட நடத்தியதுண்டு. தந்திரோபாய காரணங்களுக்காக மறுப்பது என்பது வேறு. மக்களையே முட்டாள்களாக்கும் விதமாக நடந்து கொள்வது வேறு.

இன்று தங்கத்துரைக்கு தண்டனை விதிக்கப்பட்டது தம்மால்தான் என்பதை மக்கள் அறிவது தொடர்பாக புலிகளுக்கு பாதிப்பு எதுவும் இல்லை. ஆனால் உத்தியோகபூர்வமாக அதனைத் தெரிவித்தால் அரசு அதனை சாதகமாக பாவிக்கும் என்பதால் தவிர்த்துள்ளனர்.

ஆனால் மறைமுக உணர்த்தல்களை காட்டியே உள்ளனர்.

**இதேவேளை திருமலை குச்சவெளியில் தங்கத்துரை கொலையை மறுத்து புலிகள் சுவரொட்டி ஒட்டியதாக அப்பட்டமான பொய் ஒன்று பரப்பப்பட்டது. அவ்வாறு எந்தச் சுவரொட்டியும் ஒட்டப்படவேயில்லை.**

திருமலை மாவட்டத்திலேயே மக்கள் தொகை குறைந்த இடம் குச்சவெளி. இடம் பெயர்வுகள் மூலம் மக்கள் வெளியேறிய பகுதி அது. அங்கு சுவரொட்டி போடும் அவசியமில்லை. புலிகள் மறுப்பதாக இருந்தால் உலகம் அறிய தலைமைப்பீடமே மறுப்பு வெளியிட்டிருக்கும்.

அதுதவிர, மக்களிடம் அதிருப்தி ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கை என்றால்கூட திருமலை நகர் மக்கள் அறியக்கூடியதாக நகருக்கு வெளியே தமது நடமாட்டம் உள்ள பகுதியிலோ, அல்லது திருமலை மாவட்டத்தில் தங்கத்துரை பிறந்த மூதூர் பகுதியிலோ சுவரொட்டி ஒட்டியிருப்பர். ஏன் துண்டுப்பிரசுரம் கூட வெளியிட்டிருப்பர். அங்கெல்லாம் புலிகளின் கட்டுப்பாட்டிலும் பல பகுதிகள் உள்ளன.

குச்சவெளி சுவரொட்டிப் புரளி யாராலோ திட்டமிட்டு கிளப்பப்பட்டது. பத்திரிகை ஒன்றிலும் வெளியாகி இருந்தது. புலிகளின் பெயரில் அப்படி ஒரு சுவரொட்டி ஒட்டுவதற்கு நினைத்த யாரோதான் அது முடியாமல் போனதால் புரளியைக் கிளப்பியிருக்கிறார்கள்.

தங்கத்துரை கொலையை அடுத்து கூட்டணியினர் அரசியல் தீர்வு யோசனைகளை பகிரங்கமாக முன்புபோல ஆதரிக்க இயங்குவார்களோ என்று அரச தரப்பு யோசிக்கிறது.

ஜனாதிபதியே தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்ததோடு, விசாரணை விபரங்களை விபரமாகக் கேட்டறிந்தாராம். அது போதாது என்று தனது செயலகத்தில் இருந்தே முக்கிய அதிகாரிகளை திருமலைக்கு அனுப்பி விசாரணைகள் பற்றி ஆராய்ந்திருக்கிறார்.

இதன் பின்னர் தங்கத்துரை குடும்பத்தினரை அழைத்து கைது செய்யப்பட்டவர்கள் மூலமே உண்மையை எடுத்துக் கூற பொலிசார் முயன்றனராம். தங்கத்துரையின் சகோதரர் திரு.பாக்கிதுரை தான் வர முடியாது என்று மறுத்துள்ளார்.

**கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் 'அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு தொடர்ந்து ஒத்துழைப்போம்' என்று அறிக்கை விடுத்திருக்கிறார். ஜனாதிபதியும் அரசும், தங்கத்துரை கொலையில் காட்டிய கரிசனம் கூட்டணி வட்டாரங்களுக்கு உள்ளூர திருப்தியளித்துள்ளன என்பதையே இது காட்டுகிறது.**

இது ஒரு புறமிருக்க, தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பாக ஜனாதிபதி விடுத்துள்ள உத்தரவை தமிழ்க் கட்சிகள் பல பாராட்டியுள்ளன.

அரசியல் தீர்வு முயற்சிகள் தள்ளிப் போகின்றன என்று வெளியுலகிலும்; உள்நாட்டிலும் ஏற்பட்டுவரும் அபிப்பிராயம் தொடர்வாக அரச தரப்பு கவலை கொண்டிருப்பதையே ஜனாதிபதியின்' அறிவித்தல் பிரதிபலிக்கிறது.

தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்து என்பது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஏற்கப்பட்டது. ஆனால் கடந்த பத்து வருடங்களாக மொழி அமுலாக்கல் என்பது கண்துடைப்பாகவே இருக்கிறது.

**பொது ஜன முன்னணி அரசு தமிழ் மொழிக்கு முன்னுரிமை பற்றிப் பேசுவது இது முதல் தடவையும் அல்ல. பதவிக்கு வந்தவுடன் தமிழ்மொழி அமுலாக்கலை கவனிக்கும் ஆணைக்குழுவொன்றையும் புதுப்பித்தது. அப்போது பெரிய செய்தியாக பேசப்பட்டது. வரவேற்புக்களும் தெரிவிக்கப் பட்டன. இப்போது அந்த ஆணைக்குழுவின் சத்தமே இல்லை.**

அதுதவிர யாழ்ப்பாணத்தை யாப்பா பட்டுன, என்று குறிப்பிட்டு அது விடுவிக்கப் பட்ட செய்தியை பிரதிப்பாதுகாப்பு அமைச்சரிடம் இருந்து பெற்றுக் கொண்டதும் ஜனாதிபதி தான். மொழி அமுலாக்கல் ஒரு புறமிருக்க, தமிழ் மக்களின் முக்கிய நகர் ஒன்றே பெயர் மாற்றப்பட்டதுதான் சோகம்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசுகூட மொழி அமுலாக்கல் பற்றி பரபரப்பான அறிவிப்புக்களை வெளியிட்டிருந்தது.

இவையெல்லாம் தமிழ் பேசும் மக்கள் தொடர்பாக அரசு நல்லெண்ணம் கொண்டிருக்கும் அடையாளங்களாக காட்டப்பட்டனவே தவிர, தமிழ் மொழி அமுலாக்கல் என்பது கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையிலேயே இருக்கிறது.

இந் நிலையில் ஜனாதிபதியின் தமிழ் மொழி அமுலாக்கல் உத்தரவு அரசியல்தீர்வு முயற்சிகளின் இழுத்தடிப்பை பற்றிய அப்பிப்பிராயங்களை பின்தள்ளும் பிரசார தந்திரமாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுவது நியாயமே.

இன்றைய யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் என்று வெளியுலகில் புலிகளின் பிரசாரம் தீவிரமாகிவருவதால் தமிழ் பேசும் மக்களின் நலன்கள் தொடர்பாக தனக்கு அக்கறை இருப்பதாக காட்டுவதிலும் அரசு கவனம் செலுத்துகிறது.

பொது ஜன முன்னணி பா.உக்களுக்கு அரசியல் தீர்வு யோசனை பற்றி விளக்க கருத்தரங்கு நடத்தப்படும் செய்திகளுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது.


**அரசியல் தீர்வு யோசனையே இன்னமும் இறுதியான வடிவம் பெறவில்லை. முக்கிய அடிப்படை விடயங்களில் முடிவுகள் செய்யப் படவில்லை. இந் நிலையில் எதனை விளக்க கருத்தரங்கு? என்பதுதான் குழப்பமாக உள்ளது.**

அரசியல் தீர்விலும், தமிழ் பேசும் மக்கள் விடயத்திலும் முன்னேற்றகரமான நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று வெளியே ஒரு பிரமையை ஏற்படுத்த இவ்வாறான அணுகுமுறைகள் உதவலாம்.

ஆனால் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமானால், ஆர்ப்பாட்டமான செய்திகளுக்கு பதிலாக ஆரோக்கியமான முடிவுகள் உடனடியாக செய்யப்படுவதே அவசியம். அதற்குரிய தருணத்தை கைவிட்டு, தமக்கு சாதகமான ஒரு தருணத்துக்காக புண்ணுக்கு புனுகு பூசும் முயற்சிகளை அரசு செய்கிறதோ என்ற சந்தேகம் மக்களிடம் எழாமலில்லை. **ஆனால் தமிழ் கட்சிகளும், சில விமர்சகர்களும் தமது பாராட்டுகள் மூலம் இவ்வாறான தந்திரங்கள் பயன்தரக் கூடியவை என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.** ■

நாரதர்

# அதிரடி அப்பாத்துரை



**அவர் ஒரு முன்னாள்** இயக்க உறுப்பினர். மூதூரைச் சேர்ந்தவர். அந்த இயக்கத்தினர் தற்போது ரெண்டு எழுத்தாருடன் இணைந்திருப்பதால் அவர்களுடன் தொடர்புண்டு. சம்ப அசம்பாவிதம் நடந்த பின்னர் ரெண்டு எழுத்தாரை சந்தித்து அவரும் சிலரும் கதைத்தனராம். "20 வருடத்தின் பின்னர் மூதூரில் இருந்து ஒருத்தர் சபைக்குப் போக சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த வாய்ப்பு பறிபோனது தான் கவலை" எண்டு இவை சொல்ல, ரெண்டு எழுத்தார் மளமளவென்று தங்கள் செயலுக்கான காரணத்தையும் குற்றச் சாட்டையும் முன்வைத்தவையாம். பெண்கள் விஷயத்தில் அண்ணர் அப்படி இப்படியிருப்பவர் என்பது பிரசித்தம். அது வேறுவிடயம். ஆனால் வேலை தேடியும், இட மாற்றம் கேட்டும் போனவர்களையும் உடல் தட்சணை கேட்டதுதான் பெரும் கொடுமையாம். அப்படிப் பாதிக்கப்பட்ட நர்ஸ் ஒருவர் ரெண்டு எழுத்தாரிடம் புகாரிட்டவராம். பொலநறுவையிலிருந்து மூதூருக்கு மாற்றம் எடுத்துத்தரச் சொல்ல, ஒரு இரவுக்கு அவரை தான் எடுத்துக்கொள்ளக் கேட்டவராம் அண்ணாச்சி. இதனால்தான் அண்ணாச்சியின் மனைவி அவருடன் கதை பேச்சு இல்லாமல் அயல் நாட்டில் இருந்தவ. பிள்ளைகளுடன் மட்டும்தான் பேச்சு. கொரியா வேலைவாய்ப்பு மற்றும் கோட்டாக்கள் ஒருவர் மூலமாக கொளுத்த லாபத்தில் விற்கப்பட்டதாம். இப்படியாகப் பல புகார்களை பட்டியலிட்டவையாம். இது பரவியதால்தான் அண்ணாச்சி பிறந்த மூதூரில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தும் முயற்சி கைவிடப்பட்டதாம்.

**வெளிநடப்பு** நாடகத்திலகூட நீலமானவர் ஆஜராகவில்லையாம். நாடகத்தை முடிச்சுப்போட்டு சபை உணவு விடுதியில் இருந்து கூட்டான கட்சி பிரதிநிதிகள் அதிகாரத்தரப்பாரை தாஜா பண்ணிக்கொண்டிருந்தவை. இதெல்லாம் பொலிட்டிக்ஸ் எண்டு விளக்கம் கொடுத்தவை. சனம் பாவம்!

வெளிநடப்பு எண்டால் பெரிய விஷயம்; மன்றைவிட்டே போய்விட்டினம் என்டெல்லாம் நினைக்கும். ஆனால் இவை மன்றில்தான் இருந்தவை. பாதுகாப்புக்கு பிரதிப் பொறுப்பானவரையும் உள்ளேயே சந்தித்து சாம்பிராணி போட்டவையாம். "வலிக்காமல்தானே அடித்தனாங்கள். அதுகூட நொந்தால் வருடிவிடுகிறோம்" எண்டு சொல்ல வேண்டாமோ. அதுக்குத்தான் சந்திப்பு.

**தங்களுக்கு ஒரு கவனிப்பும்** கிடைக்கவில்லை எண்டதால் அதிகாரத் தரப்பாரை புரட்சிகரமாக முன்னணியில் நின்று விமர்சித்தவர் அந்த இயக்கத் தலைவர். பின்னர் மீன்பிடி ஆலோசகர் பதவி கிடைத்தாலும் கிடைத்தது விமர்சனங்களை மூட்டை கட்டி வைச்சுப் போட்டு ஐஸ் வைப்பில் குதிச்சிருக்கிறார். மொழி அமுலாக்கல் உத்தரவு தீர்வு முயற்சியில் படிக்கல்லாம். செப்பியுள்ளார். பின்னணி அறியாமல் இப்படியோ ஐஸ்வைப்பது? மற்றொரு வழமாகப் பார்த்தால்! அவர் சொல்வது சரிதான்; நேற்று கட்சிச் செயலாளர், இன்று ஆலோசகர்.. நாளை... ஹாஹாஹா...! என்ன கனவில் இருக்கிறார் என்பது அந்த ஆண்டவனுக்கும் தெரியாது, அவரது தோழர்களுக்கும் தெரியாது. ஆனால் அவருக்கு மட்டும்தான் தெரியும். இன்னும் மேலே போக படிக்கல்லுகளை எண்ணத் தொடங்கிப்போட்டார் என்பது மட்டும் கிளியர். அடுத்தவன் பதவியில் இருந்தால், பதவி கிடைத்தால்தான் எங்கள் கட்சித் தலைவர்கள் கேலி செய்வினம். தங்களுக்குக் கிடைத்தால் மட்டும் இலட்சிய விளக்கம் சொல்லிப்போடுவினம். எல்லாக் கல்லும் இருக்கட்டும், அந்த சப்புமல்புர பெயர்க்கல்லைக்கூட இன்னும் அகற்றேல்லைத் தெரியுமோ?

**அடுத்தது சம்பந்தமானவர்தானாம்.** யார் மூலமாவது ரெண்டு எழுத்தாரின் கிளியரன்ஸ் வாங்குவதற்கு அயல் நாட்டிலிருந்தே உத்தரவு போட்டுள்ளாராம். திருவானமலையில் உள்ள சில பிரமுகர்கள் 'கிளியரன்ஸ்' முயற்சியில் இறங்கியிருக்கினம். தங்கத்தார் பற்றிய பல உள் தகவல்களை முன்னர் ரெண்டு எழுத்தாருக்கு மாதாந்த அறிக்கைபோல அனுப்பிவைத்ததும் அவைதானாம். சம்பந்தமானவரை நம்ப அவை தயாரில்லை எண்டு தகவல்.

**யாழ்ப்பாணத்தில்** நடந்த கதை இது. சைக்கிளில் வந்து இறங்கினார் ஒரு வயதானவர். அவர் கையில் பெரியதொரு சங்கிலி. சைக்கிளைவிட்டு இறங்கியவர், ஒரு கம்பத்துடன் சைக்கிளை சாத்திப்போட்டு சங்கிலியால் கட்டிப் பெரிய பூட்டு ஒன்றை மாட்டினார். "என்ன அண்ணே இப்படி பெரிய சங்கிலி போடுறியள்?" எண்டு கேட்க, "தம்பி பூட்டை உடைத்தே சைக்கிளைக் கொண்டு போறாங்கள். நான் ஒண்டும் இளிச்சவாயனல்ல. என்ரை அந்தக்கால 'றலி' சைக்கிள். நானோ விடுவேன்?" எண்டு சொல்லிப்போட்டு போனாராம். யாழில் சைக்கிள் திருட்டு அமோகமாக நடக்குதாம். காக்கி உடையினர் கண்டு கொள்வதே இல்லையாம்.

**"கொழும்புக் கைதுகள்,** தடுத்து நிறுத்த நடவடிக்கை, தமிழ்க் கட்சிகள்..." எண்டும் எட்டி எட்டி சொன்ன செய்தியை பத்திரிகைகளில் படிச்சுப்போட்டு மடிச்சுவைக்க முன்னர் "கொழும்பில் தொடர்கைது. குழந்தைகள், பெண்கள் விடுதியை விட்டு கீழே இறக்கப்பட்டு நடுரோட்டில் நிறுத்தம்." எண்டு செய்தி கேட்டதும் எனக்கொரு சந்தேகம்! "இவை எந்தக் கொழும்பு பற்றிப் பேசினவை? 'கல்யாணப் பரிசு' படத்திலை நீங்கள் எந்த மன்னார் அண்ட் கொம்பனியைச் சொல்லுறியள்?" எண்ட பகிடிமாதிரித் தானோ இதுவும்? ஒரு நாள் வெளிநடப்பு நாடகத்தையெல்லாம் பெரிசாகக் காட்டிப் போட்டு வீட்டுக்கு போயிடுவினம். விடுதிகளில் உள்ள எங்கடை ஆட்கள் தினமும் வெளிநடப்பு செய்ய வைக்கப்படுவது பற்றி கவலைப்பட எங்கே நேரம்? இதையெல்லாம் சொன்னா தீய சக்திகள் அவதூறு கிளப்புவதாக சிலருக்கு கெட்ட கோபம் வரும். மூச்!

எங்கோ படித்து மனதில் பதிந்த பொன்மொழி.

**"உண்மை பாரமானது!**
**அதனால்தான்**
**அதைச் சுமக்க**
**அதிகம்பேர்**
**ஆசைப்படுவதில்லை!"** ■


படிப்பகம்

www.padippakam.com




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**அற்புதன் எழுதுவது**

# வன்னிக் காட்டில் அநுரா பண்டாரநாயக்கா

## அரசியல் தொடர்

### ஜனாதிபதித் தேர்தல்

மாகாணசபைகளுக்கான தேர்தல்களை அடுத்து, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் ஆரம்பித்தன.

வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு மட்டுமல்லாமல் நாடெங்கும் மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தன.

வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவோர் துரோகிகள் என்று புலிகள் அறிவித்தனர்.

அதுபோல ஏனைய மாகாணசபைகளில் போட்டியிட்டவர்களை ஜே.வி.பி. துரோகிகளாக கணித்து வேட்டையாடத் தொடங்கியது.

தென்னிலங்கையில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பலர் ஜே.வி.பி.யினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலும் ஜே.வி.பி.யினரின் அச்சுறுத்தல்கள் மத்தியிலேயே நடைபெறவேண்டியிருந்தது.

1989ம் ஆண்டு பெப்ரவரி 3ம் திகதியுடன் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரின் பதவிக்காலம் முடிவடைய இருந்தது.

அதனால் 1988 டிசம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆரம்பம் முதலே கடுமையாக எதிர்த்துவந்தவர் அன்றைய பிரதமர் பிரேமதாசா.

ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மூன்றுபேர் விரும்பினார்கள். பிரேமதாசா, காமினி திசநாயக்கா, லலித் அத்துலத்முதலி ஆகியோரே அந்த மூன்றுபேர்.

இவர்களில் காமினியும், லலித்தும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் சிஷ்யர்கள்.

அவர்கள் இருவரில் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராவதையே ஜே.ஆர். விரும்பியதாகக் கூறப்பட்டது.

### பிரேமதாசா

பிரேமதாசா ஏறக்குறைய எம்.ஜி.ஆர் மாதிரியான அரசியல்வாதி. கட்சியின் கீழ்மட்டத்தில் இருந்து படிப்படியாக தன் கடும் உழைப்பால் முன்னுக்கு வந்தவர்.

இலங்கை அரசியலில் அதுவரை தலைவர்களாக இருந்தவர்கள் அரசியலில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள தங்கள் குடும்பப் பெருமைகளையும், கற்ற உயர்கல்விகளையும் முன்னிறுத்தி தங்கள் தகுதியையிட்டு மக்களைப் பிரமைகொள்ள செய்யவே முயன்றனர்.

நான் இன்னாருடைய மகன், இன்னாருடைய பேரன், இன்னாருடைய மருமகன் என்று கூறுவதன் மூலமாக தங்களைவிட தங்கள் குடும்பப் பின்னணியைத்தான் அவர்கள் நம்பினார்கள்.

அரசியலில் உயர் பதவி வகிப்பது என்பது உயர்குடியில் பிறந்த, உயர் தனவந்தர்கள் மற்றும் கனவான்களின் வாரிசுகளால் மட்டுமே முடியும் என்று கருதப்பட்டது. மக்களை அறிந்திருப்பதைவிட நான்கு கல்விப் பட்டங்களை அணிந்திருப்பதுதான் நாட்டை கட்டியாளும் தகுதி என்பது எழுதாத சட்டம் போல இருந்தது.

இந்த இலக்கணங்களை பிரேமதாசாவால் உடைக்க முடிந்தது பெரும் சாதனைதான்.

பேராசிரியர் சிவத்தம்பி பிரேமதாசா பற்றி பின்வருமாறு கூறியது பொருத்தமானது: **"சிங்களத்தில் சிந்தித்து, சிங்களத்தில் பேசும் முதலாவது சிங்கள தலைமைத்துவம் பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்பிருந்த சிங்களத் தலைவர்கள் ஆங்கிலத்தில் சிந்தித்து சிங்களத்தில் பேசினார்கள்."**

பிரேமதாசாவின் பலம் அதுதான். பிரேமதாசாவின் கொள்கைகள், அணுகுமுறைகள் தொடர்பான முரண்பாடுகள் உள்ளவர்கள்கூட, பிரேமதாசாவால் உருவாக்க முடிந்த மக்கள் செல்வாக்கை குறைத்து மதிப்பிட முடியாது.

இன்றுபோல் அல்லாமல் தென்னிலங்கை அரசியலில் ஜாம்பவான்கள் பலர் அன்றிருந்தனர். ஐக்கிய தேசியக்கட்சிக்குள்ளும் இருந்தனர். அந்த மலைகளோடு மோதி முன்னுக்கு வருவது என்பது லேசுப்பட்ட காரியமா?!

இப்போதுகூட பிரேமதாசாவின் நாமம் அவரது அரசியல் எதிர் முகாமில் இருப்பவர்களுக்கு அச்சுறுத்தலாகத்தான் இருக்கிறது என்பதையும் தற்போதைய நடப்புக்கள் காட்டிவருகின்றன.

பிரேமதாசா உயிருடன் இருந்தபோது அவருக்கு எதிராக கடும் நிலைப்பாடு கொண்டிருந்தவர்கள்கூட இன்று அவரது நிர்வாகத்திறன் குறித்து வியந்து பேசுவதும் குறிப்பிடத்தக்கது.

பிரேமதாசா உயிருடன் இருந்தவரை தென்னிலங்கை அரசியல் சூடானதாகவும், விறுவிறுப்பானதாகவும் இருந்தது. பிரேமதாசா தனது முகாமையும் சுறுசுறுப்பாக வைத்திருந்தார். அதன் காரணமாக அவரது அரசியல் எதிரிகளும் சூடாக இருந்தனர். கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமல்லவா!

### வாழைப்பழத்தில் ஊசி

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்த தலைவர்களுக்குள் பிரேமதாசாதான் தமிழ்-முஸ்லிம் மக்களிடம் குறிப்பிடத்தக்க செல்வாக்கை பெற்றுக்கொண்ட அரசியல்வாதி. அதன் அர்த்தம் அவர் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வழங்கத் தயாராக இருந்தார் என்பதல்ல.

தனக்கு முன்பிருந்த சிங்களத் தலைவர்கள் போலவே பிரேமதாசாவும் இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணும் சந்தர்ப்பத்தை தனது ஒட்டு மொத்த அரசியல் நலன்கருதி கைவிட்ட ஒருவராகவே வாழ்ந்து விட்டுப் போயிருக்கிறார்.

**தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை ஜே.ஆர். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினார். பிரேமதாசா வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினார். வித்தியாசம் அதுதான்.**

**எந்தவொரு அரசியல்வாதியானாலும் சரி அவர் உயிரோடு இருந்தால் என்ன, இறந்தால் என்ன அவரது தகுதியை குறைத்து மதிப்பிடவும் கூடாது. தகுதிக்கு மீறிப் புகழவும் கூடாது.**

பிரேமதாசாவின் தலைமைத்துவ காலகட்டத்தில் இந்த அரசியல் தொடர் நிகழ்வுகள் பிரவேசிப்பதால் அவர் பற்றி இத்தனையும் கூறியாக வேண்டியிருந்தது.




நன்றி-தினமணி

### இந்தியாவின் ஆர்வம்

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளராக பிரேமதாசா தெரிவாகுவதை இந்திய அரசு விரும்பவில்லை. காமினிதிசநாயக்காவுடன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு நல்லுறவுகள் இருந்தன. காமினியோ, அல்லது லலித்தோ தெரிவாகியிருந்தால் அவர்கள் மகிழ்ந்திருப்பார்கள்.

பிரேமதாசா ஜனாதிபதி வேட்பாளராக தெரிவானதை வடக்கு-கிழக்கு மாகாணசபையில் ஆளும் அணியாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப்பும் விரும்பவில்லை.

ஒரே ஒரு தரப்பினருக்கே பிரேமதாசா வேட்பாளரானது நல்ல செய்தியாகச் செவியில் பாய்ந்தது. அது புலிகளின் தரப்பு.

புலிகள் எதிர்பார்த்தது போலவும், இந்திய அரசு கவலைப்பட்டது நியாயம் என்பதுபோலவும் பிரேமதாசாவின் தேர்தல் பிரசாரங்கள் அமைந்தன.

**"பதவிக்கு வந்தவுடன் இந்தியப் படையினரை 24 மணிநேரத்தில் நாட்டை விட்டு வெளியேற்றுவோம்" என்று அறிவித்தார் பிரேமதாசா.**

சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியும், ஜனாதிபதி வேட்பாளருமான சிறிமாவோ பண்டாரநாயக்காவும் 'அந்நியர் தலையீடின்றி வடக்கு-கிழக்கில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவோம்' என்று கூறினார். ஜனநாயக மக்கள் கூட்டமைப்பு (டி.பி.ஏ) சார்பாக அவர் களத்தில் இறங்கினார்.

மற்றொரு பிரதான வேட்பாளர் ஒஸி அபயகுணசேகர. விஜயகுமாரணதுங்கா கொல்லப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் தலைவராக செயற்பட்டவர் அவர்தான். ஐக்கிய சோசலிச முன்னணி (யூ.எஸ்.ஏ) சார்பாக ஒஸி அபயகுணசேகர தேர்தலில் குதித்தார்.

இந்த மூன்று போட்டியாளர்கள் மத்தியில்தான் மும்முனைப் போட்டி ஏற்பட்டது.

### காட்டில் சந்திப்பு

டி.பி.ஏ. என்று அழைக்கப்பட்ட ஜனநாயக மக்கள் கூட்டமைப்பில் குமார் பொன்னம்பலமும் பிரதான பங்கு வகித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒருமுறை பின்வருமாறு கூறினார்: "எனக்கு இரண்டு ஆண்பிள்ளைகள். சிவப்பு மகன் அநுரா. கறுப்பு மகன் குமார்."

இந்தியப் படையை கடுமையாக விமர்சித்துக் கொண்டிருந்தவர் குமார் பொன்னம்பலம். ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு புலிகளின் ஆதரவை பெறும் முயற்சியில் இறங்கினார் குமார்.

குமாருடன் தமிழ்க் காங்கிரசில் இருந்தவர் சட்டத்தரணி மோதிலால் நேரு. அவருக்கு புலிகளுடன் தொடர்பு இருந்தது.

அதனால் மோதிலால் நேரு ஊடாக புலிகளுடனான சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வன்னிக்காட்டுக்குச் சென்று புலிகளைச் சந்திக்க அநுரா பண்டாரநாயக்காவும் சம்மதித்தார்.

பிரபாகரனை சந்திக்க முடியாது என்பதை முன்கூட்டியே ஊகித்தனர். அதனால் மாத்தையாவை என்றாலும் சந்தித்துவிடவேண்டும். அப்படியானால்தான் அச் சந்திப்புக்கு அரசியல் முக்கியத்துவம் இருக்கும் என்று கருதினார்கள்.

"வாருங்கள் பார்க்கலாம்" என்று புலிகளிடமிருந்து பச்சைக்கொடி காட்டப்பட்டதும் அநுராவும், குமாரும் வவுனியா சென்றனர்.

அப்போது வவுனியாவில் இராணுவ உயர் அதிகாரியாக இருந்தார் டென்சில் கொப்பேக்கடுவ. சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் வேண்டப்பட்டவர் டென்சில் கொப்பேக்கடுவ.

வவுனியாவில் இருந்து வன்னிக் காட்டுக்கு அநுராவும், குமாரும் செல்லுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை டென்சில்தான் மறைமுகமாகச் செய்து கொடுத்தார்.

வன்னிக்காட்டில் புலிகள் அவர்களை வரவேற்றனர். பலத்த உபசரிப்பு. அநுராவுக்கோ இன்ப அதிர்ச்சி.

அப்படி ஒரு வரவேற்பை அவர் எதிர்பார்க்கவில்லை. நடந்து களைத்துப்போய் இருந்த அநுராவுக்கு குடிக்க பானம் கொடுத்தனர் புலிகள். வரண்ட நாவை ஈரப்படுத்திக் கொண்டு ஜில் என்று தொண்டைக்குள் இறங்கியது குளிர்பானம்.

கண்டோஸ் சொக்கலேட்டும் புலிகளால் கொடுக்கப்பட்டது. குளிராக இல்லாதுவிட்டால் கண்டோஸ் உருகிவிடும். புலிகள் கொடுத்த கண்டோஸ் இறுகி குளிராக இருந்தது.

எல்லாமே ஜில்லென்று இருக்கின்றனவே, காட்டுக்குள் மின்சாரமே இல்லை. குளிரூட்டும் வசதிகள் எப்படி இவர்களிடம் இருக்கின்றன? என்று அநுராவுக்கு வியப்பு மேல் வியப்பு.

ஆனால் சந்திப்பு மட்டும்தான் சற்று ஏமாற்றமாகப் போய்விட்டது.

### மாத்தையா வரவில்லை

அவர்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை புலிகளின் அன்றைய பிரதித் தலைவர் மாத்தையா சந்திக்க வரவில்லை. யோகியும், சங்கரும்தான் வந்திருந்தனர்.

இவர்கள் தமது நிலைப்பாடுகளை விளக்கினர். புலிகள் பங்குபற்றும் பேச்சுக்கள் மூலம் மட்டுமே அமைதியை ஏற்படுத்த முடியும் என்பதையும், இந்தியப் படை வெளியேற வேண்டும் என்பதில் தமக்கும் உடன்பாடே என்றும் தெரிவித்தனர்.

**அனைத்தையும் பொறுமையாகச் செவிமடுத்த யோகி; "நாங்கள் இதை தலைவரிடம் தெரிவிக்கிறோம். முடிவை அறிவிக்கிறோம்" என்று கூறினார்.**

மாத்தையாவைச் சந்தித்தால் முடிவை உடனே பெறலாம் என்று இவர்கள் நினைத்திருந்தனர். நேரடியாகச் சந்தித்தால் முடிவை தெரிவித்தாக வேண்டுமே என்பதால் அதனைத் தவிர்க்கவே மாத்தையா சந்திப்புக்கு வராமல் இருந்துவிட்டார்.

தென்னிலங்கை அரசியல் தலைவர்களுடன் புலிகளும் பேச்சு நடத்தியுள்ளனர். இன்றுவரை தமிழ்க் கட்சிகளும் பேச்சு நடத்தி வருகின்றன.

**தமிழ்க் கட்சிகள் தாங்கள் யாருடன் பேச்சு நடத்தினாலும் அவர்களை ஆஹா ஓஹோவென்று புகழ்வது வழக்கம். அதன்மூலம் மக்களிடமும் ஒருவிதமான நம்பிக்கையை ஏற்படுத்திவிடுவார்கள். பின்னர் எல்லாம் தோல்வியில் முடிந்ததும் 'எங்களை ஏமாற்றிவிட்டார்கள்' என்று புலம்புவார்கள்.**

முன்னாள் தலைவர்களிடம் இருந்து இந்நாள் தமிழ்க்கட்சிகளும் அதனை மிச்சசொச்ச மரபாக பாதுகாத்து வருகின்றன.

**ஆனால் புலிகளைப் பொறுத்தவரை 'நம்ப நட நம்பி நடவாதே' என்பதுதான் சிங்களத் தலைவர்கள் தொடர்பான அணுகுமுறையாக இருந்து வருகிறது.**

ஜனாதிபதி தேர்தலின்போதும் புலிகளைப் பயன்படுத்த பிரதான வேட்பாளர்கள் நினைத்தனர். புலிகளோ அவர்களை பயன்படுத்திக் கொண்டனர். அதேசமயம் அவர்கள் தொடர்பாக மக்களிடம் தவறான நம்பிக்கை ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதிலும் கவனமாக இருந்தனர்.

வன்னிக்காட்டுக்குச் சென்று அநுரா சந்தித்ததும், புலிகளின் ஆதரவை நாடியதும் அரசியல் ரீதியாக புலிகளுக்குத்தான் சாகமாக இருந்தது.

புலிகள் சிறு குழுவினர், அவர்கள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று இந்திய அரசு சர்வதேச ரீதியில் செய்த பிரசாரத்துக்கு கொடுக்கும் பதிலடிகளில் ஒன்றாகக் கருதியே சந்திப்புக்கு இணங்கினார்கள்.

பிரேமதாசா இந்தியப் படையை வெளியே போகச் சொல்லுகிறார். சிறிமாவோ பண்டாரநாயக்காவும் புலிகளை நாடி தன் புத்திரரை அனுப்புகிறார். எனவே புலிகளின் பக்கம் நியாயம் இருக்கிறது. புலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தென்னிலங்கை கட்சிகளே அங்கீகரிக்கின்றன என்பதை வெளிப்படுத்த அதனை ஒரு சந்தர்ப்பமாகப் பாவித்தனர் புலிகள்.

**புலிகளைச் சந்தித்துவிட்டு அநுராவும், குமாரும் கொழும்பு திரும்பினார்கள். புலிகளுக்கு தனிநாடு கொடுக்க அநுரா இரகசிய உடன்பாடு செய்துவிட்டு வந்துவிட்டார் என்று ஐ.தே.கட்சியினர் கதை கட்டத் தொடங்கினார்கள்.**

### என்ன பேசினோம்?

இதனையடுத்து புலிகளுடன் நடந்த சந்திப்புத் தொடர்பாக அநுராவும், குமாரும் இணைந்து ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

"செயலற்றுப்போன இந்தியா-இலங்கை ஒப்பந்தம் பற்றியோ, அல்லது வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புப் பற்றியோ இச் சந்திப்பில் பேசப்படவில்லை. தனிநாடு பற்றிய பேச்சும் ஆராய்வுக்கு வரவில்லை.

இச் சந்திப்புக்கு முன்னரே ஜனநாயக மக்கள் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் புலிகளிடம் இருந்தது.






திருமதி பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், வடக்கு-கிழக்கில் நிரந்தர அமைதியை உருவாக்கும் நோக்கத்துடனேயே விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏனைய குழுக்களும் பங்குபற்றுவதன் மூலம் மட்டுமே வடக்கு-கிழக்கில் நிரந்தர அமைதியை தோற்றுவிக்க முடியும்.

மற்றொரு தரப்பின் தலையீடின்றி இந்நாட்டில் எமது சொந்தப் பிரச்சனைகளை ஒருவருடன் மற்றொருவர் பேசுவது தவறு கிடையாது.

**முன்னர் திரு. குமார் பொன்னம்பலத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கப்பிரதிநிதிகளைச் சந்திக்க திரு. அத்துலத்முதலி இணங்கினார் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்." என்று அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.**

இவையெல்லாம் நடந்து முடிந்த பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் பீடம் விடுத்த அறிக்கை இப்படிக் கூறியது:

**"சிறீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் எந்த வேட்பாளரையும் ஆதரிக்கப் போவதில்லை."**

ஜனாதிபதித் தேர்தல் பற்றிய செய்திகளுக்கு சிறிது ஓய்வு கொடுத்துவிட்டு, அக்கால கட்டத்தில் வடக்கு-கிழக்கில் நடைபெற்ற சில முக்கிய சம்பவங்களுக்கு செல்லுவோம்.

### படுகொலை

வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கான இடைக்கால நிர்வாகத்துக்கு புலிகளால் சிபாரிசு செய்யப்பட்டவர்களில் ஒருவர் சிவஞான சுந்தரம். இவர் வயது 65. பின்னர் இவர் பிரஜைகள் குழுத் தலைவராகவும் இருந்தவர்.

புலிகள் பலமாக உள்ளபோது அவர்களை ஆதரித்த சிலர் பின்னர் இந்தியப் படையுடன் நட்பாகி வளைந்து கொடுத்தனர்.

சிவஞானசுந்தரம் துணிச்சலானவர். 21.10.88 அன்று யாழ்ப்பாணம் அரியாலையில் திருமலை மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேணல் சந்தோசத்தின் முதலாண்டு நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு பேருந்து மூலம் வீடு திரும்பிக் கொண்டிருந்தார் சிவஞான சுந்தரம். வல்வைச் சந்தியில் இருந்த இந்தியப் படை சோதனைமுகாமில் பேருந்து சோதனையிடப்பட்டது.

இந்தியப் படையினருடன் நின்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் சிவஞான சுந்தரத்தை அடையாளம் கண்டுவிட்டனர்.

பேருந்தில் இருந்து இறக்கப்பட்ட பயணிகள் முன்பாகவே அவரைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்றனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள்.

**பயணிகள் கண்முன்பாகவே சிவஞான சுந்தரம் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

**இந்தியப் படையினர் அக் காட்சிக்கு மௌன சாட்சிகளாக நின்று கொண்டிருந்தனர்.**

### காரணம் என்ன?

சிவஞான சுந்தரம்மீது ஈ.பி.ஆர்.எல்.எஃப் பழிதீர்த்துக் கொண்டதற்கு பின்னணியில் ஒரு காரணம் இருந்தது.

வடக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். வேட்பாளர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட வேண்டும் என்று இந்திய அரசு விரும்பியது. அதற்கேற்பவே திட்டம் தீட்டி நினைத்ததை முடித்தனர் என்பதையும் முன்னர் விபரித்திருந்தேன்.

அப்போது நடைபெற்ற சதி நாடகம் இப்போது சொல்கிறேன்.

வடக்கில் வேட்பாளர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்படும் நிலையை தடுக்க ஈரோஸ் இயக்கத்தினர் சிலர் இணைந்து முயற்சியில் இறங்கினர்.

சுயேட்சைக் குழு ஒன்றை போட்டியிட வைப்பதுதான் நோக்கமாக இருந்தது.

அப்போது பாலாலியில் இருந்த இந்தியப்படை மேஜர் பாலகிருஷ்ணர் என்பவர் ஈரோஸ் இயக்கத்தினரைச் சந்திப்பது வழக்கம். மேஜர் பாலகிருஷ்ணர் எம்.ஐ. என்றழைக்கப்படும் இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்.

அதேநேரம் இந்திய மத்திய ரிசேவ் பொலிஸ் படையைச் சேர்ந்த சுப்பரமணிய தாஸ் என்பவரும் ஈரோஸ் இயக்கத்தினரை பொலிஸ் சீருடையில் சென்று சந்திப்பதுண்டு. ஆனால் அவரும் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்தான்.

இந்த இருவரும் சுயேட்சைக் குழுவொன்றை வடக்கில் போட்டியிடவைக்கும்படி ஈரோசுக்கு ஆலோசனை கூறினார்கள்.

தம்மை நாடிபிடித்தறியத்தான் அப்படிக் கூறுகிறார்கள் என்பது ஈரோஸ் உறுப்பினர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

சுயேட்சைக்குழுவில் போட்டியிட ஆட்களைத் திரட்டி முடித்து, அச் சுயேட்சைக் குழுவுக்கு தலைவராகவும் ஒரு முக்கியமானவரை போட்டனர்.

அவர்தான் சிவஞானசுந்தரம். பலரும் தயங்கியபோது அவர்தான் துணிச்சலாக முன்வந்தார்.

இத்தகவல்களை மேஜர் பாலகிருஷ்ணனிடமும் சுப்பிரமணிய தாசிடமும் தெரிவித்தனர் ஈரோஸ் உறுப்பினர்கள்.

"அப்படியா நல்ல விஷயமாச்சே" என்று இருவரும் பாராட்டிவிட்டுப் போனார்கள்.

தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் தினத்தன்று காலையில் தேடினால் சிவஞானசுந்தரத்தை காணவில்லை.

நள்ளிரவில் அவரை வீடுபுகுந்து இந்தியப்படை கைது செய்து கொண்டு போனது. நியமனப்பத்திரம் தாக்கல் செய்து முடிந்த பின்னரே விடுதலை செய்தது.

அதன் பின்னரும் சிவஞானசுந்தரம் இந்தியப் படையினரின் அத்துமீறல்களை கண்டித்தே வந்தார்.

இறுதியாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். அவரைச் சுட்டுக் கொன்றது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# திருமலைத் தங்கத்துரையின் மரணத்துடன் கூடிய 'கரும் புலிகள் தினம்'

## ஒரு தசாப்தகால வரலாற்று நிகழ்வுகளின் காலக் கண்ணாடி!

**அலசுவது- இராஜதந்திரி**

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அருணாசலம் தங்கத்துரையின் அகாலமரணம் குறித்து லங்கா சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் பட்டிவீரக்கோன் கச்சிதமான அனுதாபச் செய்தியொன்றை வெளியிட்டிருந்தார்.

"இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வைத் தாமதப்படுத்திவரும் ஜனநாயக சக்திகளும் அமரர் தங்கத்துரையின் மரணத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும். இன்றைய அந்தகார நிலையை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றுமைப்படவேண்டும்." என்பதே லங்கா சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் பட்டிவீரக்கோன் விடுத்திருந்த அனுதாபச் செய்தியில் காணப்பட்டிருந்த வசனங்களாகும்.

அரசியல் தீர்வுபற்றிப் பேசுவோர் தாம் எங்கு நிற்கிறோம், எதைச் செய்கிறோம் என்பது பற்றி தமக்கே புரியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வென்பது இன்று நேற்றல்ல, கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக வலியுறுத்தப்பட்டுவருவதாகவே இருக்கின்றது.

நேர்மையான, சாத்வீகமானதொரு அரசியல் தீர்வு எட்டப்படவேண்டுமென ஜனநாயகரீதியாகக் குரல் எழுப்பப்பட்ட ஒரு காலகட்டத்தைச் சேர்ந்தவரே திருமலையில் கொலையுண்ட அமரர் தங்கத்துரையாவார்.

ஜனநாயக சக்திகள் அன்று எழுப்பிய கோஷங்களை மழுங்கடித்து, அவை முன்வைத்த தீர்வுத்திட்டங்களைப் பேரினவாத சக்திகள் நிராகரித்தன. அல்லது தமது விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றவிதத்தில் அரைகுறைத் தீர்வைத்திணிக்க முயன்றனர்.

இந்நிலையில் பேரினவாத சக்திகள் தமது மனம் போன போக்கில் நடக்கமுற்பட்டு தோல்வியைத் தழுவின. மறுபுறத்தே தமிழ் அரசியல் கட்சிகள்கூட தமக்கு ஏற்புடையதான தீர்வை எட்டுவதில் தோல்வியையே எதிர்கொண்டனர்.

இந்நிலையில் இன்று இருதரப்பினரும் செய்வதறியாத சூழ்நிலையில் இருக்கும் ஒரு தன்மையையே தற்போதைய யுத்தம் உருவாக்கி விட்டுள்ளது.

கடந்த 14 வருடகாலத்துக்கும் மேலாக மிகவும் உத்வேகமடைந்துள்ள ஆயுதப்போராட்டமென்பது, இன்று விசுவரூபமெடுத்து வியாபித்துள்ளது.

அமரர் தங்கத்துரையின் மரணத்துடன், அரசியலோடு சம்பந்தமில்லாத இரண்டு பாடசாலை அதிபர்கள், பொறியிலாளர் ஒருவர் உட்பட ஆறுபேர் கொல்லப்பட்டமை, யுத்தச் சுழிக்குள் அப்பாவிபொதுமக்களும் பலியாகி வருவதற்கு உதாரணமாகவே அமைந்துள்ளது.

அமரர் தங்கத்துரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவர். அக்கட்சியின் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமாவார். எனவே அவரது மரணம் நாடளாவிய ரீதியில் அனைவரது கவனத்தையும் பெற்றது.



அரச பொதுசனத் தொடர்புச் சாதனங்கள்கூட அமரர் தங்கத்துரையின் மரணம் குறித்த செய்திகளுக்கு விரிவான முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தன.

ஆனால் வடக்கு-கிழக்கில் தினமும் ஏதோ ஒரு பகுதியில் துப்பாக்கிவேட்டுக்களும், குண்டுச்சத்தங்களும் முழங்கி இடையறாமல் உயிர்ப்பலி எடுக்கப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே அமரர் தங்கத்துரையின் மரணம் குறித்து அனுதாபங்களையும், அதற்குப் பொறுப்பானவர்கள் என்று கருதுவோர் மீது கண்டனங்களையும் மட்டுமே ஜனநாயக விரும்பிகள் என்று கூறுவோர் வெளியிடலாம்.

ஆனால் அவர்களால் தனிநபர் கொலைகளையோ அல்லது ஒரு பரந்துபட்ட யுத்தத்தையோ நிறுத்தமுடியாது இருப்பதே கண்கூடு.

இந்த உண்மையை அப்பட்டமாகக் கூறுவதாகவே லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. பட்டிவீரக்கோனின் அமரர் தங்கத்துரை மரணம் குறித்த அனுதாபச் செய்தியும் விளங்கியிருந்தது.

இந்த அனுதாபச் செய்தியில் திருமலை எம்.பி. தங்கத்துரையின் மரணம் வீணானதொன்றாக இருக்கலாகாது. ஓர் அரசியல் தீர்வை விரைவுபடுத்தவதாக அது அமையவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. தங்கத்துரையின் மரணம் மட்டுமல்ல இன்று தினந்தோறும் வடக்கு-கிழக்கின் யுத்த வலயங்களில் வானைநோக்கி வாய் பிளந்த சடலங்களாக கருகி உதிரும் தமிழ், சிங்கள இளைஞர்களது மரணங்கள்கூட வீணானவையாக அமையலாகாது!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் தினத்தன்றே திரு. தங்கத்துரையின் மரணமும் சம்பவித்திருந்தது.

'கரும்புலிகள் தினம்' என்பது தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களது தற்கொலைப் படை உறுப்பினர்களை நினைவு கூருவதாகவே இருக்கின்றது.

1987ம் ஆண்டு வடமராட்சி ஒப்பரேஷன் இராணுவ நடவடிக்கையின்போதே நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் குண்டு பொருத்திய வாகனமொன்றுடன் சென்று மில்லர் என்ற தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் மோதினார். இம்மோதலில் அப்பாடசாலையிலிருந்த படையினர் பலர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து புலிகளின் முதலாவது 'கரும் புலி' யாக மில்லர் மரணத்தைத் தழுவினார்.

அன்றிலிருந்து இன்றுவரை தமது தரப்பில் 105 கரும் புலிகள் பலியாகியுள்ளனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கரும் புலிகள் தினத்தையொட்டி நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

புலிகள் எங்கும், எந்நேரத்திலும் தாக்குதல்களைத் தொடுக்கலாம் எனவும் அஞ்சப்பட்டது.

அரச தரப்பினருக்கு 'கரும் புலிகள் வாரம்' என்பது அச்ச உணர்வைக் கொடுப்பதாகவே உள்ளது.

ஆனால் புலிகளின் கரும்புலிகள் வாரம் மட்டும் பத்தாவது ஆண்டினுள் பிரவேசித்துவிடவில்லை.

'கரும்புலி மில்லர்' இறந்த 1987ம் ஆண்டிலேயே இலங்கையின் வடக்கு-கிழக்கு அரசியலில் பல முக்கிய நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

வடக்கே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கையின் ஆயுதப்படையினர் பிரமாண்டமான முறையில் முதலாவது இராணுவ நடவடிக்கையை 1987ம் ஆண்டிலேயே ஆரம்பித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையையடுத்து இந்தியா வடக்கு-கிழக்குத் தமிழர்கள்மீது கரிசனை கொண்ட பாங்கில் உணவுப் பொட்டலங்களை யாழ்குடாநாட்டில் போட்டு தனது விமானப்படையின் பலத்தையும் யாழ்ப்பாண ஆகாயப் பரப்பில் இலங்கைப் படையினருக்குக் காட்டிச் சென்றிருந்தது.

இதனையடுத்து கொழும்புக்கு அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி விஜயம் செய்து, இலங்கையின் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனாவுடன் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக கைசாத்திட்டதும் 1987ம் ஆண்டிலேயேயாகும்.

இந்த ஒப்பந்தத்தையடுத்து 1987ம் ஆண்டிலேயே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிக்கு அமைதிப்படை என்ற ரீதியில் பெருந்தொகையான இந்தியத் துருப்பினரும் வந்திருந்தனர்.

பின்னர் அதே 1987ம் ஆண்டிலேயே இலங்கை-இந்திய அமைதி ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டபின்னர் நாடு திரும்பும் தறுவாயில் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திமீது இலங்கைக் கடற்படைவீரர் ஒருவர் தாக்குதலையும் நடத்தியிருந்தார்.

இதனையடுத்து அதே ஆண்டிலேயே இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஜே.ஆர். ஜயவர்த்தன அரசினால் அமுல்படுத்தப்பட்டு வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் மாகாணசபை நிர்வாகம் கொண்டுவரப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினையில் முழு அளவில் ஆயுதப்போராட்ட அமைப்புகளாக இருந்த பல்வேறு தமிழ் தீவிரவாத அமைப்புக்களும் அரசியல் நீரோட்டத்தில் பிரவேசித்ததும் 1987ம் ஆண்டிலேயேயாகும்.

அத்துடன் இந்த ஆண்டிலேயே இந்தியப் படையினரை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் மோதல்களையும் ஆரம்பித்திருந்தனர்.

எனவே தற்போது 1997ம் ஆண்டில் சந்திரிகா அரசு கரும்புலிகளின் பத்தாவது ஆண்டு நிறைவு குறித்து உஷாரடைந்திருந்தது.

ஆனால் கரும் புலிகளின் பத்தாண்டு நிறைவு மட்டுமல்ல; பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகளுக்கும் தற்போது பத்து ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன என்பதையே சந்திரிகா அரசு உய்த்து உணரவேண்டும்.

கடந்த பத்தாண்டுகாலத்தில் நம்பிக்கை தரக்கூடியதும், பின்னர் நம்பிக்கை இழக்கக் கூடியதுமான நிகழ்வுகள், மாறி, மாறி ஏற்பட்டு இலங்கையின் அரசியல் நிலவரத்தைப் படாதபாடு படுத்தியிருக்கக் காணப்படுகின்றது.

சாதாரண தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தமது தலைவிதியை நொந்தவர்களாக எதிர்காலம் பற்றிய நம்பிக்கை எதுவுமற்ற சூழ்நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையிலேயே திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரையும், அவரோடு சேர்த்து வேறு ஐந்து அப்பாவிப் பொதுமக்களும் கொலையுண்டு, நம்பிக்கையீனங்கள் என்பது தொடர்ந்து செல்லக்கூடிய அந்தகாரத்தன்மையே முனைப்படைந்து நிற்கின்றது.

இத்தகைய அந்தகார நிலையிலிருந்து வடக்கு-கிழக்கு மக்களை மட்டுமல்ல அனைத்து இலங்கையர்களையும் தென்னிலங்கை ஆட்சியாளர்களால் காப்பாற்ற முடியுமா? என்பதும் விடைகாணப்பட முடியாத கேள்வியாகவே இருக்கின்றது.

# கூட்டணியினருக்கு ஒரு மடல்

கூட்டணிப் பிரமுகர்களுக்கு:

பணிவன்புடன் எழுதிக்கொள்வது:

சமீபகாலமாக தாங்கள் கூறிவரும் ஒரு கருத்தே இம் மடலை எழுதத் தூண்டியது.

"சில பத்திரிகைகள் அவதூறாக எழுதி வருகின்றன. எங்களைக் கொல்ல சதி செய்கின்றன" என்று கூறிக்கொண்டிருக்கிறீர்கள்.

எந்தப் பத்திரிகைகள் அப்படிச் செய்கின்றன என்றோ, எது அவதூறு என்றோ நேரடியாக அல்லது குறிப்பாக நீங்கள் கூறவில்லையென்பதால் என்னிடம் சில கேள்விகள் எழுகின்றன.

உங்கள் வார்த்தைகளில் கூறுவதானால் நீங்கள் அகிம்சைவாதிகள். மிதவாதிகள். ஜனநாயகத்தில் இமயமலைபோல அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்கள்.

பகிரங்க அரசியலில் இருக்கிறீர்கள். நாளை தேர்தல் வந்தால் படையினர் புலிகளோடு யுத்தம் செய்து கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பகுதிகளுக்கு வாக்குக்கேட்டு வரப் போகிறீர்கள்.

ஆக, உங்கள் பொதுவாழ்க்கையைப் பற்றி விமர்சிப்பதோ, விவாதிப்பதோ, சரியானதை செய்தால் பாராட்டுவதோ, தவறானதைச் செய்கையில் சுட்டிக்காட்டுவதோ கெட்ட காரியங்கள் என்று அர்த்தமாகாது.

முரசும் உங்கள்மீது பாராட்டுக்களையும் பொழிந்திருக்கிறது. உங்கள் தவறுகள்மீது விமர்சனங்களையும் வீசியிருக்கிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கிழக்கில் உங்கள் வெற்றியை முன்கூட்டியே கணித்துச் சொன்ன ஒரே பத்திரிகை முரசு மட்டும் தான் என்பதை மறந்திருக்கமாட்டீர்கள்.

அண்மையில் மரணமான தங்கத்துரைக்கு திருமலையில் வெற்றி உறுதி என்பதை சொன்னதும் முரசுதானே.

ஐயா சிவா அவர்கள் வவுனியாவில் தோல்விகண்டபோது கேலி செய்யாமல் அவரை தட்டிக் கொடுத்து கருத்து வெளியிட்டதும் முரசுதான்.

உங்களுக்கு பிடித்தமான உண்மைகளைச் சொன்னால் புன்னகைக்கிறீர்கள். பிடிக்காத உண்மைகளைச் சொன்னால் புறுபுறுக்கிறீர்கள். உங்களுக்கு பிடித்தால் என்ன, பிடிக்காவிட்டால் என்ன உண்மை உண்மைதானே.

எப்போதும் உங்களுக்கு பூத்தூவிக் கொண்டிருக்கவேண்டுமானால் நீங்கள் கடவுள் சிலைகளாக இருக்கலாமே தவிர, கட்சித் தலைவர்களாக இருக்கமுடியாது.

உங்களுக்கு மட்டுமல்ல தமிழ்க்கட்சிகள் பலவற்றுக்கும் முரசுமீது வருத்தம்தான். முரசுமீது மட்டுமல்ல உண்மையான எந்தப் பத்திரிகையாளருடனும் உடன்பாடு கொள்ள முடியாதளவுக்கு, தமிழ்க் கட்சிகள் தங்கள் தவறுகளை நியாயப்படுத்த மட்டுமே பழக்கப் பட்ட இயந்திரங்களாகிவிட்டன.

இதிலே உங்களை மட்டும் குறிப்பாக சுட்டிக்காட்டக் காரணம் இல்லாமலில்லை. இன்றைய காலத்தில் குறைந்த பட்ச சலுகைகளை திருப்தியான தீர்வுகளாக நம்பவைக்கும் பணியை செய்வதில் நீங்கள் முன்னணிப் படையாக இருக்கிறீர்கள்.



இத்தனை இழப்புக்கள், தன்னலமற்ற அர்ப்பணிப்புக்கள் என்பவற்றின் பின்னரும் எம் மக்கள் முழுமையான தீர்வொன்றுக்கு தகுதியானவர்களல்ல என்பதுமாதிரியான நம்பிக்கையீனங்களை நீங்கள் முன்னின்று தோற்றுவித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இரத்தம் சிந்தி வளர்த்த உரிமைப் பயிரை, உங்கள் காகிதத் திட்டங்களின், மகஜர்களின் உற்பத்தி என்று எடுத்துரைக்கத் துணிகிறீர்கள்.

சாதாரண தொலைக்காட்சி அலை வரிசையில்கூட தமிழுக்கு தனியிடம் பெற்றுத்தர உங்கள் அரசியல் பலம் போதவில்லை. உங்கள் பலத்தால்தான் உரிமைப்போர் உரம் பெற்றது என்று சொல்வதை எப்படி நம்பச் சொல்கிறீர்கள்.

தமிழ்க்கட்சிகள் அதிகம் கேட்பார்கள், பின்னர் கொடுப்பதை வாங்கிக்கொண்டு குனிந்துகொள்வார்கள் என்ற அரசியல் வரலாற்றை ஆரம்பித்து வைத்தவர்கள் என்ற பெருமையை மட்டும் ஏன் புறக்கணிக்கிறீர்கள்?

'அடைந்தால் தமிழ்நாடு அல்லாவிட்டால் சுடுகாடு' என்று பேசிய நீங்கள் 'பண்டா-செல்வா' ஒப்பந்தத்தை அடையாமல் போனோமே என்று இன்று கூறுவதும் அந்த அரசியல் வரலாற்றின் தொடர்ச்சியல்லவா?!

படுகளத்தில் மாண்ட உயிர்கள் எத்தனை?

"பத்துத்தடவை பாடை வராது பதுங்கிப் பாயும் புலியே தமிழா! செத்து மடிதல் ஒரு தரமன்றோ, சிரித்துக் கொண்டே செருக்களம் வாடா!" என்றழைத்தார் கவிஞர் காசி ஆனந்தன். அவர் ஊட்டிய உணர்ச்சிகளுடன் உடன்பட்டுத்தானே பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்தீர்கள்.

படுகளத்தில சிரித்துக்கொண்டே செத்தனர் பலர். நீங்களோ இன்னமும் பாராளுமன்ற விளையாட்டை தொடர்கிறீர்கள்.

வெளிநடப்பாம். வெகுண்டெழுதலாம். அரசுதான் போரை நடத்துகிறது. புலிகளை ஒழித்தே தீருவோம் என்கிறது. நீங்கள் அரசுக்கு ஆதரவளிக்கிறீர்கள். அவசரகால சட்டத்தை எதிர்க்கிறீர்கள். போருக்கு நிதி ஒதுக்கிய பட்ஜெட் நிறைவேற ஆதரவாக வாக்களித்தீர்கள்.

அடிமைகளுக்கு எஜமானர்கள் சில வசதிகளை செய்து கொடுப்பார்கள். அது அடிமைகளுக்கான சுதந்திரம் என்று அர்த்தமல்ல. தங்களுக்காக உழைக்க அடிமைகள் உயிர் பிழைத்திருக்க வேண்டுமே என்கின்ற அக்கறையல்லவா?

அரசியலில் இன்று ஆளும் தரப்பின் பிரதான நோக்கங்களுக்கு விசுவாசமாக நீங்கள் இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் அரசியல் ரீதியில் அம்பலப்பட்டுபோகாமல் இருப்பதற்காக சில கட்டங்களில் மட்டும் எதிர்ப்பு வேஷம் போடுவதற்கு உங்களுக்கு உரிமை தரப்படுகிறது.

அரசியல்ரீதியில் நீங்கள் தப்பிப் பிழைத்திருப்பது எதிர்கால தேர்தல் வியூகங்களுக்கும் ஆளும் தரப்புக்கு உதவும். உங்களுக்கு மக்களிடம் மதிப்பு இருந்தால்தான், நீங்கள்தான் தமிழ் பிரதிநிதிகள் என்று சுட்டிக்காட்டவும் உதவும்.

நாளை ஒரு குறைந்த பட்ச தீர்வை உங்களிடம் தந்துவிட்டு, தமிழ் பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டனர் என்று கூறுவதற்கும் நீங்கள் தேவை அல்லவா?

எனவே- வெளிநடப்புக்கள், சில கட்டங்களில் மட்டும் எதிர்ப்பு வாக்குகள் என்ற நாடகங்கள் அரசுக்கு நீங்கள் விடுக்கும் அச்சுறுத்தல்கள் அல்ல. உங்களை அரசியல் ரீதியாக தொடர்ந்து நிலைப்படுத்த அரசுடன் நீங்கள் செய்து கொண்ட உடன்பாட்டின் பிரதிபலிப்புக்கள்.

புலிகளோடு பேசி பிரச்சனையைத் தீர்க்கலாம் என்று கூறுகிறீர்கள். பின்னர் புலிகளை அழைக்காத பேச்சுவார்த்தைகளில் நீங்கள் ஏன் கலந்து கொள்கிறீர்கள்? கலந்து கொண்டாலும் விழுந்தடித்து ஏன் விட்டுக் கொடுப்புக்கள் நடத்துகிறீர்கள்.

யுத்தத்தை நிறுத்துங்கள் என்கிறீர்கள். மக்கள் படும் அவலங்களை கண்டு இரத்தக் கண்ணீர் பொங்குவதாக கூறுகிறீர்கள்.

நல்லது; யுத்தத்தை முதலில் நிறுத்துங்கள், பின்னர் பேசலாம் என்றுமட்டும் ஏன் சொல்ல மறுக்கிறீர்கள்.

அன்று முதல் இன்றுவரை இப்படியே தானே செய்து கொண்டிருக்கிறீர்கள். இது கம்பியூட்டர் யுகம். கொஞ்சம் வித்தியாசமாக கிரஃபிக் சாகசம் காட்டினாலாவது சலிப்பில்லாமல் இருக்குமல்லவா?!

இதையெல்லாம் சொன்னால் அவதூறு என்கிறீர்கள்? சுடவைக்க சதி என்கிறீர்கள்?

இந்த விடயத்தில் மட்டும் உங்களைப்போல பிறரை எண்ணும் பொதுநலம் காட்டிப் புல்லரிக்க வைக்கிறீர்கள்?

தங்கத்துரையின் மரணச் சடங்கில் நின்று ஆனந்த சங்கரி பேசுகிறார்: சில பத்திரிகைகள் அவதூறாக எழுதிவிட்டனவாம். அதுதான் கொல்லப்பட்டாராம்.

இத்தனைக்கும் அந்தக் கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் ஈழத்து நாதன். திருமலை கூட்டணிக் கிளையின் தலைவர்.

'தங்கத்துரை பதவி விலக வேண்டும். அவர் பதவியில் நீடிப்பது நேர்மையற்றது. திரு.சம்பந்தனுடன் செய்துகொண்ட கனவான் உடன்பாட்டை மீறிய தங்கத்துரையை பதவியில் இருந்து நீக்கவேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றியது திருமலைக்கிளை. மறந்தா போனது?

வீரர் ஆனந்த சங்கரி முதலில் தனது கட்சிக்காரரான ஈழத்துநாதனை எட்டி உதைத்துவிட்டு, பின்னர் பத்திரிகைகள் மீது தன் ஆத்திரத்தை கொட்டித் தீர்த்திருந்தால் அவரைப் பாராட்டியிருக்கலாம். அவர் வேதனை நியாயம் என்று எண்ணியிருக்கலாம்.

அப்படியானால் உங்கள் திருமலைக் கிளை தங்கத்துரைக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானம் அவரைக் கொல்லச் செய்த சதி என்று ஏற்றுக் கொள்கிறீர்களா? அவதூறுகள் என்று அங்கீகரிக்கிறீர்களா? அப்படியானால் திரு. சம்பந்தன்மீதும் அவதூறுக் குற்றம் அம்பெனப் பாயுமே!

முன்பெல்லாம் உங்கள் அரசியல் எதிரிகளை துரோகிகள் என்று நாமம் சூட்டி அழைத்தீர்களே, அதுவெல்லாம் அவர்கள் கொல்லப்படுவதற்காக நீங்கள் செய்த சதி என்று அர்த்தமாகிவிடுமே!

பொத்துவில் கனகரத்தினம் கட்சி மாறியபோது "போகாதே போகாதே என் கனகா, பொல்லாத சொப்பனமும் நானும் கண்டேன்!" என்று பாடினாரே உங்கள் முன்னாள் எம்.பி. துரைரத்தினம். அதனைக் கொல்வதற்கான உத்தரவாக கருதலாமா?

உங்கள்மீதான விமர்சனங்களில், நீங்கள் உங்கள் எதிரிகள் பற்றிக் கூறிய வார்த்தைப் பிரயோகங்களில் ஒரு துளியைக்கூட உங்கள் மீது பாவிக்க எங்களுக்கு நாகூசுகிறது. கைஎழுத மறுக்கிறது. கனவான் அரசியல் வாதிகளான நீங்கள் எப்படித்தான் அப்போது வாய்களால் சுட்டுத் தீர்த்தீர்களோ என்று ஆச்சரியமாக இருக்கிறது!

தயவுசெய்து அவதூறுகள் பற்றி நீங்களே நினைவூட்டாதீர்கள். ஏனெனில் அது பூமராங் மாதிரி உங்களிடமே திரும்பிவரும் என்றுதான் கவலையாக இருக்கிறது.

நன்றி-

உங்கள்மீது அனுதாபப்படும்

-முத்தமிழன்-



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான் தேவி

பாகம் 02

53

தருவது ரசிகன்



பூலான்

**கடந்த வாரம்**

விக்கிரம் மல்லாவும், பூலானும், வேராவும் பூலானின் கிராமத்துக்குச் செல்கிறார்கள்.
பூலானின் குடும்பத்தாரை பார்த்துவிட்டு திரும்புகிறார்கள்.
மல்லா பூவா-தலையா போட்டுப் பார்க்கிறான்.
பூ வந்தால் மையாதீன் தலை விழுந்தால் கிராம அதிகாரி என்று தீர்மானிக்கிறார்கள். **இனி...**

நாணயத்தை கையில் வைத்துக்கொண்டு "பூவா? தலையா? சொல்லு!" என்று மல்லா கேட்டதும் பூலான் சிறிது நேரம் யோசித்தாள்.

இரண்டு பேருமே பழிவாங்கப்பட வேண்டியவர்கள்தான். பூலானைக் கொடுமைப்படுத்தியதில் மையாதீன்தான் முதலிடத்தில் இருக்கிறான்.

'மையாதீன்'- பூலான் தீர்மானித்தாள். 'முதலில் அவனது தலைதான் சிதற வேண்டும்.'

"பூ" என்றாள் பூலான்.

மல்லா நாணயத்தைச் சுண்டினான். மல்லாவின் தலைக்குமேல் எழுந்து சுழன்று தரையில் விழுந்தது.

பூலான் ஆவலோடு பார்த்தாள்.

தலை விழுந்திருந்தது.

பூலான் முகத்தில் சின்னதாக ஏமாற்றச் சாயல் படர்ந்தது.

"கிராம அதிகாரி வீடெங்கே? காட்டு! விடிய முன்னர் காரியத்தை முடித்துவிட்டு கிராமத்தைக் கடந்தாக வேண்டும்!" என்றான் மல்லா.

பூலான் முன்னால் நடந்துசெல்ல இருவரும் தொடர்ந்தனர். நாய்கள் குரைக்கத் தொடங்கின.

கிராம அதிகாரியின் வீட்டுக்குச் செல்லும் பாதையில்தான் கிராம அதிகாரியின் அலுவலகமும் இருந்தது.

அதனைக் கடந்து செல்லும்போது, கிராம அதிகாரியின் அலுவலக அறையில் வெளிச்சம் தெரிவதை பூலான் கண்டுவிட்டாள்.

சட்டென்று அப்படியே நின்று கூர்ந்து பார்த்தாள். சந்தேகமேயில்லை. கிராம அதிகாரியின் அறையில் இருந்துதான் வெளிச்சம் வருகிறது.

அந்த அறையில்தான் ஒரு பெண்ணுடன் அவன் சல்லாபித்துக் கொண்டிருந்ததை பூலான் முன்னர் பார்த்திருந்தாள்.

"என்ன பூலான்?" என்றான் மல்லா.

கிராம அதிகாரியின் அலுவலகத்தில், வெளிச்சம் வந்த ஜன்னலை நோக்கி கை காட்டினாள் பூலான்.

"அதுதான் அலுவலகம்."

"சரி, இப்போது யார் இருக்கப் போகி.... அட... ஆமாம் விளக்கு ஏதோ எரிவதுபோலில்லை? ஐயா மான்வேட்டையாடுகிறாரோ? நாங்களும் நாய் வேட்டையாட வசதியான இடம்தான்!" சொல்லிக்கொண்டே மல்லா செல்லத் தொடங்கினான்.

நாய்கள் இப்போதும் விடாமல் குரைத்துக்கொண்டுதான் இருந்தன.

மல்லாவை முந்திக்கொண்டு பூலான் வேகமாக நடந்து மங்கலாய் வெளிச்சம் வெளிவந்து கொண்டிருந்த ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

இன்னமும் சில நிமிடங்களில் தனது சாவு நிச்சயிக்கப்படப்போவது தெரியாமல், உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாமல் மரக்கட்டில்மீது மல்லாந்து கிடந்தான் கிராம அதிகாரி.

பூலானுக்கு அசிங்கமாக இருந்தது. சட்டென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள். மல்லா அவளை விலக்கிவிட்டு எட்டிப்பார்த்தான்: அவனுக்கு சிரிப்பாக இருந்தது.

பீப்பா ஒன்றை கவிழ்த்துவைத்ததுபோல கிராம அதிகாரியின் வயிறு உயர்ந்திருந்தது. அவனிடமிருந்து வெளிப்பட்ட மூச்சுக்கு ஏற்ப உயர்ந்தும், தாழ்ந்தும் பீப்பா ஒன்று அசைவதுபோலத் தெரிந்தது.

அவிழ்த்துப்போடப்பட்ட துணி குவியலாய்க் கிடந்தது. அதைக்கூட அணிய முடியாமல், களைத்துப் போய் தூங்கிப்போனான். மரக்கட்டிலில் அவன் பக்கமாய் பூக்கள் சில உதிர்ந்துகிடந்தன. கசங்கிய பூக்கள். கிராம அதிகாரி ஏன் களைத்துப்போனான் என்பதற்கு சாட்சிகளாகக் கிடந்தன.

அப்போதுதான் மல்லாவுக்கு அந்த யோசனை தோன்றிற்று. அப்படியே இவன் தூங்கிப்போனான் என்றால், இவனுடன் இருந்தவள் வெளியே சென்றிருக்க வேண்டும். வெளியே போயிருந்தால் கதவு மூடியிருக்க வாய்ப்பில்லை.

மல்லா ஜன்னலிலிருந்து விலகி, கதவை நோக்கிச் சென்றான். மெல்லத் தள்ளினான். தள்ளியதும் கதவு விரிந்து அவன் நினைப்பை உறுதி செய்தது.

மல்லா பின்புறமாய்த் திரும்பிப்பார்த்து தன் கட்டைவிரலை உயர்த்திக் காண்பித்தான். பூலானும், வேராவும் முகம் மலர்ந்தார்கள். மல்லா மெல்லச் சொன்னான்: "சாவதற்காகவே காத்திருக்கிறான்!"

இப்போது மூவரும் அறைக்குள் புகுந்து கட்டிலைச் சுற்றி நின்றனர். பூலானுக்குச் சற்றுச் சங்கடமாக இருந்தது.

மல்லா தன் கைத்துப்பாக்கி முனையை கிராம அதிகாரியின் காதுக்குள் விட்டுக் குடைந்தான்.

சட்டென்று கண்விழித்த கிராம அதிகாரிக்கு தன் கண்முன்பாகத் தெரியும் உருவங்கள் பிரமையா என்று சந்தேகம் வந்துவிட்டது. கண்களை இறுகமூடிவிட்டு மீண்டும் திறந்தான். தூக்கக் கலக்கத்தில் எல்லாமே குழப்பமாகத் தெரிந்தன.

"சத்தம் போட்டால் இரத்தம் சிந்துவாய்." என்றான் மல்லா. குரலைக் கேட்டதும்தான் கிராம அதிகாரிக்கு தான் காண்பது பிரமையல்ல என்று புரிந்தது.

மல்லாவின் எச்சரிக்கையை அவனது அதிர்ச்சி புறக்கணித்தது. 'ஆ'வென்று வாய்பிளந்தது. பிளந்த வாய்க்குள் மல்லா கைத்துப்பாக்கி முனையைச் செருகினான். உள்ளே தொண்டைவரை சென்று முனை தொட்டு தொட்டு அசைந்தது. அவன் சத்தம் தொண்டைக்குள்ளேயே அடங்கி நின்றது.

"என்ன.... கத்துவியாடா நாயே?" என்று கேட்டான் மல்லா. கிராம அதிகாரியின் கண்கள் இரண்டும் தனியாகத் துள்ளி வெளியே வந்துவிடும்போலத் தெரிந்தன.

பூலான் எதுவும் கேட்க முன்னரே: "அம்மா புத் புத்." என்று தடுமாற,

"தாய் புத்லிபாய்" என்றான் மல்லா சிரிப்பை மறைத்துக்கொண்டு.

"தாயி.... புத்...புத்லி... புத்லிபாய் என்னை என்... என்னை ஒன்றும் பண்ணாதே தா...தாயி. உன் அண்ணன் மையாதீன்தான் என்னை.... என்னை உனக்கு.... உனக்கெதிராக தூண்டிவிட்டான்....சத்தியம் தாயி!"

"தூ"அவன் முகத்தில் காறித்துப்பினாள் பூலான். "வேசி மகனே, எத்தனை பெண்களையடா நாசப்படுத்தி இருப்பாய்? நாறிச் சாகிற வயதில் உனக்கு பொட்டைப் புள்ளைகள் கேட்குதாடா நாய்க்கு பிறந்தவனே!"

கண்மண் தெரியாத கோபத்தில் கைத்துப்பாக்கி முனையால் பூலான் அவன் முகத்தில் குத்தினாள்.

'நச்'

"ஐய்...யோ" என்று அவன் முகத்தைப் பொத்திக்கொண்டான். அதற்கிடையே அவன் மூக்குடைந்து தெறித்த இரத்தம் பூலானின் முகத்தில் பட்டது.

அந்த இரத்தத்தை தன் விரல்களால் வழித்துத்துடைத்த பூலான், இரத்தமான விரலைக் காட்டிச் சொன்னாள்: "இரத்தமடா இரத்தம். இந்த இரத்தம் கூடித்தானே ஆடினாயடா நாயே!"

கிராம அதிகாரி மடங்கி அமர்ந்தான். மூக்கை பொத்தி வழியும் இரத்தத்தை கட்டுப்படுத்துவதா, வெட்கத்தை மறைக்க பொத்திக்கொள்வதா, என்று தடுமாறினான் கிராம அதிகாரி. இரத்தம் அவன் உதட்டிலும் ஒழுகி வாய் கசந்தது. நாவால் உதடுகளை தடவிக்கொண்டான். இயல்பாகவே அவன் கைகள் இடுப்புக்கு கீழ் பொத்திக்கொண்டன.

மல்லா பூலானின் காதுக்குள்: "நேரமாகிறது பூலான். இவனுடன் தாமதிப்பானேன்?" என்றான்.

பூலான் கிராம அதிகாரியை, தன்னால் கொல்லப்படப்போகும் புழுவைப் பார்ப்பது போல பார்த்தாள்.

அவள் பார்வை அவனது பொத்திக் கொண்டிருந்த கரங்கள்மீது சென்றன.

"கைகளைத் தூக்கடா."

கிராம அதிகாரிக்கு தனது சாவு நிச்சயம் என்பது புரிந்துவிட்டது. எப்படி மன்றாடினாலும் மரணம் உறுதி என்பது தெரிந்துவிட்டது.

சாவது நிச்சயம் என்று தெரிந்துபோனதால் கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்க நினைத்தான்.

'கத்தமாட்டேன்' என்பதுபோல தலையை இருபுறமும் ஆட்டினான்.

அவன் கண்களில் அச்சம் இருந்தது. அவன் கண்களில் கெஞ்சல் தெரிந்தது. அவன் கண்களில் யார் இவர்கள்? என்ற கேள்வி இருந்தது. தன்னை என்ன செய்யப் போகிறார்கள்? என்ற கிலி இருந்தது.

கைத்துப்பாக்கியை அவனது தொண்டைக்குழாயில் இருந்து விலக்கினான் மல்லா. "எழுந்திருடா நாயே!" என்றான். மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன்போல கிராம அதிகாரி எழுந்து அமர்ந்தான். அமர்ந்தவன் அப்போதுதான் தனது நிர்வாணக்கோலத்தை நினைத்தான். இடுப்புக்குக்கீழே இரு கைகளாலும் பொத்திக் கொண்டான்.

"பூலான் நீ கணக்கைத் தீர்த்துக்கொள்" என்றான் மல்லா. பூலான் என்றதும் அந்தப் பெயரை எங்கோ இதற்கு முன்பாக கேட்டிருக்கிறோமே, எங்கே... எங்கே... எங்கே என்று தன் நினைவு இடுக்குகளில் கிராம அதிகாரி தேடிப்பார்த்தான்.

நினைவுக்கு வந்துவிட்டது. ஒரு நாளாவது பூலானையும் அனுபவித்துவிட வேண்டும் என்று எத்தனையோ நாள் நினைத்திருக்கிறான். அதனால் விரைவாக நினைவுக்கு வந்துவிட்டது. கூடவே, பூலான் கொள்ளைக் கூட்டத்தாருடன் சேர்ந்துதிரிகிறாள் என்று அறிந்த கதைகளும் ஞாபகத்திற்கு வந்தன.

'பூலான்' என்று மல்லா அழைத்த பக்கமாய் தன் கிலிபடர்ந்த விழிகளைத் திருப்பினான் கிராம அதிகாரி.

பூலானிடம் இப்போது பழிவாங்கும் உணர்ச்சி புற்றுக்குள் இருந்து மெல்ல மெல்லத் தலைநீட்டும் பாம்பாக எழுந்து... எழுந்து... உயர்ந்து படமெடுத்தாடத் தொடங்கியிருந்தது.

கிராம அதிகாரி ஒரு பெண்ணுடன் சல்லாபித்ததைக் கண்டநாளில் இருந்து, அவன் பற்றிய ஒவ்வொரு சம்பவமும் மனக்கண் முன்பாக தோன்றிக் கொண்டிருந்தன. அந்த நேரம் அவன் தன்னைப் பார்க்கவும், கோபம் பாம்புச் சீறலாய் புஸ் என்று கிளர்ந்தது.

"என்னடா பார்க்கிறாய்?" என்றபடி கைத்துப்பாக்கியை உருவிக்கொண்டு பூலான் முன்னேவர, 'இவளா அது. அந்தச் சின்னப் பெண்ணா இவள்?' என்ற ஆச்சரியம் கிராம அதிகாரியின் முகத்தில் இருந்த சவக்களையையும் மீறி வெளிப்பட்டது.

"எழுந்து நில்லடா. புத்லிபாயின் அவதாரமடா!" என்று அவன் மார்பில் காலால் உதைத்தான் மல்லா.

பொத்திய கைகளை விலக்காமல் எழுந்து நின்ற கிராம அதிகாரியின் தேகம் வியர்வையில் குளித்திருந்தது. அவன் கால்கள் நிலையாக நிற்கமுடியாமல் நடுங்கிக் கொண்டிருந்தன.

பூலானின் கைத்துப்பாக்கிமீது அவன் பார்வை சென்றது. பாய்ந்து துப்பாக்கியை பறித்துக்கொண்டு பூலானையும் கட்டிப்பிடித்து அமுக்கிக்கொள்ளலாம். 'பூலான் என் பிடியில் இருந்தால் மற்றவர்கள் இருவரும் மண்டியிடவேண்டியதுதான்'. துரிதமாக சிந்தித்தான்.

பார்க்கலாம். முடிந்தால் புறப்பட்டுவிட்ட மரணத்தை இடைவழியே நிறுத்திவிடப் பார்க்கலாம்.

தீர்மானித்த நொடியே பூலான்மீது பாய்ந்தான் கிராம அதிகாரி.

ஒரு பெண்தானே என்று இளக்காரமாக பூலானைப்பற்றி நினைத்திருந்தால், அந்த நினைப்புக்காக அவன் வருந்தவே போதிய சந்தர்ப்பம் இருக்கவில்லை.

தன்னை நோக்கி அவன் பாய்ந்தபோதே பூலானின் உடல் உஷாராகி இரும்பாகியது.

நெருக்கமாக அவன் வந்த நொடியில் தன் இடதுகாலை உயர்த்தி அவன் மார்பின் மத்தியில் "டேய்" என்று கத்திக்கொண்டே உதைத்தாள் பூலான்.

அந்த உதையோடு பின்னடைந்தான் கிராம அதிகாரி.

அதே கோபத்தோடு அவன் இடுப்புக்குக் கீழே கைத்துப்பாக்கியால் சுட்டாள் பூலான்.

-டுமீல்-

துல்லியமான குறி.

வெடியோசைக்குள் கிராம அதிகாரி எழுப்பிய மரண ஓலம் அடங்கிப்போனது.

தன் பீப்பாய் வயிற்றோடு மல்லாந்து சாய்ந்த கிராம அதிகாரி, கடைசியாக ஒரு துடிப்போடு கால்களை உதறி அடங்கிப் போனான்.

அவன் இடுப்புக்குக் கீழே இருந்து இரத்தம் வழிந்து தரையை நனைத்தது. அந்த இரத்தம் அவன் செய்த பாவங்களையெல்லாம் கழுவிக்கொண்டு செல்வதுபோல பூலானுக்குத் தோன்றியது.

அப்போது மல்லா சொன்னான்:

"சரியான இடத்தில் சரியான தண்டனை"

சொன்னவன் வழிந்தோடிய இரத்தத்தில் தன் விரலைவைத்து எடுத்து, பூலானின் நெற்றியில் திலகமாய் இட்டான்.

அதுவரை இருந்த இறுக்கமெல்லாம் தளர்ந்த பூலான் மல்லாவை கட்டிக்கொண்டு அவன் தோளில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள்.

அவள் முதுகில் ஆதரவாகத் தடவிக் கொடுத்தான் மல்லா.

"இன்னமும் இருக்கிறது. நான் இருக்கிறேன்" என்றான் காதருகில்.

அவர்கள் கிராமத்தை கடக்க முன்னரே அக் கிராமத்தைவிட்டு இருள் விலக ஆரம்பித்துவிட்டது.

(தொடர்ந்து வரும்)

## ஹொலிபீல்ட்டும் கடியர்தான்

மைக் டைசன்-ஹொலி பீல்ட். இருவரும் உலகக் குத்துச்சண்டைப் போட்டியில் மலைகள். இருவருக்கும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர்.



சம்பத்தில் மைக்டைசனும், ஹொலிபீல்ட்டும் மோதினார்கள். ஹொலிபீல்ட்டை மடக்கிப்பிடித்து அவர் காதைக் கடித்தார் டைசன். முதல் தடவை கடித்தபோது நடுவர் தலையிட்டு தடுத்துவிட்டார். இரண்டாவது தடவை கடியென்றால் கடி, அப்படியொரு கடி. ஹொலிபீல்ட்டின் காதில் ஒரு துண்டு தனியாகி கீழே விழுந்தது.

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் உட்பட குத்துச்சண்டையை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த கோடிக்கணக்கான இரசிகர்கள் அதிர்ந்துதான் போனார்கள்.

அதன்பின்னர் டைசன் கடித்தது சரியா தப்பா என்று உலகெங்கும் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. "காதைக் கடித்தது தவறுதான். மன்னித்துக் கொள்ளுங்கள்." என்று டைசன் சொல்லிவிட்டார். ஆனால் சர்ச்சைகள் ஓயவில்லை. முன்னாள் குத்துச்சண்டை வீரர்கள் சிலர் டைசன் செய்தது சரிதான் என்கிறார்கள்.

பிரிட்டனைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர் லொயிட் ஹனிகான் டைசன் செய்தது நியாயம்தான் என்கிறார். "டைசனின் தலையில் ஹொலிபீல்ட் அடித்தார். அதனால்தான் டைசன் அப்படிச் செய்தார். நான் டைசனை குறைகூறமாட்டேன். அந்த இடத்தில் நான் இருந்திருந்தாலும் அதையே தான் செய்திருப்பேன்." என்கிறார் அவர்.

ஜாக்கி வின்டர்ஸ் என்னும் குத்துச் சண்டை வீரர் புதிய தகவல் ஒன்றை வெளியிட்டு ஹொலிபீல்ட்டை சாடுகிறார்.

ஜாக்கி வின்டர்ஸும் ஹொலிபீல்ட்டும் 17 வருடங்களுக்கு முன்னர் 'கோல்டன் குளுவ்ஸ்' அரை இறுதிப் போட்டியில் மோதினார்கள்.

அதில் இரண்டாம் சுற்றின்போது ஹொலிபீல்ட் ஜாக்கியின் தோள்பட்டையில் கடித்தாராம். "வாயில் வைக்கப்படும் கவச சாதனத்தை 'தூ' என்று துப்பிவிட்டு என் தோள்பட்டையைக் கடித்தார் ஹொலிபீல்ட். கடித்துவிட்டு, நான் கடிக்கவில்லை. பல் பதிந்திருக்கிறதா காட்டுங்கள் பார்ப்போம் என்று சவால்விட்டார். என்றாலும் அந்தப் போட்டியில் ஹொலிபீல்ட்டுக்கு ஒரு புள்ளி அபாராதம் கிடைத்தது." என்று நினைவூட்டியுள்ளார் ஜாக்கி.

எப்படியோ சர்ச்சை தொடர்கிறது. குத்துகள் போதாது என்று கடிக்கவும் ஆரம்பித்தால் ஆளாளுக்கு தடுப்பூசி போட்டுக் கொண்டுதான் கோதாவில் இறங்க வேண்டியிருக்கும்.

## "பூலானை கைது செய்யாதீர்"



பூலான்தேவியை கொலை வழக்குகள் தொடர்பாக மீண்டும் கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டதல்லவா. அப்போது பூலான் தேவிக்கு ஆதரவாக பல நாடுகளில் ஆதரவு அமைப்புக்கள் உருவாகின. பூலானை கைது செய்யக்கூடாது என்று கோரிக்கையும் விட்டிருந்தன.

இப்போது பூலான்தேவியின் மாநிலமான உத்தரப்பிரதேச முதல்வராக இருப்பவர் மாயாவதி. பெண் ஒருவரே முதல்வராகியிருப்பதால் சர்வதேச பூலான்தேவி ஆதரவு அமைப்பு சார்பாக அவருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

"நீங்களும் ஒரு பெண்தான். இன்று ஒரு பெண் என்றரீதியில் பூலான்மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தும் தீயசக்திகளின் பேச்சைக் கேட்காதீர்கள். இன்று பூலான், நாளை நீங்களாகவும் இருக்கலாம். உங்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு இந்தத் தீயசக்திகள் நாளை கேட்கலாமல்லவா?

ஒரு பெண் என்பதால் பூலானை ஆதரிக்க வேண்டியது உங்கள் கடமை. யார் தூண்டுதலுக்கும் செவிசாய்க்காதீர்கள்." என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைந்துகொண்டிருக்கிறார் மாயாவதி.

## ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்

இந்தியாவில் உள்ள பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்குச் சென்ற மாதம் ஒரு தம்பதியினர் வந்தனர். அவர்களது கையில் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள்.



குழந்தைகளைப் பிரித்துத் தர வேண்டும் என்று டாக்டர்களிடம் கெஞ்சினார்கள்.

முதலில் சற்றுத் தயங்கினாலும் பின்னர் மருத்துவமனை நிர்வாகம் இரட்டைக் குழந்தைகளை அனுமதிக்க முன்வந்தது.

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கு தலை, கை-கால்கள் எல்லாம் தனித்தனியாக இருந்தன. இடுப்புப்பகுதி மட்டும் இரண்டுக்கும் பொதுவாய் ஒட்டிக் கொண்டிருந்தது. தனித்தனி சிறுகுடல் இருந்தபோதிலும் பெருங்குடல் மட்டும் இருவருக்கும் பொதுவாக இருந்தது.

வேறு சில உறுப்புக்கள் இடம் பிறழ்ந்து அசாதாரண நிலையில் இருந்தன. இன்னும் சில உறுப்புக்கள் இருவருக்கும் பொதுவாக இயங்கின.

டாக்டர் யோகேஷ் சரீன் என்ற 33 வயது இளைஞர், 7 மாதமே ஆன இரட்டையரை ஆபரேஷன் மூலம் வெற்றிகரமாகப் பிரித்தெடுத்தார். இரண்டு குழந்தைகளுமே இப்போது நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கின்றன.

"இப்போது இந்தக் குழந்தைகளுக்கு பிறப்பு உறுப்புப் பாதை இல்லை. அதேபோல மற்றவர்களுக்கு உள்ளது போல் சிறுநீர்க் குழாயும் இல்லை. இவற்றை ஆபரேஷன் மூலம் உருவாக்க வேண்டும். இதை இவர்கள் பெரியவர்கள் ஆனபிறகுதான் செய்ய வேண்டும். இப்போது தேவையில்லை".

இப்படி டாக்டர் சரீன் விளக்குகிறார்.

இதுபோல சயாமீஸ் இரட்டைக் குழந்தைகளைப் பிரித்தெடுக்கும் ஆபரேஷன் உலகிலேயே இதுவரை 12 முறை தான் நடந்திருக்கிறது. இதிலும் சரிபாதி ஆபரேஷனில் வெற்றி கிடைக்கவில்லை.

## விளம்பர விளையாட்டு

புரியவேண்டிய விஷயங்களைக்கூட கிளுகிளுப்பான விளம்பரங்கள் மூலம்தான் புரியவைக்கிறார்கள்.

உடம்பை இறுக்கமாகக் கவ்விக் கொண்டு நெளிவு சுழிவுகளை வெளிப்படுத்தும் குட்டைப் பாவாடை சட்டை அணிந்து ஒரு ஜப்பானியப் பெண் நடந்து செல்கிறார். நடையா இது நடையா என்று பாடாத குறையாக ஆண்களின் கண்கள் அவர்மீது மொய்க்கின்றன.

முதலில் முகத்தைப் பார்க்கும் கண்கள் பின்னர் கீழிறங்கி மார்பைப் பார்த்து வியக்கின்றன. இப்படி உற்றுப் பார்க்கிறார்களே என்று பார்த்தால், அது ஒரு புற்றுநோய் அமைப்பு வெளியிட்ட விளம்பரம். உங்கள் மார்பகங்களை புற்றுநோயிடம் இருந்து பாதுகாத்து பத்திரப்படுத்துங்கள் என்பதை சொல்லத்தான் அத்தனை முன்




ஏற்பாடுகள். வெளிநாட்டு தொலைக்காட்சியான எம்.ரி.வியில் (நம் நாட்டில் உள்ளதல்ல) இப்படி பல ரகமான விளம்பரங்கள் காண்பிக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com





## நேற்று – இன்று

↑ இரண்டாம் உலகப் போரில் உலகையே ஆட்டிப் படைத்தவர் ஹிட்லர். அன்று ஹிட்லரின் பெயர் கேட்டால் அகிலமே நடுங்கும். இப்போது அதே ஹிட்லரை கோமாளி மாதிரி கிண்டல் செய்து ஊர்வலம் நடத்துகிறார்கள்.

பெலாருஷ் தலைநகரமான மின்ஸ்க் 930 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. ஜூலை 4ம் திகதி அந்த விழா நடந்தது. அந்தத் தேதியில்தான் ஹிட்லரின் படைகளிடம் இருந்து மின்ஸ் நகரம் மீட்கப்பட்டது. அதனால் இரண்டையும் ஒன்றாகக் கொண்டாடிவிட்டார்கள். ஹிட்லரின் தலையை பிரமாண்டமாகச் செய்து வண்டியில் வைத்து ஊர்வலம் நடத்திய காட்சிதான் இது. அடக்க நினைப்பவர்களை மக்கள் என்றும் மறப்பதில்லை.

## மீனின் வயிற்றுக்குள் அபாயம்



மீன் பிரியர்களுக்கு ஒரு எச்சரிக்கையான ஆனால் ருசிகரமான செய்தி. சிங்கப்பூரில் நடந்த சம்பவம் இது.


திரு. ரிச்சார்ட் பூன், அவரது மனைவி, அவர்களது மகன், பணிப்பெண் ஆகியோர் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது திரு. பூனின் தொண்டையில் ஏதோ ஒரு பொருள் சென்று அடைத்துக்கொண்டது போலிருந்தது. மூச்சுத் திணறிப்போனார் பூன். ஒரு விதமாக மாட்டிய பொருளை வெளியே எடுத்துவிட்டனர். அது ஒரு இரும்புத் துண்டு.

எப்படி வந்தது என்று ஒரே சந்தேகம். சமைத்து வைத்த மீனை வெட்டிப் பார்த்தபோது அதிர்ச்சியோ அதிர்ச்சி. அவற்றின் உள்ளே மேலும் சில இரும்புத்துண்டுகள், கதிகலங்கிப் போனார்கள்.

பின்னர் விசாரணை தொடர்ந்தது. அந்த மீன்களை திரு. பூனின் வீட்டார் சிங்கப்பூர் பொத்தோங் பாசிரில் உள்ள மீன் கடையில் வாங்கினார்கள். அந்த மீன் கடைக்காரரிடம் கேட்டபோது அதிர்ச்சி தகவல் வெளியானது.

மொத்த விற்பனையாளர்கள் மீனின் எடையைக் கூட்டுவதற்காக அதன் வயிற்றுக்குள் இரும்புத் துண்டுகளை செருகி விடுகிறார்களாம். எப்படி வாய்வழியாக உள்ளே செலுத்துகிறார்கள் என்பதையும் விளக்கியுள்ளார் கடைக்காரர்.

பூன் வீட்டார் வாங்கிய மீன்களில் இருந்த இரும்புத் துண்டுகளின் மொத்த எடை 50 கிராம். எதற்கும் நம் நாட்டு மீன் பிரியர்களும் சற்று விழிப்பாக இருத்தல் நலம். ■



மீனின் வயிற்றில் இருந்த இரும்புத்துண்டுகள்

## போகாது ஊர் கோலம்

↓ என்ன இது புதுவித ரயில் என்று புகுந்து பார்த்தால், ஆச்சரியம் காத்திருக்கிறது. இது அசையாது. நகராது. ஆசைதீரப் பார்க்கலாம். ஏனெனில் இதனை செங்கற்களால் கட்டி இருக்கிறார்கள். வீடு கட்டுவதுபோல செங்கற்களால் இந்த ரயிலை கட்டியிருப்பவர் டேவிட் மார்க் (41). இன்று உலகில் உள்ள சிற்பிகளில் முதன்மையானவர். இங்கிலாந்தைச் சேர்ந்தவர். பயணிகள் போக்குவரத்து ரயிலின் பிறப்பிடமான டார்லிங்டன் நகரில் 36 பணியாட்கள் உதவியுடன் இதனை பிரமாண்டமாகக் கட்டி முடித்தார். இதற்கான செலவு கிட்டத்தட்ட நாலு கோடி ரூபாய்கள்! ரயில் என்ஜின்மீது கொடியுடன் காட்சிதருபவர்தான் சிற்பி டேவிட் மார்க். ■



## தகவல் பெட்டி



## தோகை இளமயில்

↑ பெண்களைத்தான் மயில் என்பர். மான் என்பர். இவரோ இளம் வாலிபர். முடிமட்டும் மயில் தோகை மாதிரி விரிந்திருக்கிறதல்லவா. இதுவும் ஒரு ஸ்ரைல்தான். ஒரு பக்க முடியைமட்டும் உழவாரத்தால் செதுக்கிய புல் மாதிரி சுத்தப்படுத்திவிட்டார்.

இந்த ஆண் மயில் தோகை விரித்திருப்பது மழை மேகம் கண்டதல்ல, யார்மீது மோகம் கொண்டும் அல்ல. ஹொலண்ட் நாட்டில் உள்ள ஆம்ஸ்டர்டாங் நகரில் ஐரோப்பிய உச்சநிலை மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் ஒருவர்தான் இவர். காதில் சேஃப்ரிபின் தோடு கழுத்தில் நாய்ச்சங்கிலி அணிந்திருந் தது மற்றொரு பாஷன். இப்படியே போனால் நாய்களின் சங்கிலிமீதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டியிருக்கும். ■

## குலை நடுங்கும் கோர விபத்து



➡ மொறுமொறுவென்று பொரித்த அப்பளம் நொறுங்கியதுபோல கிடக்கிறதல்லவா இந்தக் கார். இக்காருடன் பயங்கரமாக மோதிய யமன் ஒரு லொறி. இக் கோர விபத்து நடைபெற்றது சிங்கப்பூரில் உள்ள தீவு விரைவுச் சாலையில்.

காரே அப்பளமாய் நொறுங்கியிருக்கிறது. உள்ளே இருந்தவர்கள் கதி என்னாகியிருக்கும்? காரைச் செலுத்தியவர் ஒரு பெண்மணி. பெயர்: திருமதி லிம் வய்டெங். இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். இருவரும் காரின் பின்புற ஆசனத்தில் இருந்தனர். ஒன்று கைக் குழந்தை. பின்புறமிருந்த குழந்தைக்கான ஆசனத்தில் இருந்தது குழந்தை.

யார் செய்த புண்ணியமோ கைக்குழந்தையும், மற்றைய பெண்பிள்ளையும் அதிசயமாக சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். காரைச் செலுத்திய திருமதி லிம் மட்டும் பரிதாபமாக மாண்டுபோனார்.

குழந்தைக்கு முகத்திலும் கால்களிலும் காயங்கள் ஏற்பட்டன. இருவரும் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காருக்குள் சிக்கியவர்களை மீட்க பெரிய கத்தரி சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. வீதியில் வந்த மரணதூதன்தான் அந்த லொறியோ? ■



படிப்பகம்

www.padippakam.com

## 'ட்ரிபிள் எக்ஸ்'

ஷாம்பு தயாரிக்கும் நிறுவனம் ஒன்று ரம்பாவை தமது விளம்பரம் படத்தில் நடிக்க அழைத்தது. அலையடிக்கும் கூந்தலோடு ரம்பா நீராடுவதாகக் காட்சி.

ஐந்து நட்சத்திர ஹோட்டலின் நீச்சல் குளத்தில் படப்பிடிப்பு வைத்திருந்தனர். குறிப்பிட்ட நேரத்துக்கு ரம்பா அங்கே வந்துவிட்டாலும், படப்பிடிப்புக் குழுவினர் தயங்கி நின்றார்கள். காரணம் ரம்பா அணியவேண்டிய நீச்சல் உடை மிகச் சிறியதாக இருந்தது தான்.

அவர்களின் தயக்கத்தைப் புரிந்து கொண்ட ரம்பா தைரியம் கொடுத்தாராம். அடுத்த விநாடி அவர்கள் தயக்கம் கலைந்து உடையைக் கொடுத்திருக்கிறார்கள். சின்ன உடையோடு மான்போலக் குதித்து மின்போல நீந்தினாராம் ரம்பா.

ரம்பாவைப் பற்றி மற்றொரு தகவல்; பூ நடிகையின் மணாளராகப் போகிறவர் ரம்பாவை செல்லமாய் 'ட்ரிபிள் எக்ஸ்' என்று தான் அழைக்கிறாராம். 'ட்ரிபிள்எக்ஸ்' என்றால் 'அந்த' மாதிரிப் படங்களைக் குறிக்கும் அடையாளம்.

திரையுலக மறுபக்கம் 12

மித்ரவாசு

# நடிகைக்குக் கொடுத்த நெக்லஸ் ஒளிப்பதிவாளருக்கு உதை!

பழைய மூன்றெழுத்து நடிகர் அவர். அவரது மனைவியும் ஒரு நடிகை. பெயரில் ஜெயம் கொண்ட நடிகைமீது நடிகருக்கு ஒரு கண். அவருக்காகவே ஒரு படம் தயாரித்தார். அதில் நடிகரின் மனைவிக்கு சீரியசான வேடம். கதாநாயகி 'ஜெய' நடிகை. அவரைக் கிளாமராக நடிக்கவைத்தார்.

ஊட்டியில் வெளிப்புறப் படப்பிடிப்பு வைத்தார் நடிகர். மனைவியை அழைத்துச் செல்லவில்லை. கதாநாயகியை அழைத்துப்போனார், தன் சாகசங்களை ஒவ்வொன்றாக எடுத்துவைத்தார். கதாநாயகி 'எஸ்.. எஸ்... சார்' என்று சொல்லி சம்மதிப்பார் என்று நடிகர் நினைத்தார்.

படப்பிடிப்பு இல்லாதபோது நாயகர் நாயகியை விழுந்து விழுந்து உபசரித்தார். நாயகி விரும்புவதெல்லாம் தெரிந்து பரிசுப் பொருட்களை வாங்கிக் கொடுத்தார்.

ஒரு கட்டத்தில் விலை உயர்ந்த நெக்லஸ் ஒன்றை நாயகர் பரிசளித்தபோது நடிகை அதிர்ந் போனார். நாயகர் இப்படி அலைகிறாரே என்று நினைத்தார். அந்த நெக்லஸின் விலை நடிகை பெ சம்பளத்திற்கு ஈடானதாகும்.

தான் இவ்வளவு செய்தும் 'ஜெயம்' கிடைக்கவில்லையே என்று நடிகர் தவிப்புத் தாங்க முடியாம ஒருநாள் நேரடியாகவே கேட்டுவிட்டார்.

நடிகை என்ன சொல்லப் போகிறாரோ என்று நடிகர் பயந்துகொண்டிருக்க, நடிகையே 'அதற்கென்ன' என்று சுலபமாக ஒரு வார்த்தை சொன்னதும், நடிகருக்கு 'சப்'பென்று போய்விட்ட

இதற்காகவா இத்தனைதூரம் முயற்சித்தோம் என்று நினைத்தவர், மறுபக்கம் பிரச்சனையின் முடிந்ததே என்று மகிழ்ந்து போனார்.

ஆனால் இந்த விடயம் நடிகரின் மனைவிக்குத் தெரிந்தது. தன்னை மணந்துகொண்டபின்ன இவ்வளவு விலை உயர்ந்த நெக்லஸ் பரிசளித்ததில்லை என்று மனைவி சண்டைபோட, அ பெரிதாகியதால் இருவரும் பிரிந்துபோயினர்.

**பி.கு:- நடிகரின் பெயர் 'எஸ்' என்று தொடங்கும். அவரது மனைவியின் பெய 'குமாரி' என்று முடியும். கதாநாயக நடிகை நடிப்புலகில் மட்டுமல்லாமல் வே துறைகளிலும் இன்றுவரை பிரபலமானவர்.**



விக்னேஷ்-தேவயானி
படம்:-காதலி

## மற்றொரு 'ஜெயம்'

இது மற்றொரு ஜெய நடிகை பற்றியது. 'தேவி'யான அந்த 'ஜெய' நடிகை பத்திரிகையாசிரிய ஒருவரது சொந்தப் படத்தில் அறிமுகமானவர். சிறிதுகாலம் அப் பத்திரிகையாசிரியரின் அன்பி திளைத்தவர்.

ஸ்ரீபிரியாவுடன் 'நட்சத்திரம்' என்ற படத்தில் ஜோடியாக நடித்த தெலுங்கு நடிகரா ஹரிபிரசாத் நடிகையின் வலையில் விழுந்தார். கணவன், மனைவியாகினர்.

ஹரிபிரசாத் கதாநாயகனாக நடிக்க ஜெய நடிகை அப்படத்தை இயக்கினார்.

புலிகளின் தலைவரது பெயரைக் கொண்ட ஒளிப்பதிவாளர்தான் அப்படத்திற்கு ஒளிப்பதி பெரியாரின் சீடர் என்பார் அந்த ஒளிப்பதிவாளர். ஆனால் போதை வஸ்துகள் முதல் அத்தனை கெட்ட பழக்கங்களும் அவருக்கு அத்துப்படி. இந்தப் பழக்கங்கள் நடிகையையும் தொற்றி கொண்டது. அதனால் தனது அடுத்த படத்திலும் அவரையே ஒளிப்பதிவாளராகப் போட்டார் நடிகை ஹரி பிரசாத் அதில் நடிக்கவில்லை.

ஜெயத்துக்கும் ஒளிப்பதிவாளருக்கும் இடையே நெருக்கம் அதிகமாகிவிட்டது. இது ஹ பிரசாத்துக்கும் தெரியவந்தது.

ஒருநாள் வெகு நேரமாகியும் நடிகை வீடு திரும்பாததால், சந்தேகப்பட்ட ஹரிபிரசாத் நேரா மற்றொரு அபார்ட்மெண்டுக்கு சென்றார். நடிகர் சங்க கட்டடம் அருகே ஜெய நடிகை புதிதா வாடகைக்கு எடுத்திருந்த அபார்ட்மெண்ட் அது.

அங்கே சென்ற ஹரிபிரசாத் நடிகையும், ஒளிப்பதிவாளரும் மது அருந்தியபடி நெருக்கமா நிலையில் இருப்பதைப் பார்த்தார். ஆத்திரத்துடன் ஒளிப்பதிவாளரை அடித்து உதைத்தா அதைக் கண்ட நடிகை வெளியே ஓடினார். ஒளிப்பதிவாளரை அவரது நண்பர்க மருத்துவமனையில் சேர்த்தனர்.

பின்னர் 'ஜெய' நடிகையும் ஹரிபிரசாத்தும் பிரிந்தனர். இப்போதும் 'தேவியா 'ஜெய' நடிகை படத்தயாரிப்பை தொடர்கிறார். அவரது மோசடிகளு தொடர்கிறது.

## வாய்ப்புத்தேடும் மும்பாய் நடிகை

பூஜாபட், பூஜாபேடி, பூஜாபட்ரா என்ற பெயர்களில் நடிகை இருப்பதால் ஒரே பெயர்க் குழப்பம்.

இங்கு அலாதியாக போஸ் கொடுப்பவர்தான் பூஜாபட்ரா. 'ஆ படத்தில் 'அய்யோ அய்யய்யோ' பாடலுக்கு வந்து குலுங்கிவிட்டுப் போன இவர்தான். 'சுட்டிக் குழந்தை' படத்தில் நாகர்ஜுனுடன் ஒரு பாடல்காட்சி ஆடியுமிருக்கிறார். மும்பாயில் பூஜாபட்ராவுக்கு வரிசையாகப் படவாய்ப்புக் இல்லையே தவிர, கியூவரிசையில் காதலர்கள் இருக்கிறார்கள் என்கி மும்பாய் சினிமா பத்திரிகை.

தமிழில் மும்பாய் நடிகைகள் கொடிகட்டிப் பறப்பதால் பூஜாபட்ரா தமிழ்ப் படவுலகம்மீது குறிவைத்து நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார் பூஜாபட்ரா வலை வீசியிருப்பது பிரபல தயாரிப்பாளர் குஞ்சுமோனு 'ரட்சகன்' படத்தில் சுஷ்மிதா சென்னுக்கு வாய்ப்புக் கொடுத்ததுபே தனக்கும் வாய்புத் தருமாறு கேட்க சென்னை விஜயம் செய்த குஞ்சுமோனையும் தனியாகச் சந்தித்து நீண்டநேரம் பேசியுள்ளார்

அதனால் விரைவில் மற்றொரு மும்பாய் நாயகி தமிழ்ப் பட உலகு கவர்ச்சிப் புயல் வீச வரப்போகிறார். பராக் பராக்.

## பூனைப் பிரியை

ஒரு முக்கியமான செ நடிகைகள் நாய் வளர்ப பழைய செய்தி நடிகை யாணி வித்தியாச பூனை வளர்க்கி கறுப்பு நிறப் பூ படப்பிடிப்பு லாத நாட் பூனைபே தான்பே பே க

## மினிசினி

* 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தைத் தயாரித்த கங்கா கௌரி புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படமொன்றை புதிய இயக்குநர் அமர்நாத் என்பவர் இயக்கவுள்ளார். இதில் பிரபு-பார்த்திபன் இருவரும் இணைந்து நடிக்கின்றனர்.
* 'புதியராகம்' படத்தை இயக்கிக் கதாநாயகியாக நடித்த ஜெயசித்ரா நீண்ட இடைவெளிக்குப் பின்னர் புதிய படமொன்றை இயக்கத் திட்டமிட்டிருக்கிறார். இது இவரது சொந்தத் தயாரிப்பாகும்.
* கே.பாலச்சந்தரிடம் உதவியாளராகப் பணியாற்றிய சரன், தற்போது பாலச்சந்தர் தயாரிக்கும் 'காதல் மன்னன்' படத்தை இயக்கி வருகிறார். இவர் அடுத்து இயக்கும் படத்தையும் பாலச்சந்தரே தயாரிக்கவுள்ளார்.
* சுரேஷ்கோபி-ஷோபனா நடித்த மலையாளத்தில் வெற்றி பெற்ற 'ராஜபுத்ரன்' என்ற படம் தமிழில் 'அரண்மனை வாசல்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இப்படத்தில் விக்ரம்-வினிதா ஜோடியும் நடித்துள்ளார்கள்.
* 'ராஜபார்வை' படத்தில் சின்னக் கமலாக நடித்த கமலின் அக்கா மகன் கௌதம், விரைவில் தமிழில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இவரை கதாநாயகனாக அறிமுகப் படுத்தப் போகிறவன் யார் தெரியுமா? கமல்தான்.
* 'கிழக்குமுகம்', 'பூமணி' படங்களில் நடித்த ரேஷ்மாவுக்கு தமிழில் படவாய்ப்புக்கள் அவ்வளவு இல்லை. அண்மையில் இவர் 'கள்ளிக்குறிச்சியிலே குடும்பமேளா' என்ற மலையாளப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
* நடிகர் திலகம் 'நவராத்திரி' படத்தில் ஒன்பது வேடங்களில் நடித்தார். மக்கள் திலகம் 'நவரத்தினம்' படத்தில் ஒன்பது நாயகிகளுடன் நடித்தார். இப்போது மன்சூர் அலிகான் தயாரித்து நடிக்கும் 'வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு' படத்தில் ஒன்பது ஜோடிகள் நடிக்கின்றனர்.
* 'டூயட்' படத்தில் வில்லனாக அறிமுகமாகியிருந்தாலும், வசந்தின் 'ஆசை' தான் பிரகாஷ்ராஜிற்கு நல்ல பெயரை பெற்றுக் கொடுத்தது. அதற்கு நன்றிக்கடனாக வசந்த் தற்போது இயக்கும் 'நேருக்கு நேர்' படத்தில் சிறிய வேடம் ஒன்றில் நடித்துள்ளார் பிரகாஷ்ராஜ்.
* 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்தில் அறிமுகமான கௌசல்யாவின் சொந்தப் பெயர் கவிதா. மலையாளத்தில் இவர் நந்தினி என்ற பெயரில் நடித்து வருகிறார்.
* இதுவரை மலையாளம், கன்னடம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் படங்களை இயக்கியுள்ள மணிரத்னம், முதன் முறையாக இந்திப் படமொன்றை இயக்கவுள்ளார். இந்தப் படத்தின் கதாநாயகன் ஷாருக்கான்.

## இடம்பெயர்வு

சங்கவி முன்பு குடியிருந்த வீட்டின் பக்கத்து வீட்டுக்காரர்களின் தொல்லை தாங்க முடியவில்லையாம். அதனால் புது வீட்டுக்கு இடம்பெயர்ந்துள்ளார் இந்த கவர்ச்சிப் புயல்.

புதுவீட்டில் வெகு மகிழ்ச்சியாக இருக்கிறாராம்.



முரளி-சுவாதி
படம்:-கண்டக்டர் மாப்பிளே

## உஷாதான் அவர்

சமீபத்தில் ரூபவாகினியில் தொலைக்காட்சியில் 'ஆகாய கங்கை' படம் ஒளிபரப்பானது. அதில் கார்த்திக்கை விழுந்து விழுந்து காதலிப்பவராக நடித்திருப்பவர்தான் உஷா. டி.ராஜேந்தரின் மனைவி. இப்போது அடையாளமே தெரியாதளவுக்கு பெருத்துவிட்டார். உஷாவை காதலித்து கைபிடித்த டி.ராஜேந்தர் தனது படமொன்றுக்கும் 'உயிருள்ளவரை உஷா' என்று பெயரிட்டார். ராஜேந்தர் தற்போது நடத்தும் சஞ்சிகையின் பெயரும் உஷாதான்.

## ரகுமா கட்டினா

இந்தியாவின் முன்னணி இ யமைப்பாளராக கொடிகட்டிப் பறக்கிற ஏ.ஆர்.ரகுமான். 'எல்லாப் புகழும் இறைவனுக் என்று கூறுபவர் ரகுமான்.

"எல்லாப் புகழும் இறைவனுக்கே என் கூறும் ஏ.ஆர்.ரகுமான் பணத்தை வாங்கி மட்டு தன் பையில் போட்டுக் கொள்கிறார்" என் சத்யராஜ் ஒரு கூட்டத்தில் பேசியிருந்தார். பின்ன தனது பேச்சுக்காக சத்யராஜ் வருத்தம் தெரிவி திருந்தார்.

ஆனாலும் அதனை மனதில் வைத்தே என்னவோ தன் பணத்தில் 'தர்கா' ஒன்ை கட்டிக்கொடுத்திருக்கிறார் ஏ.ஆர்.ரகுமா ஆந்தர மாநிலத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவி இருக்கிறது ரகுமான் கட்டிக்கொடுத்த தர்கா


படிப்பகம்

www.padippakam.com

# காதோடு சொல்லுகிறோம்

மூன்றெழுத்து 'கி' நடிகரை தனது படங்களுக்கு சிபாரிசு செய்கிறாராம் ...தடி நடிகை. முன்னர் இன்னொரு ஆனந்த இளம் நடிகருக்கு சிபாரிசு ...ய்துவந்தார். நடிகர்கள்தான் தமக்கு பிடித்த நடிகைகளை சிபாரிசு செய்து ...ன்பெறுவது வழக்கம். அடிதடி நடிகை விடயத்தில் அவர்தான் தனக்குப் ...த்த இளம் நடிகர்களை தெரிவு செய்கிறாராம். நாயகிக்கு முக்கியத்துவம் ...ள படங்கள் என்பதால் அடிதடி நடிகையுடன் சேர்ந்து நடிக்க முன்னணி ...கர்கள் தயங்குகிறார்கள். அதுதவிர முன்னணி நடிகர்களையும் ஏனைய ...ங்களில் நடிகை அனுசரிக்கமாட்டாராம். தன் கட்டுப்பாட்டில் நடக்கக்கூடிய ...ாம் நடிகர்களை மட்டுமே அவர் சிபாரிசு செய்வதும் ...னால்தான். இப்போது 'கி' நடிகர் அடிதடி நடிகை ... கட்டுப்பாட்டில் இருக்கிறாராம். அதனால் தெலுங்கிலும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது 'கி' நடிகருக்கு.

ஐஸ் நடிகையின் அபரிமிதமான ஒத்துழைப்பால் 'சாந்த' நடிகர்தான் குளிர்ந்து போனார் என்றால், இயக்குநரும் அதே நிலைதானாம். மேலதிகமாகவும் சில நாட்கள் வெளிநாட்டில் தங்கியிருக்க அன்பான கோரிக்கை விடுத்தாராம் இயக்குநர். 'ஐஸ்' மறுப்புத் தெரிவிக்காமல் உடன்பட்டதை நினைத்து அழகுப் போட்டியில் வென்ற அழகர்போல பூரித்து நிற்கிறார் சங்கரமான இயக்குநர்.

சூப்பர் ஸ்டாரின் இறுதிப்படத்தின் 'சவுகரிய' நாயகி சில பழக்க வழக்கங்களை கைவிட முடியாமல் தவிக்கிறாராம். இராக்காலமாகிவிட்டால் கைகால்கள் உதற ஆரம்பிக்கிறதாம். உற்சாக பான உதவியை நாடவேண்டியுள்ளதாம்.

'சின்னப் பசங்கள்கூட நடிக்கமாட்டேன்' என்று சொல்லித் திரிந்த மீன் நடிகை முடிவை மாற்றிவிட்டாராம். அவரும் குருவும் நடித்த படமும் பெட்டிக்குள் தூங்கப் போய்விட்டது. அதனால் 'சின்னப் பசங்கள்' பக்கம் பார்வையை திரும்பியிருக்கிறார். நடிகை.

உல்லாசம் நாயகியான ஈசவரி நடிகை தனக்கு படங்களில் உடை தயாரிப்பவர்களுக்கு கண்டிப்பான உத்தரவு ஒன்று போட்டுள்ளாராம். கவர்ச்சியை வெளிப் படுத்தக்கூடிய பிரதேசங்களை மறைக்கக் கூடாது என்பதுதான் உத்தரவாம். அதையும் மீறி உடைதைத்துக் கொடுத்தபோது உடை தயாரிப்பாளரை இங்கிலீஸ் கலந்து திட்டித் தீர்த்தாராம். பிரபலமான பதினாறு வயதினிலே நடிகையின் சகோதரி நடிகைதான் உல்லாசம் நாயகி.



ராம்கி-சங்கீதா
படம்:-கல்யாண வைபோகம்

## ரம்பா—சிம்ரான் மோதல் இரட்டிப்பு லாபம் அப்பாசுக்கு

'வி.ஐ.பி' படம் திரைக்கு வந்துவிட்டது. படப்பிடிப்பில் நடந்த சுவாரசியமான சங்கதிகளும் வெளியே கசிந்திருக்கின்றன.

வி.ஐ.பி. படத்தில் நடிக்கும்போதுதான் ரம்பாவும் சிம்ரானும் முதன் முதலில் சந்தித்துக் கொண்டனராம். சிம்ரானைப் பற்றி இளம் நடிகர்கள் மத்தியில் கிளு கிளுப்பான அபிப்பிராயம் இருப்பதால், அவரை எப்படியாவது ஓரம் கட்ட நினைத்தார் ரம்பா.

அதனால் படப்பிடிப்பு ஓய்வின்போது சிம்ரானை அப்பாஸிடம் நெருங்க விடாமல் ரம்பாவே அப்பாசுடன் ஒட்டிக்கொண்டு இருந்தாராம்.

ஒரு நாள் சிம்ரான் பார்க்ககூடியதாக அப்பாசின் தொடையில் கிள்ளியிருக்கிறார் ரம்பா. கதிகலங்கிப்போனார் அப்பாஸ். அதனைப் பார்த்தும் பார்க்காத மாதிரிச் சென்றுவிட்டார் சிம்ரான்.

பார்க்காதமாதிரிச் சென்றாரே தவிர பழிவாங்கும் எண்ணத்தை மட்டும் மனதில் வைத்திருந்தாராம். சரியான சந்தர்ப்பத்தில் ரம்பாவை பழிவாங்கக் காத்திருந்தார்.

வி.ஐ.பி. படத்தின் படப்பிடிப்புக்கள் முடியும் இறுதி நாளன்று அப்பாசிடம் விடைபெற்றுச் செல்ல, அவரைத் தேடியிருக்கிறார் ரம்பா. அப்பாஸ் மேக்-அப் ரூமில் இருப்பதாக அறிந்து அங்கு சென்றிருக்கிறார்.

ரம்பா வருவதை தூரத்திலேயே கண்டுவிட்ட சிம்ரான், ரம்பா உள்ளே வரும் நேரமாகப் பார்த்து அப்பாஸை கட்டியணைத்து முத்தம் கொடுக்க, இந்த திடீர் முத்தத்தாலும், ரம்பா அந்த நேரம் வந்துவிட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியாலும் அப்பாஸ் முழி பிதுங்க, அப்போதும் அப்பாஸின் உதடுகளை விடாமல் பற்றிக்கொண்டிருந்தார் சிம்ரான். வந்த வேகத்திலேயே திரும்பிய ரம்பா, படப்பிடிப்புக் குழுவினருக்கு கேட்கக்கூடியதாக தன் உதவியாளரிடம் அங்கு கண்ட காட்சியை விபரித்துக்கொண்டு காரில் ஏறிப் போய் விட்டாராம்.

இந்த மோதலால் படப்பிடிப்புக் குழுவினர் முன்பாக அப்பாஸ் அசடுவழிய, சிம்ரான் மட்டும் எதுவுமே நடக்காததுபோல சென்றுவிட்டாராம். சுவையான மோதல். இரட்டிப்பு இலாபம் அப்பாசுக்கு.

## "நான் மாட்டேன்"

மந்த்ராவை 'செக்ஸ்பாம்' என்று அழைக்கிறார்கள் ரசிகர்கள். மந்த்ராவும் அந்த இமேஜைத்தான் விரும்புகிறார்.

"என்னைப் பொறுத்தவரை என்றைக்குமே நான் பக்திப் படங்களில் நடிக்க மாட்டேன். அப்படி நடித்தால் அது ஆண்டவனுக்கு நான் செய்யும் துரோகம். காரணம், என்னைப் பார்க்கிற ரசிகர்கள் தெய்வமாகப் பார்க்க மாட்டாங்க. வேறு கோணத்தில்தான் பார்ப்பாங்க." என்று சொல்லியிருக்கிறார் மந்த்ரா.

## மறக்க முடியுமா?

ரஜினிகாந்த் சினிமா வாய்ப்புக் கிடைத்த ஆரம்பகாலத்தில் மோட்டார் சைக்கிளில்தான் சென்றுவந்தார். இப்போதும் தனது வீட்டில் அந்த மோட்டார் சைக்கிளை பத்திரமாக பாதுகாத்து வைத்திருக்கிறார். மற்றொரு செய்தி: சென்னை திரும்பிவிட்டார் ரஜினி. விரைவில் புதுப்பட வேலைகளில் குதிக்கலாம்.



பூஜா

"பன்னீரில் ஆடும்
செவ்வாழைக் கால்கள்
பனிமேடை போடும்
பால் வண்ணமேனி
கொண்டாடுதே சுகம் சுகம்
பருவங்கள் வாழ்க!"

சி ணி வி சி ட்



ஐஸ்வர்யாராய்
படம்:-ஜீன்ஸ்

## 'செம்மா'

'காலமெல்லாம் காதல் வாழ்க' படம் சூப்பர் ஹிட். அதனை இயக்கிய ஆர்.பாலு புதிதாக இயக்கும் படம்: 'செம்மா'.

நடிகர் நடிகைகள் பற்றி இன்னமும் முடிவு செய்யவில்லை. தேவா இசையமைக்கிறார். புதிய படநிறுவனமான அய்யப்பா பிலிம்ஸ் இப்படத்தை தயாரிக்கிறது.

## சுஷ்மிதாவின் முத்த மழை

நாகார்ஜுன்-சுஷ்மிதாசென் அமோகமாக இணைந்து நடிக்கும் பிரமாண்டமான படம் 'ரட்சகன்'. படத்தில் ஏகப்பட்ட கிளு கிளுப்பான காட்சிகள் உண்டாம். முன்னாள் உலக அழகி சுஷ்மிதா பூரண ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறாராம். உதாரணத்திற்கு ஒரு காட்சி:

சுஷ்மிதாவும், நாகார்ஜுனும் காதலர்கள். தனிமையில் சந்திக்கிறார்கள். யார் முத்தமிடுவது என்று அவர்களுக்குள் போட்டி நடக்கிறது. போட்டியில் வென்ற நாகார்ஜுன் சுஷ்மிதாவை தன் மார்போடு இறுக அணைத்து, அவரது இதழ்களில் தன் உதடுகளைப் பொருத்தி முத்தமிடுகிறார். கிறங்கிப் போன சுஷ்மிதா சில நிமிட இடை வெளியிக்குப் பிறகு நாகார்ஜுனை முத்தமிடுகிறார். இக் காட்சி படமாக்கப்பட்டபோது படப்பிடிப்பு தளத்தில் பார்வையாளர்கள்யாரும் அனுமதிக்கப்படவில்லையாம்.

## ரகுமான் வழியில்

ஏ.ஆர்.ரகுமான் போலவே விளம்பரப் படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருந்தவர் ரஞ்சித் பரோட். அவர்தான் இப்போது பிரபலமாகியுள்ள வி.ஐ.பி.படப் பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார்.

ரஞ்சித் பிறந்தது பிரிட்டனில், படித்தது மும்பாயில், டிரம்மர், கீ போர்ட் எல்லாம் தண்ணிபட்டபாடம். 'போதி சத்துவ' என்ற பெயரில் தனியாகவே ஒரு இசைக்குழு வைத்திருக்கிறாராம். கிட்டத்தட்ட ஆயிரம் விளம்பரப் படங்களுக்கு இசையமைத்திருக்கிறார்.

## கன்னட ராஜ்

வில்லனாக அறிமுகமாகி கதாநாயகனாக நடித்தவர் ஆனந்தராஜ். அவரது படங்கள் சரியாகப் போகவில்லை என்பதால் மறுபடி வில்லனாகவே நடித்துக் கொண்டிருந்தார்.

இப்போது ஆனந்தராஜ் கன்னடத்தில் யோகம் கண்டிருக்கிறார். நான்கு படங்களில் கன்னடத்தில் கதாநாயகனாக நடிக்கிறார் ஆனந்தராஜ்.

## மீண்டும் கஜோல் ஆஜர்

'மின்சாரக் கனவு' படத்தில் கலக்கிவிட்டு மறுபடி இந்தியில் பிஸியாக இருக்கிறார் கஜோல். மீண்டும் கஜோலை தமிழ்ப் படமொன்றில் தரிசிக்க மாட்டோமா என்று ஏங்கும் கஜோல் பக்தர்கள் கவலையை ஒழியுங்கள். கார்த்திக்குடன் ஒரு புதிய படம் ஒன்றில் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் கஜோல்.

படத்திற்கு இன்னமும் பெயர் சூட்டப்படவில்லை. மணிவண்ணன், கவுண்டமணி ஆகியோரும் நடிக்கவுள்ளனர். இயக்கம்: சாணக்கியன்.

## இதுதான் காதல்

அப்பாஸ் விடயத்தில் ரம்பா-சிம்ரான் இருவரும் மோதிக் கொண்டாலும்கூட அப்பாசிடத்தில் இருவருக்குமே செல்வாக்கு இருக்கிறது. அந்த பட்டியலில் சங்கவியும் உண்டு.

இதற்கிடையே அப்பாஸ் புண்ணியத்தில் தனது சகோதரியை புதிய படம் ஒன்றில் கதாநாயகியாக அறிமுகம் செய்துவிட்டார் ரம்பா. புதிதாக கலக்கப்போகும் ரம்பாவின் சகோதரியின் பெயர் 'அமுல்யா'.

அமுல்யா நடிக்கும் படத்தின் பெயர்: 'இதுதான் காதல்'. ஆனால் ரம்பாவுக்கு வருத்தமான செய்தி என்னவென்றால் 'இதுதான் காதல்' படத்தில் அப்பாசின் ஜோடி. சிம்ரான். படத்தில் மற்றொரு கதாநாயகன் ரமேஷ். இவர் முன்பு 'கள்வன்' படத்தில் நடித்தவர். ரமேஷின் ஜோடியாகத்தான் நடிக்கிறார் அமுல்யா. எப்படியோ வாய்ப்புக் கிடைத்தால் சரிதானே, பின்னர் விவேகத்தால் முன்னேறிக் கொள்ளலாம்.

## மற்றொரு அடி

அமிதாப்பச்சன் தயாரித்து வெளியான படம்: 'உல்லாசம்' அஜித், மகேஸ்வரி ஜோடி. ஜெடி, ஜெர்ரி இரட்டையர் இயக்கிய படம். ஏராளமான செலவில் தயாரானது. ஆனாலும் படுமோசமான அடிவாங்கி தியேட்டர்களை விட்டுக் கழன்றுவிட்டது. அஜித்குமார் மார்க்கெட்டில் மற்றொரு பெரிய அடியாகவும் போய்விட்டது.

'எதிர்பார்த்தளவு வெற்றிபெறவில்லை, ஆனால் தோல்விப்படமல்ல' என்று சமாளிப்புச் சொல்கிறார்கள் படத்தின் இயக்குநர்கள்.



பரத்குமார்-வினிதா
படம்:-விடி வெள்ளி

முகப்பில்
ரம்பா
படம்: பம்பாய் காதலி

சுருதி


படிப்பகம்

www.padippakam.com

# மாத்திரைகளை நாடாதீர்கள்

## மங்கையர் கவனிக்கவும்!

பெண்களுக்கு மாதத்தில்- ஒரு வாரம் வேதனை! படாதபாடு படுவார்கள். வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிலர் துடிப்பார்கள். சிலர் சோர்ந்து போய் உலகத்தையே வெறுத்து விட்டவர்கள் போல் துன்புறுவார்கள். வாடி வதங்கி, வரண்டு கிடப்பார்கள்.

சிறுமி என்ற நிலைமாறி 13, 14 வயதை அடையும் பெண்கள் ஏறத்தாழ 50 வயதுவரை இந்த அவஸ்தைக்குள் ஆளாகி விடுகிறார்கள்.



மாதவிடாய் வருவதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னரே இதற்கான அறிகுறிகள் தென்பட்டுவிடும். ஆரம்பத்தில் சோர்வு ஏற்பட்டு, மனநிலையில் பலமாற்றங்கள் ஏற்படும். எல்லாரோடும் எரிந்து விழுவார்கள். உணவைக் கண்டாலும் வெறுப்பாக இருக்கும். எந்த வேலையையும் செய்ய முடியாது தடுமாறுவார்கள். சிலருக்கு உடலில் சூடு அதிகரிக்கும். கைகால் உளைச்சல் ஏற்படும். நினைவு சூடத்தடுமாறும்.

இத்தகைய நிலை பூப்பெய்தியதிலிருந்து சில வருடங்கள் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் இருக்கும். அதன் பின்னர் பழக்கப்பட்டு, ஓரளவு சமாளித்துக்கொள்ளும் நிலையினை அடைந்துவிடுகிறார்கள்.

இந்த இக்கட்டான காலத்தில் ஏற்படும் உடல் உபாதைகளைத் தீர்த்துக்கொள்ள, பனடோல், டிஸ்பிறின் போன்ற வலி தீர்க்கும் வில்லைகளை அளவு கணக்கில்லாமல் உட்கொள்ளுவார்கள். ஆனால் இத்தகைய மாத்திரைகளால் உடன் நிவாரணம் கிடைத்தபோதிலும், இதனால் பக்க விளைவுகள் தோன்றக்கூடும். மேல் நாட்டு முறை மருந்துகளான மாத்திரைகளை விடுத்து நமது பாட்டிமார் கூறும் பண்டைய முறைகளைக் கையாளுவதே நன்மை பயக்கும்.

பெண்கள் ருதுவானவுடன் அனுபவம் மிக்க எமது பாட்டிமார் உடனடியாக உளுத்தங்களி கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். நல்லெண்ணெய், எள்ளு போன்றவற்றையும் கொடுப்பார்கள்.

இக்காலகட்டத்தில் இப்பிள்ளைக்குத் தரப்படும் உணவுதான், அவள் வளர்ந்து, மணம் முடித்து, தாய்மை அடையும் காலத்தில் அவளுக்குவேண்டிய வலுவைத் தருகின்றது. உளுந்து உடலுக்கு உரம் தருவதுமட்டுமல்லாமல் கருப்பையுடன் கூடிய உறுப்புக்களுக்கு போதுமான உறுதியினையும் தருகிறது.

நல்லெண்ணெய்யும் அதனைத் தரும் எள்ளும் நரம்புகளுக்கு வலுவூட்டுகின்றன. இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்தி உடல் உஷ்ணத்தையும் தணிக்கின்றன. முட்டை வெள்ளைக்கருவும் போதுமான சக்தியைத் தருகிறது.

ருதுவுற்ற பிள்ளைக்கு ஆறு மாதங்கள்வரையாவது உளுத்தங்களி தினசரி கொடுக்க வேண்டும். இக்கால கட்டத்தில் உணவு விடயத்தில் போதிய கவனம் செலுத்தா விட்டால்தான் மாதவிடாய் ஏற்படும் காலத்தில் வேண்டாத வேதனைகள் ஏற்படுகின்றன. அது மட்டுமல்லாமல், பின்னர் கர்ப்பம் தரிக்கும் காலத்தில் இரத்தச் சோகை, நரம்புத் தளர்ச்சி, குறைந்த இரத்த அழுத்தம் போன்ற சிக்கல்கள் தோன்றுகின்றன.

இத்தகைய உணவுகளை உட்கொள்ள முடியாதென அவர்கள் அடம் பிடிப்பார்கள். ஆனால், சற்று வற்புறுத்தியாவது ஊட்டி விடவேண்டும்.

### எச்சரிக்கை....!

இளம் பெண்களுக்கு- ஆய்வாளர்கள் ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எக்காரணத்தைக் கொண்டும் மாதவிலக்கைத் தள்ளிப் போடுவதற்கென விற்கப்படும் மாத்திரைகளைப் பாவிக்கலாகாது என்பதுதான் அந்த எச்சரிக்கையாகும். மாதா மாதம் இயல்பாகவே வரும் மாதவிடாயைச் செயற்கையாக ஒத்தி வைப்பதால் உடலிலும் உள்ளத்திலும் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல், கர்ப்பப்பையிலும் தாக்கம் ஏற்பட்டு கருத்தரிப்பிலும் பாதக விளைவுகள் உண்டாகலாம்.

# மசக்கை காலத்தில் மறக்கக்கூடாதவை

'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை' என்கிறார்கள். கருவுற்றிருக்கும் தாய் எத்தகைய மனோ நிலையுடன் இருக்கிறாளோ, அதே நிலையினைக் கொண்டே குழந்தையும் அமையும். தாய் ஆரோக்கியமாக இருந்தால் குழந்தையும் நல்லாரோக்கியத்துடன் பிறக்கும்.

உடல் ஆரோக்கியத்துடன் உள ஆரோக்கியமும் பிரதானமானது. கர்ப்பிணிகள் எத்தகைய சஞ்சலமுமில்லாமல் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.-இதற்கு அவளைச் சுற்றியிருக்கும் அவள் கணவன், இருவரினதும் தாய் தந்தையர், சகோதர சகோதரிகள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

மன உளைச்சல்தான் பெரும்பாலான நோய்களுக்குக் காரணமாக அமைகிறது. இது கர்ப்பிணிகளுக்கு மட்டுமல்ல, ஏனையோருக்கும் பொருந்தும். தாய்மை உற்றிருக்கும் பெண்கள் அதிர்ச்சி அடையலாகாது. அதிக மகிழ்ச்சியும் கூடாது. திடீர் துயரமும் கூடாது. இரண்டுமே கருவுற்றிருக்கும் பெண்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கருவுற்று மூன்றாம் நான்காம் மாதங்களில் 'மசக்கை' என்ற நிலை ஏற்படுகிறது. இக்காலங்களில் கடும் புளிப்பான பதார்த்தங்களையே விரும்பி உண்பார்கள். வடு மாங்காய்தான் இந்நிலையில் அவர்களுக்கு உவப்பானது. இதனை உண்பதனால் அவ்வளவு தீமை ஏற்படப்போவதில்லை. ஐந்து மாதங்கள் வரை அன்னாசி மற்றும் பப்பாளிப் பழங்களை உண்ணாமலிருப்பது நல்லது. இவை உஷ்ணமானவை என்பதால் தவிர்ப்பது நல்லது. பிற்பட்ட காலங்களில் இவற்றை உண்ணலாம்.

மசக்கையான காலங்களில் வாந்தி அதிகமாக இருக்கும். எதையுமே உண்ண முடியாமல்-உள்ளே செல்லும் எந்த உணவும் உடனடியாகவே வெளியேறிவிடும். இதற்கு மாதுளம் பழம் உண்ணலாம். சாறு பிழிந்து குடித்தால் வாந்தி குறையும். அத்துடன் இரத்த விருத்திக்கும் உதவுகிறது.



பச்சைக் காய்கறிகள், பழங்கள் போதுமான அளவு சாப்பிடவேண்டும். கருவிலுள்ள குழந்தை புத்திசாலியாகவும் ஆரோக்கியமாகவும் பிறக்க வேண்டுமென்றால் தினசரி உணவில் வல்லாரையையும் தூதுவளைக் கீரையையும் ஒன்றுவிட்டு ஒருநாள் சேர்த்துக் கொள்ளலாம்.

குங்குமப் பூவை பாலில் சேர்த்துக் குடித்தால் பிறக்கும் குழந்தை சிவப்பாகவும் புஷ்டியாகவும் பிறக்கும் என்ற நம்பிக்கை பரவலாக உண்டு. ஆனால் இதில் ஆதாரபூர்வமான உண்மையில்லை. இருப்பினும் குழந்தைப் பேறு சிக்கலில்லாமல் இருக்க இது உதவுகிறது.

பொதுவாக அளவான உடலுழைப்பு, அளவான ஓய்வு, அமைதியான மன நிலை ஆகியவற்றை அனுசரித்தால் குழந்தை ஆரோக்கியத்துடன் பிறக்கும்.

# கண்ணீர் கண்ணீர்

அழுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி 211வது முரசில் குறிப்பிட்டிருந்தோம். அழும்போது சிந்தும் கண்ணீர் பற்றி சில சுவையான அம்சங்களை இங்கே பார்க்கலாம்.



மனத்தை அழுத்தும் பழுவை நீக்க கண்ணீர் ஒரு சாதனமாகி விடுகிறது. துன்ப துயரங்களை மனத்துள் அடக்காமல் அழுது கண்ணீர் விடும்போது மனது பாரம் குறைந்து இலகுவாகி விடுகிறது. அழாமல் இருந்தாலோ, மன அழுத்தம் அதிகமாகி மூளையில் தாக்கி பைத்தியமாக்கி விடுகிறது.

உலகிலேயே முதல்தரமான கிருமிநாசினி கண்ணீர்தான் என்று மேலை நாட்டு விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். "ஒரு மேசைக்கரண்டி கண்ணீர் 100 கலன் தண்ணீரைச் சுத்தப் படுத்தும்," என்று அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

கண்களைத் தாக்கும் நுண் கிருமிகளைத் தாக்கி அழித்து விடுகிறது கண்ணீர். கண்களில் தூசு பட்டாலும் கண்ணீர் சுரந்து அதனைக் கண்ணிலிருந்து வெளியேற்றிவிடுகிறது. இரத்தத்தில் படியும் சிலவகை விஷக்கிருமிகளை அழித்துவிடும்படி மூளை கண்ணுக்கு கட்டளை பிறப்பிக்குமாம். கண் தன்னிடம் சுரக்கும் கண்ணீரை இரத்தத்துடன் கலந்து அக்கிருமிகளை அழித்து விடுகிறதாம்.

கண்ணீரில் 94 வீதம் நீர் இருக்கிறது. எஞ்சிய வீதத்தில் இரசாயனம் கலந்துள்ளது. இதில் 'லைசோஜம்' என்னும் பொருள்தான் கண்களைத் தாக்கும் விஷக் கிருமிகளுடன் போராடி அவற்றை அழிக்கிறது.

# முடியம்மா முடியம்மா

மனிதனுடைய உடலில் ஒருசில இடங்களைத் தவிர ஏனைய பாகங்களில் முடி வளர்கிறது. ஆனால் தலையில் மட்டும் அடர்த்தியாகவும் வேகமாகவும் வளர்கிறது.

ஆணோ, பெண்ணோ தலையில் முடியில்லாதிருந்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கமாட்டார்கள். முக்கியமாகப் பெண்களின் அழகுக்கு முழுமுதற் காரணமாக விளங்குவது தலை முடிதான்.

முடி அழகு தருவது மட்டுமல்ல; உடலுக்கு தோலைப்போன்ற- ஒரு கவசமாகவும் விளங்குகிறது. சுற்றுச்சூழலில் ஏற்படும் சீதோஷ்ண மாறுபாடுகளிலிருந்து உடலை முடிதான் காப்பாற்றுகிறது. எமக்கு அத்தியாவசியமான மூலத்தாதுக்கள்- உயிர்வாயு, ஐதரசன் மற்றும் காபனீரொட்சைட்டு ஆகியவை முடியில் உள்ளன.



பெண்களுக்குத்தான் அடர்த்தியாகவும் நீளமாகவும் முடி இருப்பதால் அம்முடியில் அழுக்குப் படியாமல் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையாவது தலை முடியை நன்றாகக் கழுவுதல் வேண்டும். மயிர்க்கால்களில் அழுக்குப் படியாமல் விரல்களால் அழுத்தித் தேய்க்க வேண்டும். அழுக்கு நீங்குவதுடன் மயிர்க்கால்களும் உறுதிபெறும்.

ஒன்று விட்டொரு நாள் எண்ணெய் தேய்க்க வேண்டும். எண்ணெய் தேய்க்கும் போதும் மயிர்க்கால்களில் அழுத்தித் தேய்க்க வேண்டும்.

முட்டை வெள்ளைக்கருவை தலையில் தேய்த்து வர முடி அடர்த்தியாக வளரும். செம்பருத்தி இலை, பூ ஆகியவற்றை நன்றாக அரைத்து அதன் விழுதைத் தேய்த்து முழுகினால் முடி வளர்வதுடன், உதிர்வதும் நின்றுவிடும்; இள நரையும் நீங்கிவிடும். வெந்தயத்தையும் இவ்வாறு பயன்படுத்தலாம். இதில் ஏதாவது ஒன்றை ஆறுமாதங்கள் வரை கடைப்பிடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பேன், பொடுகு போன்றவை தலையில் குடி புக முக்கிய காரணமாக அமைவது அழுக்குச் சேர்வதே. இவ்விரண்டையும் வரவொட்டாமல் தடுக்க, வசம்பை அரைத்து தேய்த்து வரவேண்டும்.

# விக்-விக் விக்கல்

குழந்தைகளுக்கோ பெரியவர்களுக்கோ திடீரென்று விக்கல் வந்து விடுகிறது. சில சந்தர்ப்பங்களில் விக்கல் நின்று விடாமல் தொடரவும் கூடும்.



இச்சந்தர்ப்பங்களில்- சிறுவர்களானால்- "எதையோ திருடிச் சாப்பிட்டிருக்கிறாய்?" என்று வீட்டிலுள்ள பெரியவர் எவராவது குற்றஞ்சாட்டுவார். உடனடியாகவே விக்கல் நின்றுவிடும். இதற்குக் காரணம் என்ன?

இந்தக் குற்றச்சாட்டைக் கேட்டதும் அச்சிறுவன் வாயினுள் அதிக காற்றை வாங்கி, "ஏ... நான் எதையுமே திருடல்லியே!" என்கிறான். 'ஏ' என்று ஏங்கும்போது வாயினுள் புகும்காற்றை உள் விழுங்கிவிடுகிறான். இதனால் தொண்டையில் சிக்கியிருக்கும் காற்று ஓர் ஏப்பத்துடன் வெளியேறி விடுகிறது. விக்கலும் நின்று விடுகிறது.

திப்பிலி, சீரகம் ஆகியவற்றை ஒரே அளவில் எடுத்து பொடியாக்கி வைத்துக் கொண்டு, விக்கல் வந்தால் சிறிதளவு எடுத்து தேனுடன் குழைத்து விழுங்கினால் விக்கல் எங்கே போய் ஒளிந்துகொண்டது என்று தேடவேண்டியிருக்கும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வெள்ளவத்தை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

செல்வி க. பிரபா,
465/SD காலி வீதி, வெள்ளவத்தை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசகவாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CA

பெயர்:........................

முகவரி:........................

........................

கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-07-1997

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது–சுகந்தினி)

## பாண்–முட்டை உப்புமா

பாண்–400 கிராம்
முட்டை–5
பெரிய வெங்காயம்–100 கிராம்
தக்காளிப் பழம்–100 கிராம்
பச்சை மிளகாய்–6
எண்ணெய்–50 கிராம்
உளுந்து– 1 மேசைக்கரண்டி
கடுகு– 1 தேக்கரண்டி
கறிவேப்பிலை–அளவாக
உப்பு–அளவாக

செய்முறை:

பாணை சிறு சிறு துண்டுகளாகப் பிய்த்து, அரைக்கையளவு நீர் தெளித்து எடுத்து வைத்துக் கொள்ளவும். முட்டைகளையும் நன்றாக அடித்துத் தனியாக வைத்துக் கொள்ளவும். தக்காளி, பச்சை மிளகாய், வெங்காயம் ஆகியவற்றை சிறிது சிறிதாக நறுக்கிக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெயை அளவாகச் சூடாக்கி கடுகு, உளுந்து, பச்சை மிளகாய், தக்காளி ஆகியவற்றைப் போட்டு வதக்கவும். உப்பையும் அத்துடன் சேர்த்துக் கிளறிக் கொண்டிருக்கும் போது பொடியாக்கிய பாண் துண்டுகளையும் அதில் கொட்டிக் கிளறவும். உப்புமாப்போல் திரண்டுவரும் போது அடித்து வைத்திருக்கும் முட்டைக் கலவையையும் சேர்த்து கிளறவும். பொலபொலவென்று உதிரியாக வரும்போது அடுப்பிலிருந்து இறக்கிப் பரிமாறவும்.

காலை உணவுக்கு 4 பேருக்கு அளவான பாண்-முட்டை உப்புமா மிக உருசியாக இருக்கும்.

# அடுப்படி ஆலோசனைகள்

* காலை உணவுக்காக வாங்கும் பாண் மிஞ்சி விட்டால் தூக்கி எறிந்து விடாதீர்கள். வெயிலில் காயவைத்து மிக்ஸியிருந்தால் அதில் போட்டுத் தூளாக்கி எடுங்கள். காய்ந்த மிளகாய்த் துண்டுகள், அளவாக உப்பு ஆகியவற்றை அளவாகச் சேர்த்து தண்ணீருடன் பிசைந்து மா ரொட்டிக்கு எடுக்கும் பதத்தில்- உருண்டைகளாக்கி அவற்றை பூரிக்கு தட்டுவது போல் மெல்லியதாகத் தட்டி, வெயிலில் காய விடுங்கள். இரண்டு நாட்களின் பின்னர் எடுத்து டப்பாவில் போட்டுப் பத்திரப்படுத்துங்கள். தேவையானபோது எடுத்து பொரித்து அப்பளத்துக்குப் பதிலாக சோற்றோடு சாப்பிடலாம்.
* குளிர்காலத்தில் தயிர் உறைவதற்கு அதிக நேரம் பிடிக்கும். தயிருக்கு உறைபோடும் போது ஒரு விட்டமின் 'C' வில்லையைப் பாலில் கலக்கி விடுங்கள். தயிர் கெட்டியாவதுடன் சுவையும் வித்தியாசமாக இருக்கும்.
* வெங்காயம் நறுக்கும்போது கண்ணீர் சுரக்கிறதா? ஒரு சாதாரண பூட்டுசி (சேஃப்டி பின்)யை முன்வாய்ப் பற்களுக்கிடையில் வைத்துக் கடித்துக் கொள்ளுங்கள். கண்ணீர் வரவே வராது.
* கோவாவிலிருந்து வெளியேறும் (சமைக்கும் போது) வாடை சிலருக்கு வெறுப்பைத் தரும். கொதிக்கும் போது ஒரு சிறுதுண்டு பாணைப் போடுங்கள். வாடையை அது உறிஞ்சி எடுத்து விடும்.
* பால் கொதிக்க வைப்பதற்கு முன்னர் பாத்திரத்தை ஐஸ் தண்ணீரில் அலம்பிவிட்டு பாலை ஊற்றிக் கொதிக்க வையுங்கள். அடிப்பிடிப்பதை இது தடுப்பதுடன், பாத்திரத்தையும் சுலபமாகக் கழுவி விடலாம்.

# தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு— அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 20

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## அவள் பூபாளம்...! நான் முகாரி...!!

கண்ணாடித் துண்டுகளாய்
நினைவுச் சில்லுகள்-என்
மனதைக் கிழிக்கின்ற
கிறக்கமான மாலை நேரம்....!
இன்னும் இமை மூடாத
என் விழிகளில்.....
நினைவுத் தொட்டில் கட்டியபடி...
பௌர்ணமி இரவுகளை
பாலைவனச் சகாராவாக்கி
சந்தோசம் காண்கின்ற
சந்தர்ப்பவாதியாய் நீ!
***
மாலை வேளைகளிலும்
மயான அமைதிகளிலும்
மௌனத்தின் ஆழத்திலிருந்து
என்னுள் நிதம் கருக்கட்டும் கண்ணீர்
பிரசவமாகாமலேயே புதைக்கப்படுகிறது....!
***
பூமியில் உன் புன்னகைக்கு
நிகரான பூவேது
பின்னெதற்கு.......?
இதழ் மொட்டுக்குப் பூட்டு
இலக்கியமெல்லாம் எழுதும்
உன்னிதழால் இறப்புக்கு முன்
எனக்கொரு பதில் எழுதக்கூடாதா?
***
'நித்தம் நித்தம் பார்வைக்காய்
நின்று-களைத்து, இளைத்து
ரத்தம் விறைத்து
இறக்கப் போகிறேன்' என்றெண்ணும்போது,
எப்பொழுதுகளிலேனும்...
உன் நிழல் பூமி தொட்டிருக்கும்...
சுவாசம் வாசனைப்படும்,
கிழக்கில் வானம் கருக்கட்டும்,
கடந்து செல்கையில் மின்னலான
சிலநொடிப்பார்வையிலே
சவமொன்றுக்கு உயிர் திரும்பும்!
***
பாதகீய்ய்ய்ய்....!
நிறைய நேரம் பாரேன்டீய்ய்ய்...!
குரங்கு மனது, கெஞ்சம்....
முறைக்கிறாயா? ரசிக்கிறாயா?
பார்வையின் அர்த்தம் தெரியாமலேயே
ஆர்ப்பரிக்கும் வியர்த்தமான மனது
புரிந்து கொள்கிறது...
காதலைச் சொல்லவே முடியாதபோது
உன்னால் கொல்லவே முடிகிறதே...!
***
உன்னிடத்தில்
காதல்ப்பூ மலர்வதற்காய்
தண்டவாளத்தில் தவம்
செய்துகொண்டிருக்கிறது-
ஒரு பட்டாம் பூச்சி...!
வரம்....!
உன்னிடத்திலா? ரயிலிடத்திலா?
ஒப்பாரியா??? தாலாட்டா???....
***
புன்னகையால் வேதனை தீர்க்க
நீ- தயாராய் இல்லாததால்....
விசப் பூக்களோடு மட்டும் சிநேகமாய்...
பூபாளம் பாடப் பழக்கிக்கொண்டது...
இந்த சின்னஞ்சிறு தேனீ!!!
***
விடிந்தபின்னும்
உன்னால் அணைக்கப்படாத
விளக்கினோடுதான்....
விளையாட முடிந்திருக்கிறது-
இந்த விட்டிலுக்கு!!!
***
இத்தனை நாளும்...
சித்திரவதை செய்த நீ
இந்தப் பூந்தோட்டத்தில்
எப்பொழுது பூக்கேட்கப்போகிறாய்?
காட்டுத் தீ....
வேட்டுவைத்த பின்னா?

அகன் கபிலன்-வவுனியா.

## இடம் பெயர்வு



இத்துடன் நாம் எத்தனை வீடுகள்
கட்டியாகிவிட்டது...?
இன்னும் விடிவைக் காணவில்லை!
...
வன்னியில் சும்மா கிடந்த
பற்றைகள் எல்லாம்,
எம் கை பட்டுக் கைலாயமானது!
...
தானே வளர்ந்த வன்னிமரம்
சோகமான எம் மனதிற்கு
சகமளிக்கப்பாடியது!
...
காட்டிலெறித்த வெண்ணிலவும்
எமக்குக் குளிர் நிலவு
பொழிந்தது.
...
சொல்லப் போனால்,
இடாம்பீக எம் மக்கள்
வன்னி வாழ்வுடன்
இணைந்து கொண்டனர்.
...
என் அம்மா செல்லமாக
'நான் பெற்ற மகளே!
நான் செத்துப் போனால்
நீ என்ன செய்வாய்?'
எனக் கேட்டபோது,
'அம்மா! மயானத்தில்
சும்மா தூக்கியெறிவேன்...!'
எனச் சோகமாகச்
சிரித்துக் கொண்டேன்!
...
எல்லாம் தாண்டி
வேப்பங்குளமுகாம் வந்து
பாய்களை வாங்கிப்
படுக்கை விரித்தபோது,
எமக்கே எம்நிலமை
வெட்கமாகிவிட்டது.
...
வரிசையில் நின்று
பாண் வாங்கிச்
சுவைத்தபோது,
சுவை கெட்டுக்
கிடக்கும்
எம் வாழ்வை
எண்ணிக்
கண்ணீர்
வந்தது!
...

ஏகாந்தப்பிரியா.

## தேன் கிண்ணம்

## மனித நேயம்!

மண்ணோடு மண்ணாகிப் போகும்
இந்த மனித நேயம்
பயிர்களுக்கு
உரமாகத் துடிக்கிறது!
0-0-0
ஆயுதக் குண்டுவிதைகள்
மானிடப் பூக்களின்
உயிரிதழ்களைத் தேடுகிறது!
0-0-0
இறை படைப்பில்
நிறம் மாறாத-
குருதிக்குள்ளும்
ஏன் இத்தனை வேற்றுமைகள்...?
0-0-0
மனிதனை
மனிதன் கொல்லும்
கொடூரச் செயலைப்
எந்தத் தலைமைத்துவத்தின்
ஆட்சியில்....
இனிமேல்
முற்றுப்புள்ளிவைக்கப் போகிறார்கள்??
0-0-0
மரணத்திற்கு அடையாளம்
துப்பாக்கிச் சப்தம்;
இந்த இசை-
எம் மண்ணில் எதற்கு...?
0-0-0
இங்கே...
எதியோப்பியர்களையும்
குரோசியர்களையும்
உருவாக்கப் போகின்றீர்கள்....?
0-0-0
ஊனமாய் வடியும்
மனிதப் பிணங்களில்
வெள்ளை புறா நீந்தட்டும்!
0-0-0
மண்ணோடு மண்ணாகும்
மனித நேயமே!
உன் நிழலிலாவது
சுதந்திரப் பூவை
மணக்க விடு!
0-0-0
சமாதானம் தேடும்
இதயங்களாவது
முத்தமிடட்டும்!
0-0-0
எமது மூதாதையர்
மூளையுடன் நடந்திருந்தால்
எமது காலங்கள்
இன்று-
சருகுகளாகியிருக்காது!
0-0-0
சிந்திய குருதிகளை
சேகரித்து
கவிதையெழுதும்
எம்முயிருக்கு-
என்ன உத்தரவாதம்...?
0-0-0
உணர்வுகள் வரண்டு
நிம்மதியின்றி வாழும்
எமக்கு என்ன
'நாமம்' தெரியுமா...?
காலத்தால் மாறாத
மனித நேயங்களில்
'அகதி' என்று!
0-0-0

ஹிதாயா றிஸ்வி.

## காதலின் நினைவுகளால்



உணர்வுகள்
உயிர் பெற்று எழுந்து
உன்
நினைவுகள் மறக்காத
காலம்!
**
உன்னை நினைத்து
கனவுகள் களைந்து
உருண்டு புரண்டு
கஷ்டப்பட்ட இரவுகள்
எத்தனை?
**
உன்
நினைவுகளை நினைக்க
இரவுகளை சேமித்த
காலங்கள்!
**
உந்தன்
நினைவுகளால் பௌர்ணமி நிலவுகள்
எத்தனை
என் கண்களுக்கு
இருளாடை அணிந்தன?
**
உன் காதல்
இரகசியங்களை
சேமித்துக் கொண்டேன்;
மறு ஜென்மம்
காதல் செய்ய!
**
இப்போதும்
உன் நினைவுகளை
நினைத்து,
கண்களில் வடிகின்ற
கண்ணீரைத் துடைத்து
என்
கைக்குட்டையும்
இற்றுப் போனது!

ஏ.எச்.பாஸ்கீன்(பேவி)-
பொத்துவில்-02.

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள்! முதல் 180 பேரின் பெயர் விபரங்கள் கடந்த வாரங்களில் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ:

181. செல்வி. ஜெ. ஸ்ரெலா
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
கொட்டகல.
182. கே. ரவிச்சந்திர
மாதனிய தோட்டம்
வறக்காப்பொல.
183. ஷாமிளா விஜயராஜ்
எல்பியன் குறூப்,
அக்கரப்பத்தனை.
184. வி. சர்வேஸ்வரி
17/18, புதிய வீடமைப்புத் திட்டம்,
டெய்யன்னவெல, கண்டி.
185. திருமதி. டபிள்யூ. டேவிட்
விஸ்ட்வைக் வீதி,
கொழும்பு-15.
186. பி. யோகராஜ்
கீனா கொட்டேஜ்,
கீனா ரோட், நுவரெலியா.
187. திருமதி. றிஸானா பதுர்தீன்
181, மெதகம,
பிபிலை.
188. கே. ஸஹான அமீர்
133, டுனுவில்ல வீதி,
அக்குறணை, கண்டி.
189. திருமதி. எஸ். இராஜமணி
தொட்டுலாகலை,
அப்புத்தளை.
190. எஸ். பாலகணேசன்
நெசவு நிலைய வீதி
அக்கரைப்பற்று-7.
191. ரி. விஜயன்
கல்வியியற் கல்லூரி,
பூந்தோட்டம், வவுனியா.
192. பி. முகமட் சிறாஜ்
288/ஏ புளொக்,
மல்கம்பிட்டி வீதி,
சம்மாந்துறை.
193. எம். ஹுஸ்னி
கடுகெலியாவ,
புப்போகம, கெகிராவ.
194. திருமதி. எம். ரம்ஜம்பி
31, ஆஸ்பத்திரி தெரு,
மாவனல்லை.
195. எல். பிரியா
37, பிலந்துவ,
வறக்காபொல.
196. எம். ஜெஸ்லியா
20, சீனி ஆலிம் ஒழுங்கை,
காத்தான்குடி-4.
197. செல்வி. ஆர்.ரஜினி
காளிகோவில் வீதி,
ஊறணி, மட்டக்களப்பு.
198. எம். பைஸால்
5/ஏ, மனப்பொட,
உக்குவளை.
199. ரி. வினோதினி
காக்கல்ல தோட்டம்
அப்புத்தளை.
200. எம். நகூபா
182/2, கடற்கரைப்பள்ளி,
கல்முனைக்குடி-2.



200 அதிஷ்டசாலிகளின் பெயர்களும் வெளியாகிவிட்டன. முரசின் பரிசுமழையில் நனைந்துள்ள அனைவருக்கும் வாழ்த்துக்கள். பரிசுகளை பெறுவது எப்படி என்ற விபரம் கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும். நாமும் நனையவில்லையே என்று யாரும் வருத்தப்பட வேண்டாம். போட்டிகள் காத்திருக்கின்றன. அதிஷ்டம் உங்களையும் தேடிவரும்.

## யார் இவர்?

இன்று உலகறிந்த வீரர் ஒருவரின் பதினொரு வயதுப் பருவப் புகைப்படம் இது. கண்டுபிடிப்பது சுலபம்தானே? விடையைச் சரிபார்க்க பக்கம் 18ஐ நாடவும்.

விடையைச் சரிபார்க்க பக்கம் 18ஐ நாடவும்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(20.07.1997 தொடக்கம் 26.07.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

கர்க்கடகம் - சூரியன், புதன்.
சிம்மம் - வெள்ளி, இராகு.
கன்னி - செவ்வாய்.
மகரம் - வியாழன்.
கும்பம் - கேது.
மீனம் - சனி.

சந்திரன்- மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி தடை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், வீண்குறை கேட்டல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- காரியானுகூலம், முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- பலவித பேறு, உறவினர் நன்மை. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக் கஷ்டம், அந்நியர் உதவி. | மு.ப. 9 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, பலவித பேறு. | பகல் 12 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, அலைச்சல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. 2 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், காரியத்தடை. | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், கடன் படல். | பகல் 11 மணி |
| வியாழன்- பெரியோர் பகை, இனசன விரோதம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| சனி- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் நன்மை, பண வரவு. | பி.ப. 3 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் நஷ்டம், பணக் கஷ்டம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பலவித பேறு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பலவித பேறு, முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- வீண் முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் பிரச்சனை, மனக் கவலை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன் - புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| சனி- மனக் கலக்கம், பொருள் நஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், சஞ்சலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- உறவினர் நன்மை, காரியசித்தி. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் சகாயம், கடன் படல். | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, கடன் படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- முயற்சி பலிதம், உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- காரியத்தடை, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியத்தடை, கடன் தொல்லை. | மு.ப. 10 மணி |
| புதன்- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் நன்மை, பணச் செலவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| சனி- துயர் நீங்கும், பலவித பேறு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் விரோதம், அந்நியர் பகை. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- காரியத்தடை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- பலவித பேறு, உறவினர் உதவி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், தேகசுக நன்மை. | காலை 8 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- இனசன விரோதம், தொழில் கஷ்டம். | பகல் 11 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்





## வேண்டும்!

உள்ளம் நல்ல உள்ளம்
உண்மை பேச வேண்டும்!
எண்ணம் சிறிய எண்ணம்
விட்டுப் போக வேண்டும்!

கற்ற படிப்பும் அறிவும்
கலைகள் வளர்க்க வேண்டும்!
சூதும் வாதும் போக்கி
சுத்தம் பேண வேண்டும்!

அழுக்கு இல்லா வாழ்க்கை
அகிலம் போற்ற வேண்டும்!
யுத்தம் கொண்ட பூமி
இரத்தம் சிந்திப்போகும்!

சத்தம் கொண்ட மானுடம்
சரிந்து சிதைந்து வேகும்!
அமைதி கொண்ட வாழ்க்கை
ஆன்ம சுத்தி ஆக்கும்.

-ஹரனி-

பிச்சை வாங்கி உண்ணும்
வாழ்க்கை
பேற்றுவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# ஆமையும் முயலும்

அந்தக் காட்டின் ஒரு பக்கத்தில் அருவி ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அந்த அருவிக்குப் பக்கத்தில் இரண்டு முயல்கள் வசித்து வந்தன. அந்த அருவியில் பெரிய ஆமை ஒன்றும் வசித்து வந்தது.

அந்த முயல்களுக்கு குட்டி முயல் ஒன்று பிறந்தது. அந்தக் குட்டி முயல் வெள்ளை வெளேரென பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். குட்டி முயல் கொஞ்சம் வளர்ந்ததும் அங்குமிங்கும் துள்ளி ஓடி விளையாடும்.


ஒரு சமயம் குட்டி முயல் விளையாடிக் கொண்டிருந்தபோது, அருவியில் இருந்த ஆமையைக் கண்டது. அதன் பழுப்பு நிறத்தையும், மெதுவாக நடப்பதையும் கண்டு கேலி செய்தது.

ஆனால் ஆமையோ குட்டி முயல் செய்யும் கேலியைப் பற்றிக் கவலைப்படவில்லை. குட்டி முயல்தானே அறியாமையால் தன்னிடம் இப்படி நடந்து கொள்கின்றது என்று பேசாமல் இருந்து விட்டது.

ஒரு நாள் பெரிய முயல்கள் இரண்டும் உணவு தேடி வெளியே சென்று விட்டன. குட்டி முயல் தனியே வந்து அருவியின் அருகே விளையாடிக்கொண்டிருந்தது. அப்படித்துள்ளி விளையாடிக் கொண்டிருந்தபோது தவறி அருவியில் விழுந்து விட்டது குட்டி முயல்.

குட்டி முயலுக்கோ நீச்சல் தெரியாது. அது தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்ததைக் கண்ட ஆமை அதன் அருகே வேகமாக நீந்தி வந்து சேர்ந்தது.

தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த குட்டி முயலை, தனது முதுகில் ஏற்றியது. அப்போதுதான் குட்டி முயலுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. குட்டி முயல் ஆமையின் முதுகில் உட்கார்ந்திருக்க ஆமை



இலாவகமாக நீந்தி முயலை அதன் இருப்பிடத்திற்கு அருகில் இறக்கிவிட்டது.

ஆமையின் திறமையும், அதன் பெருந்தன்மையும் அப்போதுதான் குட்டி முயலுக்குப் புரிந்தது. அது ஆமையைப் பார்த்து,

"என்னை மன்னித்துவிடுங்கள் ஆமை மாமா. அன்றொருநாள் உங்களைத் தரக்குறைவாகப் பேசிக் கேலி செய்தேன். ஆனால் அதை நீங்கள் மனதில் வைத்திருக்காமல் பெருந்தன்மையாக தக்க சமயத்தில் உதவி என் உயிரைக் காப்பாற்றி விட்டீர்கள். இனிமேல் உங்களை மட்டுமல்ல, வேறு எவரையும் கேலிசெய்ய மாட்டேன்." என்று மனப்பூர்வமாக ஆமையிடம் மன்னிப்புக் கேட்டது குட்டி முயல்.

அன்று முதல் மற்றவர்களைக் கேலி செய்யாமல் எல்லாருடனும் மிக மரியாதையாக நடந்து கொண்டது குட்டி முயல்.

## வாரம் ஒரு நாடு

### லக்ஸம்பேர்க்



தலைநகர் - லக்ஸம்பேர்க்
பரப்பு - 2,586 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 4 இலட்சம் பேர்
மொழி - ஃபிரெஞ்ச், ஆங்கிலம், லக்ஸம்பேர்க்கிஷ்
எழுத்தறிவு - 100%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - லக்ஸம்பேர்க் ஃபிராங்க்
தனிநபர் வருமானம் - 38,500 டொலர்.

**அமைவிடம்:**

லக்ஸம்பேர்க்- ஜெர்மனி, பெல்ஜியம், ஃபிரான்ஸ் ஆகியவற்றிற்கு நடுவே அமைந்துள்ள சிறிய நாடாகும். இது பெருமை மிக்க பிரபுத்துவ நாடாகும்.


**வரலாறு:**

பர்கண்டி, ஸ்பெயின், ஒஸ்ரியா, ஃபிரான்ஸ் போன்ற நாடுகள் 1815 வரை லக்ஸம்பேர்க்கை ஆண்டு வந்தன. ஜெர்மனி இரண்டு உலகப்போர்களிலும் இதை ஆக்கிரமித்தது. 1867ல் சுதந்திரம் அடைந்தது. இங்கு பரம்பரை பரம்பரையாக மன்னராட்சி நடைபெறுகின்றது.

**பொருளாதாரம்:**

மொத்த மக்கள் தொகையில் 2 சதவீதமானோரே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். தொழில் வளர்ச்சி மேம்பட்டுள்ளது. இரும்புத்தாது பெருமளவில் கிடைக்கின்றது. சுற்றுலா முக்கிய தொழிலாகும்.

## பழமையான மரம்!



உலகிலேயே முதன் முதலில் பயிர் செய்யப்பட்ட தாவரம் என்ற சிறப்பு பேரீச்சம் மரத்திற்கு உண்டு. இது பாலைவனத் தாவரம் என்று உங்களுக்குத் தெரியும். பேரீச்சம் பழத்தை 'பாலைவனத்தின் உணவுக் கூடை' என்று அழைப்பார்கள்.


பாலைவனத்தில் பயணம் செய்யும் பலரின் பசியாற பேரீச்சம்பழம் பயன்படுவதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

பேரீச்சம் பழ மரம் முதன் முதலில்,மத்திய ஆசியாவில் உள்ள மெசப்பெத்தோமியா வில்தான் பயிரிடப்பட்டது. உலகின் மிகப் பழமையான மரங்களில் இதுவும் ஒன்று.

வாழை, தென்னை, பனை போன்று இதுவும் எந்தப் பகுதியும் வீணாகாமல் பயன்படக் கூடியது. இந்த மரத்தினால் ஆன உத்தரங்கள் வீடுகட்டப் பயன்படுகின்றன.

இன்று உலகம் முழுவதும் பயன் படுத்தப்படும் பேரீச்சம்பழ உற்பத்தியில் எகிப்தும், சவுதி அரேபியாவும்தான் உலகிலேயே முதல் இடத்தைப் பிடித்துள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.07.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 202
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 200

பரிசுக்குரியவர்:
சுதாதரன் நுபேந்தன்,
யாட் வீதி, கல்முனை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி ஞா. ஷர்மிளா, ஈ.எல், பெர்ணான்டோ மாவத்தை, வெள்ளவத்தை. | கோ. சாந்தப்பிரியா, விபுலாநந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-04. |
| பாத்திமா .:.பஸீலா, மின்ஹாத் கனிஷ்ட வித்தியாலயம், போகஹபுர, திக்குவெல்ல. | எம்.எம். பஹூஜான், ஜிலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. |
| வி. சுபாகரன், சிவானந்த வித்தியாலயம்,கல்லடி, மட்டக்களப்பு. | பா. ஹரிசுதன், திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை. |
| ஏ.எம். சாமிலா, FF-டி-ஏ-கொலனி, பாலாவி. | கே. ஸப்ராஸ் மொஹமட், மஹவெல முல்ல முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. |
| செல்வி ஜனனி அருமைராஜா, இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. | பி. தியாகரூபன், ஒட்டரி த.வி., டிக்கோயா. |

## விடுகதைகளும் விடைகளும்

1. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவன். அவன் யார்?
2. விரித்த பாயைச் சுருட்ட முடியாது. அது என்ன?
3. கை உண்டு கால் இல்லை, கழுத்து உண்டு தலை இல்லை. அது என்ன?
4. ஊரையே ஏற்றிச் சுமக்கும் உல்லாசத் தேர். அது என்ன?
5. பூவுக்குள்ளும் இருப்பான்; மலையிலும் இனிப்பான். அது என்ன?
6. மொட்டை மரத்தில் முப்பது காகம்; மரம் அலையுது, இடம் நகருது. அது என்ன?
7. அண்ணன், தம்பிகள் எங்களுக்கு ஒரே குடுமி. அது என்ன?
8. சட்டை போடமாட்டான்; ஆனால் சட்டையைக் கழட்டுவான். அது என்ன?
9. வயதான பலருக்கு புதிதாக ஒரு கை. அது என்ன?
10. படபடக்கும், பளபளக்கும் மனதுக்குள் இடம்பிடிக்கும். அது என்ன?

**விடைகள்**

1. செங்கல் 2. கோலம் 3. சட்டை 4. இரயில் 5. தேன் 6. படகு 7. பூண்டு 8. பாம்பு 9. வழுக்கை 10. பட்டாசு

தொகுப்பு: செல்வி எஸ். சுமைராபேகம்.

## உயரமான நுழைவாயில்




உலகிலேயே மிகவும் உயரமான வெள்ளிரும்பு (STAINESS STEEL) கொண்டு அமைக்கப்பட்ட நுழைவாயில் எது தெரியுமா?

அமெரிக்காவில் மிசூரி மாநிலத்தில் உள்ள செண்ட் லூயிஸ் நகரில் மிசிசிப்பி ஆற்றின் அருகே கட்டப்பட்டுள்ள நுழைவாயில்தான்.

1800ம் ஆண்டுகளில் அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் இருந்து, மற்ற இடங்களுக்குச் செல்லும் பிரதான வாயிலாக செண்ட் லூயிஸ் நகரம் அமைந்திருந்தது. அதைச் சிறப்பிக்கும் வகையில் நினைவுச்சின்னம் ஒன்றை நிறுவ முடிவெடுத்தது செண்ட் லூயிஸ் நகரசபை. அதன் விளைவே இந்த வெள்ளிரும்பு நுழைவாயில்.

1965ம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நுழை வாயிலின் மொத்த உயரம் 192 மீட்டர் ஆகும்.

## நிறமாற்றம்



எதிரி விலங்குகளிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக, இடத்திற்கேற்றவாறு பச்சோந்தி தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும் என்று அறிந்திருப்பீர்கள். 'கெட்டில் ஃபிஷ்' என்று அழைக்கப்படும் ஒரு வகை மீன்களில் ஆண்மீன்கள், பெண் மீன்களைக் கவர தன்னை முழுமையாக சிவப்பு நிறமாக மாற்றிக் கொள்ளும்.

## பெரிய பாலைவனங்கள்

உலகிலேயே மிகவும் பெரிய பாலைவனங்களும், அவை அமைந்துள்ள நாடுகளும், அவற்றின் பரப்பளவுகளும் பின்வருமாறு:

| பெயர் | நாடு | பரப்பளவு (ச.கி.மி) |
|---|---|---|
| 1. சஹாரா | வட ஆபிரிக்கா | 84,17,500 |
| 2. கிரேட் அவுஸ்திரேலியன் | அவுஸ்திரேலியா | 25,90,000 |
| 3. கிரேட் அரேபியன் | சவுதி அரேபியா | 23,31,000 |
| 4. கோபி | மத்திய ஆசியா | 12,95,000 |
| 5. தாக்லா மக்கான் | சீனா | 3,23,750 |
| 6. நமீப் | தென்மேற்கு ஆபிரிக்கா | 3,10,800 |
| 7. சொனோரா | அமெரிக்கா-மெக்ஸிக்கோ | 3,10,800 |
| 8. காரகும் | USSR | 3,00,440 |
| 9. சிசில்கும் | USSR | 2,97,850 |
| 10. கலாகரி | தென் ஆபிரிக்கா | 2,59,000 |
| 11. தார் | இந்தியா- பாகிஸ்தான் | 2,07,200 |
| 12. அட்டகாமா | சிலி | 1,81,300 |

## கங்காரு



அவுஸ்திரேலிய நாட்டின் தேசிய விலங்கான கங்காருவுக்கு இந்தப் பெயர் எப்படி வந்தது என்று தெரியுமா? அவுஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த வெளிநாட்டவர் ஒருவர், அவுஸ்திரேலிய பழங்குடி மனிதரிடம், கங்காருவைக் காட்டி 'இது என்ன?' என்று கேட்டார். அதற்கு அந்தப் பழங்குடி மனிதர் கங்-கா-ரு என்று பதில் சொன்னார். கங்-கா-ரு என்றால் 'எனக்குத் தெரியாது' என்று அர்த்தம். பின்னர் அதுவே அந்த மிருகத்துக்குப் பெயராகிவிட்டது.

www.padippakam.com



# உடைந்த இரவு





டெலிஃபோனில் அந்தப் பெண்ணின் குரலைக் கேட்டதும் மைத்ரேயி சில விநாடிகளுக்கு மௌனத்தைக் காட்ட, குரல் சிரித்தது.

"மைத்ரேயி! என்ன பேச்சையே காணோம்?"

"நீ யார்....?"

"நான்தான் சொன்னேனே... உன் மனச்சாட்சின்னு...."

"இந்த குதர்க்கமான பேச்செல்லாம் வேண்டாம்... நீ யார்ன்னு சொல்லு. விவகாரத்தைப் பேசி முடிச்சுடுவோம்..."

"இது பேசி முடிக்கிற விவகாரம் இல்லை மைத்ரேயி! நீ உடனடியாய் திருந்த வேண்டிய விஷயம்."

"இதோ பார்.... அது என் சொந்தப் பிரச்சனை. என் இஷ்டம் போல யார்கூட வேண்டுமானாலும் பேசப் பழக எனக்கு உரிமையிருக்கு. இதுல நீ தலையிட முடியாது."

"என்ன சொன்னே...? அது உன்னோட சொந்தப் பிரச்சினையா?"

"ஆமா."

"அதை நான் அப்படி நினைக்கலை..... பெண் குலத்துக்கு நீ ஒரு அவமானச் சின்னமா நான் நினைக்கிறேன். தாலி கட்டின புருஷனுக்கு ஒரு பொண்ணு துரோகம் பண்ணினா அதை பார்த்துக்கிட்டு என்னால பொறுமையா இருக்க முடியாது."

"நான் இப்போ என்ன பண்ணணும்...?"

"பாஸ்கரோடு உனக்கிருக்கிற கள்ளத் தொடர்பை விட்டுட்டு புருஷனுக்கு உண்மையான மனைவியா இருக்கணும்...!"

"அப்படி இல்லேன்னா?"

"உன் புருஷனுக்கு விஷயம் போகும். அவர்கிட்ட எப்படி சொல்லணுமோ.... அப்படி சொல்லிடுவேன்...."

"இது உனக்கு தேவையில்லாத விஷயம். நீ கேட்கிற பணம் தர்றேன். இந்த விவகாரத்துல தலையிடாதே... உன்னோட ரேட் என்ன?"

"நோ...! எனக்கு வேண்டியது பணம் இல்லை; ஒழுக்கம்! உனக்கு இன்னும் இருபத்திநாலு மணி நேரம் டயம் தர்றேன். நாளைக்கு சரியா இதே பத்து மணிக்கு உனக்கு ஃபோன் பண்ணுவேன். இனிமே உன் புருஷனுக்கு துரோகம் பண்ண மாட்டேன்னு சொல்லணும்.... இல்லேன்னா உன்னோடமானம் சந்தி சிரிக்கும்...."

மைத்ரேயி மேற்கொண்டு பேசுவதற்குள் மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டது.

ஆத்திரம் தலைக்கேறியிருக்க மைத்ரேயியும் ரிஸீவரை 'லொட்' என்ற சத்தத்தோடு வைத்துவிட்டு அங்கிருந்த சோபாவில் சாய்ந்தாள். பாஸ்கர் பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்டான்.

"மைத்ரேயி....!"

"ம்...."

"டெலிஃபோனில் மிரட்டிய பெண் நிச்சயமா உன்னோட கம்பெனியில்தான் வேலை பார்க்கிறா... நோ டவுட்...."

"அவ யார்ன்னு எப்படி கண்டுபிடிக்கிறது பாஸ்கர்?"

பாஸ்கர் அவளுக்கு பக்கத்தில் வந்து உட்கார்ந்தான்.

"டெலிஃபோனில் அவ பேசப் பேச எனக்கு ஒரு 'க்ளு' கிடைச்சது."

"க்ளுவா?"

"ம்...."

"என்ன க்ளு....?"

"அவ பேசிட்டிருக்கும் போது டெலிஃபோன்ல ஒரு சைரன் சத்தம் கேட்டது கவனிச்சியா?"

"ம்..... கவனிச்சேன்..."

"அது ஒரு மில்லோட சைரன் சத்தம்...."

"ஆமா.... அது மாதிரித்தான் இருந்தது..."

"அது எந்த மில்லோட சைரன் சத்தம் தெரியுமா?"

"எனக்கெப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரியும்."

மைத்ரேயி நிமிர்ந்தாள்.

"எந்த மில்லு...?"

"ஆவடியில அந்த மில்லு இருக்கு. பேரு சந்திரா காட்டன் மில்."

"சரி.... மில்லோட சைரன் சத்தத்தை ஒரு க்ளுவாக வெச்சுக்கிட்டு அந்த டெலிஃபோன் பெண்ணை எப்படிக் கண்டுபிடிக்கிறது?"

"வழி இருக்கு...."

"எப்படி....?"

"டெலிஃபோன்ல சைரன் சத்தம் கேட்கணும்னா... அந்தப் பெண்ணோட வீடு மில்லுக்குப் பக்கத்தில் தானே இருக்கணும்?"

"ஆமா...."

"உன்னோட 'ஆபீஸில்– கம்பெனியில்' வேலை பார்க்கிற பெண்களோட அட்ரஸ்களை எடுத்துப் பார்த்தா யார் ஆவடியிலிருந்து வர்றாங்கன்னு சுலபமா தெரிஞ்சுடும்.... அந்த ஆவடிப் பெண்ணை 'க்ளோஸ் ஃபாலோ அப்' பண்ணினா உண்மை தெரிஞ்சுடும்..."

"பாஸ்கர்...."

"என்ன...?"

"டெலிஃபோன்ல கேட்டது ஆவடி சந்திரா காட்டன் மில்லோட சைரன் சத்தம் தானா?"



## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"சந்தேகம் வேண்டாம்... அந்த மில்லுக்கு ஒரு பர்ச்செஸ் ஆர்டர் விஷயமா நாலைந்து தரம் போயிருக்கேன். டெண்டம் கார்டிங் கன்வர்ஷனுக்காக சாயந்தரம் ஆறுமணியிலிருந்து ராத்திரி பதினொரு மணிவரைக்கும் கான்டின் செக்ஷன்ல இருந்திருக்கேன். சரியா ராத்திரி பத்து மணிக்கு ஹாஃப் நைட் லேபரர்ஸ் சாப்பிடறதுக்காக ஒரு சைரன் தர்றது வழக்கம். அந்தப் பெண் உனக்கு ஃபோன் பண்ணிப் பேசும் போது மணி சரியாப் பத்து...."

"ஒரு சந்தேகம் பாஸ்கர்...."

"என்ன...?"

"எங்க கம்பெனியில் வேலை பார்க்கிற பெண்களுக்கு தனியா டெலிஃபோன் வெச்சுக்கற அளவுக்கு வசதி இருக்குமா என்ன...?"

"ஏன் இருக்கக்கூடாதா....? இன்னிக்கு டெலிஃபோன் ஒரு ஆடம்பர சங்கதி கிடையாது. மிடில் க்ளாஸ் பேமிலியைச் சேர்ந்தவங்க டெலிஃபோன் வெச்சுக்கறது இப்போது சகஜம்."

"சரி.... நான் இப்போ என்ன பண்ணணும்.....?"

"நாளைக்குக் காலையில உன்னோட கம்பெனிக்கு போ. லேடி ஸ்டாப்ஸ் பர்சனல் ஃபைல்களை ஏதேச்சையாக பார்க்கிற மாதிரி பார்த்து யார் யார் ஆவடியில் இருக்காங்கன்னு நோட் பண்ணி என்கிட்ட குடுத்துடு. மத்ததை நான் பார்த்துக்கிறேன்."

மைத்ரேயி தலையாட்டிக் கொண்டிருக்கும்போதே மறுபடியும் ஃபோன் வாயைத் திறந்தது.

மைத்ரேயி ஃபோனை பயமாய் பார்த்தாள்.

**இதுவரை**

தினேஷ்–மைத்ரேயி தம்பதிக்கு சிறந்த தம்பதி என்று விருது கிடைக்க இருக்கிறது. அத்தகவலை மைத்ரேயிடம் மகிழ்ச்சியுடன் சொல்கிறான் தினேஷ். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்ற இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. தினேஷை கொல்ல பாஸ்கருடன் திட்டம் போடுகிறாள் மைத்ரேயி. அப்போது ஒரு ஃபோன் வருகிறது. ஃபோனில் ஒரு பெண்குரல் மைத்ரேயி– பாஸ்கர் தொடர்பை தெரிந்து வைத்து மிரட்டுகிறது. ஃபோனில் மிரட்டுவது யார் என்று தெரியாமல் மைத்ரேயியும், பாஸ்கரும் குழம்புகின்றனர்.

வேலை விடயமாக தினேஷ் டெல்லி போய்விட மீண்டும் மீண்டும் அதே பெண்குரல் பாஸ்கர் தொடர்பை மறந்து விடும்படி ஃபோனில் மிரட்டுகிறது. பாஸ்கரின் திட்டப்படி அந்தப் பெண் யாரென ஆராய தினேஷின் ஆபீஸ் செல்கிறாள் மைத்ரேயி.கம்பனிக்கு விசுவாசமாக நடக்கிற 11 பெண் ஊழியர்களின் பெயர் விபரங்களை எடுத்துக் கொண்டு வீடு திரும்புகிறாள். படுக்கையறையில் இரவு பாஸ்கருடன் இருக்கிறாள் மைத்ரேயி. அப்போது தொலைபேசி அழைக்கிறது.

**இனி...**

"அவளா?"

தயக்கமாய் ரிஸீவரை எடுத்தாள். குரல் கொடுத்தாள்.

"ஹலோ...."

மறுமுனையில் தினேஷின் உற்சாகக் குரல்.

"மைத்ரேயி...!"

மைத்ரேயி போலி உற்சாகம் காட்டினாள். "இப்பத்தாங்க உங்களைப் பத்தி நினைச்சேன்...."

"என்ன தூக்கம் வரலையா...?"

"நீங்க பக்கத்துல இல்லேன்னா... எனக்கு எப்படி தூக்கம் வரும்...? கொட்ட கொட்ட விழிச்சுக்கிட்டு உட்கார்ந்திட்டிருக்கேன். நீங்க டெல்லியிலிருந்து நாளைக்கு திரும்பிடுவீங்கள்ள...?"

"நாளைக்கு நான் ரிடர்ன் ஆறது கஷ்டம் மைத்ரேயி."

"என்னங்க இது....! நாளைக்கு வந்துடுவேன்னு புறப்பட்டு போகும்போது சொன்னீங்க...."

"சொன்னேன்...! டெல்லி வந்து சேர்ந்த பின்னாடிதான் பிசினஸ் டீல் முடிய கொஞ்சம் முன்னே பின்னே ஆகும் போலத்தெரியுது."

"எப்பத்தான் வருவீங்க...?"

"ரெண்டு நாளாயிடும்னு நினைக்கிறேன்..."

"இது உங்களுக்கே நியாயமாபடுதா...?"

"என்ன செய்யறது மைத்ரேயி...? டெல்லி என்ன பக்கத்திலேயா இருக்கு... வந்துட்டு வந்துட்டு போக. இது ஒரு முக்கியமான பிசினஸ் டீல். இருந்து முடிச்சிட்டுத்தானே வரணும்...."

"என்னமோ செய்யுங்க..."

"என் மேல கோபமா...?"

"இல்ல ரொம்ப.... சந்தோஷம்... நாளைக்கு வர்றேன்னு சொல்லி என்னை ஏமாத்திட்டீங்க... வீட்ல நான் தனியா இருப்பேன்னு கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தீங்களா..?"

"ஸாரி... மைத்ரேயி...! நான் டெல்லியிலிருந்து திரும்பியதும் நீ தர்ற பனிஷ்மெண்ட் எதுவாயிருந்தாலும் ஏத்துக்கிறேன்...."

"சரி... சாப்பிட்டாச்சா...?"

"இன்னும் சாப்பிடாமே இருப்பேனா..? பார்ட்டி ஒருத்தர் டின்னர் கொடுத்தார். நீ சாப்பிட்டியா...?"

"ம்.... எட்டு மணிக்கே."

"டெல்லியிலிருந்து உனக்கு என்ன வாங்கிட்டு வரட்டும்?"

"ஒண்ணும் வேண்டாம். நீங்க சீக்கிரமா வந்தா அதுவே போதும்...."

"நாளைக்கு காலையில கம்பெனிக்கு போவியா?"

"போவேன்..."

"சரி...பதினொரு மணிக்கு ஃபோன் பண்றேன். அதுவரைக்கும் குட்நைட் சொல்லி விடைபெறுவது உன் ஸ்வீட் டார்லிங் தினேஷ்...."

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட மைத்ரேயியும் ரிஸீவரை வைத்துவிட்டு பாஸ்கரை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் சிரித்தான்.

"என்ன சிரிப்பு...?"

"நீ மட்டும் ஒரு ஆக்ட்ரஸ்ஸா இருந்தா வருஷா வருஷம் உனக்குத்தான் ஊர்வசி அவார்ட் கிடைக்கும்."

"என்ன கேலியா...?" பாஸ்கரின் காதைப் பிடித்து திருகிய மைத்ரேயி உஷ்ணமாய் பெருமூச்சு விட்டாள்.

"எல்லாம் சரிதான்... அந்த டெலிஃபோன் பொண்ணை நினைச்சாதான் இருதயத்துக்குள்ளே 'கிர்'ன்னு இருக்கு...."

"பயப்படாதே...! இப்பத்தான் க்ளு மாட்டியிருக்கு- அவளை கண்டுபிடிச்சுடுவோம்."

"கண்டு பிடிக்க முடியுமா?"

"முடியும்.... அந்த ஆவடி ஏரியாவில் உன்னோட கம்பெனி ஸ்டாப் எவ இருக்கான்னு பார்த்து என்கிட்ட சொல்லு. மத்ததை நான் பார்த்துக்கிறேன்...."

"சரி.... அவளைக் கண்டு பிடிச்சு என்ன பண்றதா உத்தேசம்...?"

"உத்தேசம் என்ன...? கழுதையை தீர்த்துக்கட்ட வேண்டியது தான்."

"அவகிட்ட பேசிப் பார்த்தா என்ன...?"

"வழிக்கு வரமாட்டா....! உன்னைத் திருத்த நினைக்கிறவகிட்ட போய்பேசிட்டிருக்க முடியுமா.... மைத்ரேயி...?" பாஸ்கர் சாய்ந்து மைத்ரேயியின் மடியில் படுத்தான்.

"ரெண்டு நாளைக்கு முந்திவரை நிம்மதியா இருந்தேன். இப்போ நிம்மதியே கெட்டுப் போச்சு பாஸ்கர்."

"கவலைப்படாதே.......! அந்தப் பொண்ணை தீர்த்துக்கட்டினதும் உன் புருஷனுக்கும் மரண அறிவிப்பு கொடுத்துடலாம்.... எதையுமே துணிச்சலா சந்திச்சா..... பிரச்சனைகள் காணாமே போயிடும்....!"

"எனக்கு நம்பிக்கையே வரமாட்டேங்குது பாஸ்கர்."

"புலம்பாதே..! வா...! படுக்கைக்கு போயிடலாம். சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்துல சஞ்சலம் எதுக்கு...?"

இருவரும் எழுந்தார்கள்.

ஹால் டியூப்லைட்டை அணைத்துவிட்டு படுக்கையறையை நோக்கி நகர்ந்த விநாடி அந்த சத்தம் கேட்டது.

"பீங்க்க்...."

கார் ஹார்ன் சத்தம்.

பங்களாவுக்கு வெளியே காம்பௌண்ட் கேட் அருகேயிருந்து அந்த சத்தம் எழுந்தது.

மைத்ரேயி வேகவேகமாய் போய் ஹால் ஜன்னலின் திரையை விலக்கி வெளியே எட்டிப் பார்த்தாள்.

காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே ஹெட்லைட் வெளிச்சக் கண்களோடு ஒரு கார் நின்றிருப்பது தெரிந்தது.

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. பாலச்சந்திரன்.
வயது: 28
முகவரி: 75/5, முஸ்கிலியன் வீதி, கொழும்பு-15.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: ஏ. ரகுமான்.
வயது: 29
முகவரி: ஆலங்குடா, ஏத்தாளை, புத்தளம்.
பொழுதுபோக்கு: வானொலி, சினிமா.



பெயர்: பாலசிங்கம் பாலகிருஷ்ணன்.
வயது: 22
முகவரி: 100 LEEWARD GLENWAY. APT,1909 DOM MILLS, ONTARIO, M3C 2Z1, CANADA.
பொழுது போக்கு: பத்திரிகை வாசித்தல்.



பெயர்: ஏ. சுபத்ரா குரூஸ்.
வயது: 16
முகவரி: 90/22, அற்புதராஜா குரூஸ் வீதி, பெரிய ஊறணி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: எஃப். சித்தீக்.
வயது: 24
முகவரி: 211/19, சீ.எம்.சீ, தொடர்மாடி, ஜும்மா மஸ்ஜித் வீதி, கொழும்பு-10.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். சுபைர்.
வயது: 23
முகவரி: P.O.BOX-5510, JEDDAH-21432, K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், உதைபந்து.

பெயர்: கே. றியாஸ்கான்.
வயது: 24
முகவரி: 74, உப்புக்குளம், மன்னார்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.

பெயர்: எச். லியாகத் அலி.
வயது: 28
முகவரி: 3, நாகமுல்ல வீதி, கொலன்னாவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: வி. கணேஸ்வரன்.
வயது: 21
முகவரி: வடக்கு பூண்டுலோயா கீர்ப்பிரிவு, பூண்டுலோயா.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: கே. யோகராஜ்.
வயது: 21
முகவரி: 213, ஒரேஞ்ச் ஃபீல்ட், இறக்குவானை.
பொழுது போக்கு: பாடல்கள் கேட்டல்.

பெயர்: வி. காந்தன்.
வயது: 25
முகவரி: P.O.BOX-8762,RIYADH-11492, K.S.A.
பொழுது போக்கு: கதைப்புத்தகம் படித்தல்.

பெயர்: எம். கலாம்தீன்.
வயது: 22
முகவரி: மன்னார் வீதி, நேரியகுளம், வவுனியா.
பொழுது போக்கு: நீச்சல், வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 20

பிரபஞ்சன்

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான்.கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

இனி...

"பார்த்துப் பார்த்து ஒரு பொண்ணுன்னு வளர்த்தேனடி உன்னை. உன் வாழ்க்கை இப்படி ஆயிடுச்சே. எவ்வளவு படிப்பு படிச்சே. அந்த அறிவையெல்லாம், எந்த நேரத்திலே, எதுக்குப் பயன்படுத்தவேணுமோ அதுக்கு உபயோகப்படுத்தாம விட்டுட்டுயேமா!" என்றாள் அம்மா அழுது கொண்டே.

அப்பா சொன்னார்:

"தோ பார். குழந்தை ரெண்டு நாள் கழிச்சு வந்திருக்கு. அதை மேலும் தொந்தரவு பண்ணாதே. முதல்லே அது குளிச்சு, சாப்பிட வழி பண்ணு. வெந்நீர் போட்டுக் கொடு. வாம்மா, விருந்தாளியா ஒரு பொண்ணு வந்திருக்கு பார். அதைக் கவனி!" என்றார் அவர்.

சுமதி ஜெய்சியை அழைத்துக் கொண்டு மாடிக்குப் போனாள்.

சுமதியின் அறைக்குள் நுழைந்த அவளுக்கு ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. அறையின் சுவர்களை மறைத்துக் கொண்டு புத்தகங்கள் கட்டிலின் மேல் எல்லாம் கூட ஒரு ஆள் படுக்க இடம் வைத்துவிட்டு மற்ற இடங்களையெல்லாம் புத்தகங்களே அடைத்துக்கொண்டு இருந்தன.

"நிறைய்ய படிப்பீர்கள் போலிருக்கிறது?"

சுமதி தலையை அசைத்தாள் புன்னகையுடன்.

"ஜெய்சி... மாசத்துக்கு இருநூறு ரூபாய்க்குப் புத்தகம் வாங்குவேன். அதாவது என் சம்பளத்தில் சற்றேறக்குறைய பத்து சதவிகிதத்தைப் புஸ்தகத்துக்குச் செலவு பண்ணுவேன், கல்யாணத்துக்கு முன்னால்வரை."

"ஏன் இப்போ என்ன வந்தது?"

"அவருக்கு நான் படிப்பது பிடிக்கவில்லை. காசு செலவு செய்து புஸ்தகம் வாங்குவது 'வேஸ்ட்' என்கிறார். குழந்தைகளுக்குச் சில பெரியோர்கள் சொல்வார்களே, பட்டாசு அதிகம் வாங்கிக் காசைக் கரியாக்காதே என்பார்கள். அது மாதிரி இவருக்கும் புஸ்தகம் ஒரு வீண் செலவு. லாகிரி வஸ்து."

"உங்கள் வருமானத்தில்தானே, நீங்கள் செய்கிறீர்கள்... அதை மறுக்க இவர் யார்?"

சுமதி சிரித்தாள்.

"சம்பளத்தைச் சல்லிக்காசு மிச்சமில்லாமல் நான் குடும்பத்துக்குச் செலவு செய்து விடுகிறேன். ஜெய்சி உண்மையில், என் பையில் பத்து ரூபாய் இல்லை தெரியுமா? என் செலவுக்கு இவர் பணமே தரமாட்டார். பெண்ணுக்குப் பணம் எதுக்கு என்கிறார் அவர்!"

"அவர் சம்பளத்தை என்ன செய்கிறார்?"

"அப்படியே அவர் கணக்கில் பேங்கில் போட்டு விடுவார். இவர் பனியன் ஜட்டி கூட என் செலவில், நான்தான் வாங்கித்தர வேண்டும். ஒரு நாள் கூட ஷாப்பிங் என்று இவர் வெளியில் போனது கிடையாது."

ஜெய்சி சிந்தனையில் ஆழ்ந்தபடி கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"படித்த பெண்கள்கூட, எந்த விஷயத்தில் தவறு செய்யக்கூடாதோ அந்த இடத்தில்தான் தவறு செய்கிறார்களே. என்ன பண்ணுவது? கல்யாணத்துக்கு முதலிலேயே அந்த ஆளை நீங்கள் நிறைய பரீட்சை வைத்துப் பரிசோதித்து இருக்கவேண்டும். நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள். இனியும் குடியொன்றும் முழுகிவிடவில்லை. அவருக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பாருங்கள். மீண்டும் அவர் தகராறு செய்கிறார் என்று

வையுங்கள். உடனே அவரிடமிருந்து நீங்கள் விவாகரத்து செய்து கொள்ளுங்கள். விவாகரத்து செய்து கொண்டு உங்களுக்குப் பிடித்த ஒருவரைக் கண்டுபிடித்துக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள். அதைத் தவிர வேறு வழியில்லை, சுமதி."

சுமதி யோசித்தபடி இருந்தாள்.



ஜெய்சி ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள். அது ஒரு கவிதைப்புத்தகம். ஒரு கவிதையை உரக்கப் படித்தாள்.

*"என் மனைவியைக் காணவில்லை.*
*கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு*
*அல்லது*
*தகவல் தருபவர்களுக்குத் தக்க சன்மானம்*
*தாராளமாகத் தரப்படும்.*
*கொஞ்சம் நாள் முன்பு*
*ரேஷன் கடையிலிருந்து திரும்பிய பொழுது*
*அவள் கால்களைக் காணவில்லை.*
*கேட்டபொழுது*
*மண்ணெண்ணெய்க் கியூவில்*
*காலி டப்பாவுக்குப் பதிலாகக்*
*கால்களையே கழற்றி*
*வைத்துவிட்டு வந்துவிட்டதாகச்*
*சொன்னாள்...*
*பதறிப்போய்*
*அவள் கரம் பற்றி துக்கம் விசாரிக்க*
*முனைகையில்*
*அவள் கைகளைக் காணவில்லை-*
*சர்க்கரைக் கியூவிலேயே*
*விட்டு விட்டு வந்து விட்டாளாம்.*
*'உன் நெஞ்சத்தை எங்கே தொலைத்தாய்?'*
*என்று கேட்டேன்.*
*'சினிமா தியேட்டரில்' என்று சொன்னாள்.*
*மிச்சமிருந்த அவளை வாரிச் சுருட்டி*
*அடுப்பாங்கரையில் எறிந்தேன்...*
*அன்று முதல் அவளைக் காணவில்லை.*
*கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்குத்*
*தக்க சன்மானம் வழங்கப்படும்.*
*'என் பிரியமுள்ள மனைவியே*
*நீ எங்கிருந்தாலும் உடனே வா!*
*நீயில்லாமல் நாங்கள் தவிக்கிறோம்.*
*உன்னை இனிமேல் ரேஷன்கடை,*
*சினிமாவுக்கு*
*அனுப்பமாட்டேன்.*
*நானே அங்கெல்லாம் போய்க்*
*காணாமல் போவேன்.'*
*இப்படிக்கு*
*இன்னும் காணாமல் போகாமல்*
*தவித்துக் கொண்டிருக்கும்*
*உன் குழந்தைகளும், புருஷனும்..."*

படித்து முடிக்கையில் ஜெய்சியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

புத்தகத்தின் அட்டையைப் புரட்டிப்பார்த்தாள். 'ஒரு முக்கிய அறிவிப்பு' என்கிற தலைப்பில் கவிஞர் புவியரசு எழுதிய கவிதைத் தொகுதி இது.

"உங்களை, உங்கள் கூடவே இருந்து பார்த்துவிட்டு, புவியரசு இந்தக் கவிதை எழுதியது மாதிரி இருக்கிறதே. உங்களுக்கு அப்படித் தோன்றவில்லை?"

"தோன்றியது. புவியரசுக்கு என்னைத் தெரிய நியாயமில்லை. ஆனால், பெண்களை அவருக்குத்தெரிந்திருக்கிறது. நம்பாடுகள் அவருக்குத் தெரிந்திருக்கிறது. நம் துயரங்களை, தேடல்களைக் கவிஞர் என்கிற முறையில் அவர் உணர்ந்திருக்கிறார். தத்துவமே அதுதானே ஜெய்சி. எழுதுகிறவன் உண்மையை எழுதும் பட்சத்தில், அது பலரின் வாழ்க்கையை நேரில் பார்த்து எழுதியது மாதிரித்தான் இருக்கும். இலக்கியம், உண்மை மாதிரி பலருக்குத் தோன்றுகிறதுக்கு காரணம் அதுதானே?"

ஜெய்சி கண்களை மூடி சுமதியின் கூற்றுகளை ஒப்புக்கொண்டாள்.

சுமதி கொஞ்சும் தொனியில் சொன்னாள்:

"ஜெய்சி! அவருக்கு இன்னும் ஒரு வாய்ப்பைக்கொடுத்துப் பார்க்கலாம் என்றே எனக்குத் தோன்றுகிறது. மனிதன் சுத்தமாக ஈரமே இல்லாமல் வாழ முடியுமா, என்ன? உண்மையில், என்னை நேசித்துத் தானே அவர் திருமணம் செய்து கொண்டார்?"

"இது உங்கள் நல்ல தன்மையைக் காட்டுகிறது. ஆனால், அவர் மாறுவார் என்று எனக்குத் தோன்றவில்லை. பெஸ்ட் ஆஃப் லக்!" என்றாள் ஜெய்சி.

குளித்து முடித்துவிட்டு அவர்கள் வெளியே கிளம்பினார்கள்.

"ஒரு காரியம் செய்யலாமே, சுமதி. நாம் இப்போது நேராக ஏதாவது பெரிய புத்தகக்கடைக்குப் போகிறோம். நிறைய புத்தகங்கள் வாங்குவோம். என்னிடம் பணம் இருக்கிறது. கவலைப்படாதீர்கள். நல்ல புடவை ஒன்றும் வாங்குவோம். அதையெல்லாம் எடுத்துக்கொண்டு போய் அவர் முன்னால் போடுவோம். என்ன செய்கிறார் என்று பார்ப்போம். பணம் ஏது என்பார். உங்களுடையது என்றே பொய் சொல்லுங்கள். என்ன எதிர் விளைவு என்று பார்ப்போம்."

அப்படியே செய்தார்கள்.

◆ ◆ ◆

**கோ**பம், வெறுப்பு, எல்லாம் பொங்க கணேசன் கேட்டான்.

"இதுக்கெல்லாம் ஏது பணம்?"

"என் பணம்தான்."

"உன்னிடம் ஏது பணம்? ஒளித்து வைத்து இருந்தாயா?"

"நான் எதற்கு ஒளித்து வைக்க வேண்டும். நல்ல புத்தகங்கள் நான் அவசியம்படிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே கடனாகப் பணம் வாங்கி புத்தகங்கள் வாங்கினேன்."

"இவைகளையெல்லாம் போட்டுக் கொளுத்தப் போகிறேன். என்ன செய்ய முடியும் உன்னால்?"

"எங்கே கொளுத்திப் பாருங்கள்!" என்றாள் ஜெய்சி. அவன் கொதித்து எழுந்தான்.

ஜெய்சி சொன்னாள்:

"சுமதி, நான் டெலிஃபோன் செய்ய வேண்டும், உடனே!"

"யாருக்கு?"

"பொலிசுக்கு. என் புத்தகங்களை அதன் பெருமை அறியாத தற்குறி ஒன்று கொளுத்தப் போகிறது என்று பொலிசுக்குச் சொல்லப்போகிறேன்."

அவள் டெலிஃபோன் இருக்கும் இடம் நோக்கிச் சென்றாள்.

❊ ❊ ❊

**பொ**லிஸ் என்றதும் கலகலத்துப் போனான் கணேசன்.

இதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும். எப்போதும் மனசுக்குள் குற்றங்களை அடுக்கிக்கொண்டே செல்பவர்கள், பொலிசைக் கண்டு பயப்படுகிறார்கள். இரண்டாவது பொலிஸ் என்பதே மக்களின் பாதுகாவலர் என்பது போய், மக்கள் விரோத சக்தியாக வளர்ந்து விட்டிருப்பதுதான்.

கணேசனின் அச்சம் முதல் வகையைச் சேர்ந்தது. தவிரவும், புத்தகங்களை, மற்றும் சேலைகளை அவன் எரிக்க உத்தேசிக்கிறான் என்று சொல்லிப் பொலிஸுக்கே அவள் ஃபோன் செய்யப் போனதும், உண்மையிலேயே அவன் பயந்துதான் போனான்.

"உன் சிநேகிதியைக் கூப்பிடு. பொலிசுக்குப் ஃபோன் செய்ய வேண்டாம் என்று சொல்" என்று கெஞ்சுவது பேயுலச் சொன்னான் அவன்.

சுமதி உள்ளே ஓடிச் சென்று, "இருங்கள்... அவர் வேண்டாம் என்கிறார். அனாவசியமாகப் பொலிசைக் கூப்பிட்டுவிட வேண்டாம்" என்றாள்.

ஜெய்சி வெளியே வந்தாள்.

கணேசன் தலையைக் கவிழ்ந்தவாறு, ஒன்றும் செய்யத் தோன்றாமல், அமர்ந்திருந்தான்.

அச்சமயத்தில், ஜெய்சிக்கு கணேசன் பற்றிய அந்த எண்ணம் தோன்றியது. அவன் ஒரு கோழை.

கோழைகளே மனைவியை அடித்துத் துன்புறுத்துபவர்கள். அவர்களை அவமானம் செய்பவர்கள். யார் தன்னை அவமானத்துக்குள்ளாக்கிறார்களோ, அவர்களை நேரில் மறுக்க முடியாமல், வாலை ஆட்டிக்கொண்டு இருந்துவிட்டு, அங்கு மூண்ட சினத்தைத் திருப்பித் தாக்கமாட்டாள் என்று நம்புகிற மனைவியிடம் காட்டுபவர்கள். இவர்களே கோழைகள்.

- கணேசனைக் கண்டு வெறுப்பும், கோபமும் ஒருங்கே கொண்டாள் அவள். சுமதி, சுவர் ஓரமாகச் சாய்ந்து நின்றிருந்தாள்.

ஜெய்சி அவன் முன் போய் அமர்ந்து, "ஏன் பொலிஸ் வேண்டாம்?" என்றாள்.

**(தொடர்ந்து வரும்)**

# லப்...டப்...



'வீயெல்'

**உ**ஷாவின் இதயம் தொம் தொம் என அடித்துக் கொண்டது. நரம்புகளில் இரத்த ரகளை. அடிவயிற்றில் ஒரு பய ஊசி தொட்டது. கண் எதிரே அவள் கணவனை நாலு அயோக்கியர்கள் தாக்குவதைப் பார்த்ததும் கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. அதுவும் அவர்களில் குண்டு கல்யாணம் சைஸில் இருந்த ஒருவன் அவள் புருஷனின் நெஞ்சில் பூட்ஸ்காலால் உதை உதை என உதைப்பதைப் பார்த்து உஷாவின் முதுகில் ஜலநதி ஓடிற்று.

இரண்டு மூன்று மாதங்கள் முன்புதான் அவள் கணவன் வாசுவிற்கு இதய ஆபரேஷன் நடந்து அவன் பிழைத்ததே ஆச்சரியமான விஷயம். செயற்கையாகச் செய்யப்பட்ட மாற்று இருதய ஆபரேஷனில் அவன் பிழைத்துக்கொண்டாலும் டாக்டர்கள் உஷாவிடம் திரும்பத் திரும்ப சொல்லியிருந்தார்கள்:

"இதப் பாருங்க மேடம்...! உங்க புருஷனுக்கு செயற்கை இருதயம் வச்சிருக்கோம்... ஆபரேஷன் சக்ஸஸ்... ஆனாலும் அவர் பத்திரமா இருக்கிறது உங்க கையிலே தான் இருக்கு... கண்ணாடிப் பாத்திரத்தைத்தான் நீங்க எடுத்துட்டுப் போறீங்க.... ஜாக்கிரதை! தாக்குதல் நடந்தா ஆட்டம் க்ளோஸ்."

துரதிர்ஷ்டவசமாய் ஊர் வந்த இடத்தில் எசகு பிசகாய் நாலு கொள்ளையர்களிடம் சிக்குவோம் என எதிர்பார்க்கவேயில்லை. தலைவிதி.

வாசு நெஞ்சில் ஆபரேஷன் நடந்த இடத்தில தாக்கப்படுவது பார்த்து மூர்ச்சையாகி சாய்ந்துவிட்டாள் உஷா.

கண்விழித்தவள் நெற்றியில் வியர்த்தாள். புருஷனை பரவசத்துடன் தொட்டுத் தொட்டுப் பார்த்தாள். ஆசைதீர...

"நல்ல வேளை... உங்களுக்கு எதுவும் ஆகலையே?"

"மக்கு" அவன் கன்னத்தில் தட்டினான்.

"இப்படியா அலறுவாங்க...!! எனக்கு எதுவும் ஆகலை... நல்லவேளையா அந்த பக்கமா ஒரு ஜீப் வர வெளிச்சம் பார்த்து பயந்து ஓடிட்டானுக.... நீ மயக்கமானதைப் பார்த்து எனக்கு பயமாப் போயிடுச்சு... சரியான பயந்தாங்கொள்ளியா இருக்கியே!" கேலி செய்தான்.

"இல்லைங்க..... அவங்க உங்களை திரும்ப திரும்ப நெஞ்சிலேயே மிதிச்சாங்களா... அதான்! உங்களுக்கு செயற்கை இதயமாச்சே... நொறுங்கிடக்கூடாதேன்னு தான்...."

"எ.... என்னது...? எ...எனக்கு? செ...ய....ற்...கை.... இ...த....ய....மா...?" என்றான் வாசு. அப்படியே சரிந்தான் பிணமாக!

# நியாயம் அநியாயம்

து. சுவாமிநாதன்



**சே**து இப்படி அநியாயமாக சாவான் என்று எதிர்பார்க்கவே இல்லை நான்! செத்துவிட்டான் என்பதற்காக அவனுடைய பங்கை கொடுக்காமலிருக்க முடிகிறதா....?

ம்ஹூம்... வேண்டாம்! அவன் காசு எனக்கு எதற்கு? தீர்மானித்தது மனசு.

விஷயம் இதுதான்.

நானும் சேதுவுமாக ஆளுக்கு ஐந்து ரூபாய் போட்டு லொத்தர் சீட்டு ஒன்றை வாங்கியிருந்தோம். பரிசு விழுந்தால் ஆளுக்குப் பாதியாக பிரித்துக் கொள்வது என ஒப்பந்தம்.

லொத்தர் ரிசல்ட் வருவதற்குள் சேது இறந்துவிட்டான்.

ஆனால் ஆச்சரியம் பாருங்கள்... நாங்கள் வாங்கின சீட்டுக்கு இண்டாவது பரிசு விழுந்திருந்தது. சுளையாய் ஐந்து லட்சம்!!

சேது தனியாள். உறவினர் யாருமற்றவன். அவனுடைய பணத்தை யாரிடம் கொடுப்பது? யோசித்தேன்.

கோயில் உண்டியலில் போட்டு விடலாமா? கரெக்ட்! அதுதான் சரி..... அவன் அடிக்கடி கும்பிடுகிற முக்குறுணி விநாயகர் கோயில் உண்டியலிலேயே போட்டு விடலாம்..... அதுதான் சரி.

கோயிலுக்குப் போனேன். பிள்ளையாரை வலம் வந்து கும்பிட்டு விட்டு உண்டியலில் போட்டேன், சேதுவின் ஐந்து ரூபாயை!



படிப்பகம்

www.padippakam.com

# மிருகம்

வலியவந்த அழைப்பை தட்டமுடியவில்லை. மாறாவுடன் போய்ச் சேர்ந்துகொண்டான்....



**களுவாஞ்சிக்குடி யோகன் – அவுஸ்திரேலியா**

வாரத்தில் ஐந்து நாட்கள் வேலைசெய்துவிட்டு தொடர்ந்துவரும் அந்த இரண்டு நாட்கள் விடுமுறை, மனதிற்கு இதமளிப்பது உண்மை. அன்றும் அப்படித்தான் ஒரு சனிக்கிழமை. தியாகுவும் குதூகலமாகவே இயங்கிக்கொண்டிருந்தான். பகலெல்லாம் குடும்பத்துடன் போய் 'ஷொப்பிங்' செய்துவிட்டு வந்து சற்று ஓய்வுக்காக சிறிது கண்ணயர்ந்திருந்தான். அப்பொழுது இரவு எட்டுமணியாகியது. மாறா வந்து தட்டி எழுப்பினாள்.

"நீ ரெடியா?" என்றான் அவன். "நான் எப்போதோ ரெடி" என்றவள் கார்த் திறப்பைத் தேடியவண்ணம் இருந்தாள்.

சட்டென எழுந்த தியாகு ஓடிச்சென்று முகத்தைக் கழுவிக்கொண்டு அவளுடன் போய்ச் சேர்ந்து கொண்டான். அவர்களின் கார் 'டிஸ்கோ கிளப்' ஒன்றிற்குப் போய்க் கொண்டிருந்தது. இருவரும் பிரபல்யமான 'கோல்ற்வோண்ற்' கிளப்பிற்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

தியாகு சுவிசுக்கு வந்து பத்துவருடங்களாயிற்று. அவன் கிட்டத்தட்ட நாற்பது வயதைக் கடந்துகொண்டிருந்தான். ஆனால் அப்படி யாரும் அவனை மதிப்பது இல்லை. மதிக்கவும் முடியாது. மிஞ்சி மிஞ்சிப் போனால் முப்பது வயது மதிப்பார்கள். அப்படியொரு இளமையுடனும், கவர்ச்சியுடனும் காணப்பட்டான் தியாகு. வெளிநாட்டுக் காலநிலை, சாப்பாடு, சந்தோஷம் இவைகள் அவனை அப்படி வைத்துக்கொண்டிருந்தன.

அவனுக்கு இந்த 'டிஸ்கோ, நைட்கிளப்' பழக்கங்களெல்லாம் ஆரம்பம் முதலே இருந்துகொண்டு வந்தது. வந்த புதிதில் அவன் மிகவும் நொந்துபோய்த் தனிமையில் வாடினான். அப்போது அவனுடன் வேலை செய்த சுவிஸ் நாட்டு நண்பனொருவன்தான் இங்கெல்லாம் அழைத்துக்கொண்டு போய் வரத்தொடங்கினான். அந்தப் பழக்கம் அப்படியே தொற்றிக்கொண்டது. விடுமுறை நாட்களென்றால் மனதைச் சாந்தப்படுத்த-அமைதிப்படுத்தவென்று இவன் அங்கெல்லாம் போய்வருவது வாடிக்கையாகி விட்டது. அப்படியொருநாள் போனபோது தான் மாறாவைச் சந்தித்தான்.

அவள் ஒரு இத்தாலி தேசத்துப்பெண். கணவனை விவாகரத்துச் செய்துவிட்டு ஒரு குழந்தையுடன் வசிப்பவள். அவளும் தனிமையைப் போக்கவென்று அங்கு வந்து கொண்டிருந்தாள்.

தியாகும் அவளும் ஒருநாள் சேர்ந்து 'டான்ஸ்' ஆடினார்கள். இப்படித்தான் அவர்களுக்கு அறிமுகம் ஆரம்பமானது.

"ஏன் வீணாக வீட்டுக்கு வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறாய்? எனக்குச் சொந்தவீடு இருக்கிறது, விரும்பினால் அங்கு வந்து இரு!" என்றாள் மாறா ஒருநாள்.

ஆண்பிள்ளை; வலிய வந்த அழைப்பைத் தட்டிக்கழிக்க முடியவில்லை. மாறாவுடன் போய்ச் சேர்ந்துகொண்டான் தியாகு. அவர்கள் இருவரும் சேர்ந்து வாழத்தொடங்கி கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் ஆகின்றன.

சிறு சிறு பிரச்சனைகள் எழுந்தாலும் சீராக வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த இரவு விடுதிக்கேளிக்கைகள், ஆரவாரங்கள் எல்லாம் முடிந்து தியாகுவும், மாறாவும் வீட்டுக்கு வரச் சாமம் இரண்டு மணியாகிவிட்டது.

அடுத்தநாள் மிகத் தாமதமாகவே அவன் எழுந்திருந்தான். அன்று எங்கேயும் போகவில்லை. போகவும் நேரமில்லாமல் இருந்தது.

"தியாகு, உனக்கு லெட்டர் வந்திருக்கிறது," என்று மாறா வந்து கொண்டு கொடுத்தாள். கிழித்துப் பிரித்தவன் வாசிக்கத் தொடங்கினான்.

**பிரியமானவருக்கு,**

*உங்கள் சோதிமலர் எழுதிக்கொள்வது,*

*பிரியமானவர், கணவர்- இந்த வார்த்தைகளையெல்லாம் நீங்கள் விரும்பமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். இருந்தும் என்னால் முடியவில்லை. பழக்கதோஷம் எழுதும் போதே வந்து ஒட்டிக்கொள்கிறது. அதற்கு நீங்கள் எனக்குத் தந்த மனைவி என்ற அங்கிகாரமே காரணம். ஐயர் வைத்து, ஹோமம் வளர்த்து சட்ட பூர்வமாக எனக்கு அளித்த அந்த மனைவி என்ற ஸ்தானமே காரணம்.*

*ஆனால் நானிப்போ அந்த மனைவி என்ற ஸ்தானத்தைக் கேட்கவில்லை. அதை நீங்கள் யாருக்கோ, எப்போவோ தாரை வார்த்து விட்டதாகச் சொல்கிறார்கள். அதற்காக நான் இப்போது கவலைப்படுவதுமில்லை. கவலைப்பட்டுக் கவலைப்பட்டுத்தான் காலங்கள் கடந்தாயிற்று.*

*எனக்கிப்போ தேவையானதெல்லாம் பணம் ஒன்றேதான்! அது எனக்காகவும் அல்ல. உங்களை மணந்து உங்களை முகர்ந்ததினால் இரண்டு குழந்தைகளைத் தந்துவிட்டுப் போனீர்கள்.*

*மூத்தவள் கிருஷாந்திக்கு பதின்மூன்று வயதாகிறது. பருவ வனப்புக்கள் எல்லாம் செழித்திருக்க வேண்டிய உடம்பு, வறுமையினால் வாடிக்கொண்டு கிடக்கிறது. அடுத்தவன் கபில்- பன்னிரெண்டு வயதில் புத்தகங்களையும், இலட்சியங்களையும் சுமக்க வேண்டிய என் மகன்- ஏக்கங்களையும், வேதனைகளையும் சுமந்து கொண்டு திரிகின்றான்.*

*குழந்தைகளும் அப்பா அப்பா என்று கடிதங்கள் எழுதி அலுத்து, நொந்து இப்போ தவித்தபடி நிற்கிறார்கள்.*

*எங்களை வறுமை வாட்டி வதைக்கிறது. தங்களைத்தாங்களே கவனிக்க முடியாத இந்த யுகத்தில் யார்தான் எங்களைக் கவனிக்க இருக்கிறார்கள்? அதுபோக அந்நிய ஊரான எனக்கு இங்கு உதவி செய்ய யாருமே இல்லை. ஆனால் உங்கள் சொந்தங்கள் பலர் இங்கு இருந்தும் எங்களை ஒதுக்கியே பார்க்கிறார்கள்.*

*நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் போது நான் எந்த முகத்துடன் மற்றவர்களிடம் உதவிகேட்பது? அப்படி யாரிடமாவது போனாலும் அவர்கள் என் உடம்பையும் பார்க்க ஆசைப்படுகிறார்கள். இப்படி வாழ்வது ஒரு வாழ்க்கையில்லை. நாங்கள் கையேந்துவதும் உங்களுக்குக் கௌரவம் இல்லை.*

*இனிமேல் குடும்பத்துடன் மடிந்து போவதைத் தவிர வேறு வழியும் தெரியவில்லை. இருந்தும் நம் செல்வங்களுக்காக மறுபடியும் ஒரு முயற்சி- குழந்தைகளின் உயிருக்காகவென்றாலும் நீங்கள் பணம் அனுப்பியே ஆகவேண்டும். உரிமையுள்ள ஒரு மனைவி- தாலி கட்டிய கணவரிடம் கையேந்தி நிற்கிறேன்.*

*தயது செய்து எங்களைக் காப்பாற்றுங்கள். இனி எல்லாம் அவன் செயல். முடித்துக்கொள்கிறேன்.*

**இவ்வண்ணம்,**
**உங்கள் மனைவி தி.சோதிமலர்**

நிதானமாக வாசித்து முடித்தான் தியாகு. பின்னர் இரு கைகளிலுமிருந்த அந்தக் காகிதத்தை வலக்கை விரல்களுக்கு மாற்றி, சுருட்டி உள்ளங்கையில் வைத்துக் கசக்கினான்.

அப்போது மாறா தேனீர் கொண்டு வந்தாள். கசக்கிய காகிதத்தைப் பக்கத்திலிருந்த குப்பைக் கூடைக்குள் வீசினான். போன கிழமையும் அப்படி கசக்கி எறியப்பட்ட காகிதம் குப்பைக் கூடைக்குள் எட்டிப் பார்த்தபடி கிடந்தது. தேனீரை வாங்கியவன் உறிஞ்சிச் சுவைக்க ஆரம்பித்தான். ■

# ஏமாற்றம்



**அ.கௌரிதாசன்**

ஓலைக் குடிசையின் ஓட்டைகளால் பதினாலாம் பக்கத்து நிலவொளி ஐந்தாறு இடங்களில் உள்ளே அடையாளம் காட்டியது. புவனாவின் இடது கன்னத்திலும் அந்த நிலவுப் பொட்டொளி பட்டு மிளிர்ந்தது. குடிசையின் முகட்டுக் கப்போடு சாய்ந்தபடி யோசித்துக் கொண்டிருந்தாள் அவள். அடிமனதில் நூற்றுக்கணக்கான மின்னல் இடி... குளிர்ந்த மழைத்தூறல் எல்லாம்.

"புவனா...! உன்ர புருஷன் என்ன மரக்கட்டையாடி... வீட்டில ஒரு பொஞ்சாதி காத்திருப்பா எண்ட எண்ணமே கிடையாதா...? ஒவ்வொரு ராவும் குடி.... குடி குடி தானா... பின்ன எதுக்குடி ஒன்ன அவருக்கு...?"

கிணற்றடியில் வைத்து மூன்றாவது வீட்டில் தோழி மோகநேஸ் நட்புணர்வோடு அடித்தாற்போற் கூறியது புவனாவின் காதுகளில் இப்போதும் ஒலித்துக் கொண்டிருந்தது. நேரம் இரவு பத்து மணியாகி இருக்கலாம். ஒழுங்கை முடக்கில் தேவனின் சத்தம். படலைக் கதவு 'பறார்' எனத் தள்ளப்படுகிறது. தள்ளாடியபடி வருவது புவனாவின் கணவன் தேவனே தான். "பு.... புவனா... பன்னாங்க என்னேரமோ சத்திட்டியேட... கண்ணு...! எந்த மாப்பிள்ளைக்காகச் சாத்தினா......"

இதுவழமையானதால், கைகழுவி சாப்பாடு போட்டு தேவனைப் படுக்க வைத்தாள் புவனா. நேரம் பன்னிரண்டு மணிக்குமேல். புவனா... சாய்ந்து படுத்தபடி கண்மூடி மதுவின் ஆக்கிரமிப்பில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் தன் கணவனைப் பார்க்கிறாள்.

கல்யாணத்துக்குப் பிறகு ஒரேயொரு குழந்தை. அதன் பிறகு அவன் மதுவின் மழலை.

அடுத்த குடிசை குலமணியும் அவள் கணவனும் மாலைவேளை மங்குமளவுக்கு கொஞ்சிக் குலவுவது புவனாவின் மனக்கண்ணில் துளிர்க்கிறது. உணர்ச்சி ஓட்டத்தை கரையிறக்கி வைக்க இயலாப் பருவம். வாழ்வை வசைபாடுவதா..? இல்லை விதியை நோவதா...? பெருமூச்சொன்றோடு புவனா மறுபுறம் சரிகிறாள்.

கண்ணீர்த்துளிகள் அவள் தலையணையை நனைத்துக் கொண்டன. ■

# சப்பாத்து

"சுப்புவ கொழும்புக்கு அனுப்பாதே ஆத்தா; எங்களுக்கு சுப்பு வேணும்!"



**ரூபராணி**

சுப்பு தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தான். அவனுடைய அழுக்கேறிய ஒட்டுப்போட்ட உடைகள் அலங்கோலமாகக் கலைந்திருந்தன.

"டேய் சுப்பு! ஓடாத நில்லுடா நில்லு" கத்திக்கொண்டு அவன் பின்னால் ஓடினாள் பொன்னுத்தாயி.

அவளால் சிறிது தூரந்தான் ஓட முடிந்தது. மேட்டு லயத்துப் பக்கமிருந்த வாண்டுகளெல்லாம் அவளை வேடிக்கை பார்த்தனர்.

பொன்னுத்தாய்க்கு மூச்சுவாங்கியது. அதற்கு மேல் அவளால் சுப்புவைத் தொடர்ந்து ஓட முடியவில்லை. குளிர்காற்று சிலு சிலுவென்று அவள் முகத்தில் அறைந்தது. முந்தானையை இழுத்துக் கழுத்துவரை மூடினாள் பொன்னுத்தாய். "எங்க போயிடுவான்.... எப்பிடியும் வீட்டுக்கு வந்துதானே ஆகணும்?" தனக்குத்தானே முணு முணுத்தவள் லயத்தின் தொங்கல் வீட்டை நோக்கி விரைந்தாள்.

ஒண்ணாம் நம்பர் லயத்தில் கடைசிக் காம்பறாவும் திண்ணையும் அவளுக்குச் சொந்தம். சின்னமணியும் ரஞ்சிதமும் பொன்னுத்தாயின் வாரிசுகள். அழுக்குச்சட்டையும் பரட்டைத் தலையுமாக திண்ணைக்கட்டில் உட்கார்ந்திருந்தனர். ரஞ்சிதத்துக்கு நாலு வயது. மூக்கில் வடிந்ததைச் சட்டையை உயர்த்தித் துடைத்தவள் பொன்னுத்தாயைக் கண்டதும்,

"ஆத்தா பசிக்குது," என்று சிணுங்கினாள்.

"சுப்புவ கொழும்புக்கு அனுப்பாத ஆத்தா; எங்களுக்கு சுப்பு வேணும்!" ஏழு வயதுச் சின்னமணி விம்மியது.

எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் பொன்னுத்தாய் அடுப்பங்கரையில் றொட்டி தட்டிப் போடுவதில் முனைப்பாயிருந்தாள்.

சின்ன மணியும் ரஞ்சிதமும் ஆத்தா சுட்ட றொட்டி ஒன்றை ஆளுக்குப் பாதியாய் எடுத்துப் பங்கிட்டுக் கொண்டனர். பொன்னுத்தாய் அடித்த சிலையாக உட்கார்ந்திருந்தாள். சுப்புவின் ஞாபகம் நெஞ்சை அடைத்தது.

மாரிமுத்து சினிமாப்பாட்டொன்றைச் சத்தமாய்ப் பாடியபடி வந்து சேர்ந்தான் அவன் பொன்னுத்தாய்க்குப் புருஷன். "என்ன நீங்க பாடுறீங்களா? இல்ல உள்ள போனது பாடுதா?" பொன்னுத்தாய் ஏளனமாய்க் கேட்டாள்.

"சும்மா கெடபுள்ள. அதெல்லாம் ஒண்ணுமில்ல." என்று சொன்னவன் மடியில் செருகியிருந்த பூந்திச் சுருளை எடுத்து ரஞ்சிதத்தின் கையில் கொடுத்தான் மாரிமுத்து.

"ஆமா சுப்பு எங்க?" அக்கம் பக்கம் பார்வையை ஓட்டினான் மாரிமுத்து. "என்ன புள்ள நாளைக்கி சுப்புவக் கூட்டிக்கிட்டுக் கொழும்புக்குப் போறதானே?"

"அவனுக்கு இஷ்டமில்லிங்க; படிக்கிற புள்ளய ஏங்க வேலைக்கனுப்பணும்?" பொன்னுத்தாய் தன் வேதனையை வெளிப்படுத்தினாள்.

"வெபரம் புரியாமப் பேசாத தாயி! நம்ப முனியாண்டி இருக்கானில்ல- அவன் ஒரு நல்ல எடமாப் பாத்துக் கொழும்பில் பேசியிருக்கான். ஆயிரம் ரூபா சம்பளம்வாங்கிக் குடுப்பானாம். நம்ம பயலுக்கு நல்ல காலம் பொறந்திரிச்சி."

பொன்னுத்தாய் ஏக்கப் பெருமூச்சுவிட்டுப் பார்வையை வெளியே மேயவிட்டாள். எங்கும் இருள் பரவியது. பண்டாரி வீட்டு நாயின் ஊளைச் சத்தம் விட்டுவிட்டுக் கேட்டது.

யாரோ பதுங்கிப் பதுங்கிக் காம்பராப் பக்கம் எட்டுவதை மாரிமுத்து கண்டு கொண்டான்.

"யார்ரா அவன்?"

"நாதான் அப்பா!"

"யாரு சுப்புவா? வாடா ஏன் பதுங்கிறே?" சரேலென்று வந்து மாரிமுத்துவின் மடியில் சுருண்டான் சுப்பு.

"அப்போய் நாகொழும்புக்குப் போகல- படிக்கப்போறன். பெரிய மாஸ்டர் எல்லா உதவியும் பண்ணுவாராம்." சுப்பு சொல்லி முடித்தான்.

"அதெல்லாம் நடக்கிற விஷயமா? இதோ பார் சுப்பு! நீ எம்புட்டுக்காலமா சப்பாத்துப் போட ஆசப்பட்டால்ல? நீ கொழும்புக்கு வேலக்கிப் போனா ஒனக்கு சப்பாத்து, நல்ல உடுப்பெல்லாங் கெடைக்கும். இப்ப சொல்லு போறியா?" மாரிமுத்து சுப்புவின் தலையைப் பாசத்தோடு தடவினான்.

சுப்புவின் முகத்தில் பரவிய கலவரம் மெதுவாக மறைந்து மகிழ்ச்சி பரவியது. இரவு பூராவும் சப்பாத்தின் ஞாபகம், அவன் தூக்கத்தைக் கலைத்தது.

* * *

சுப்பு வேலைக்குச் சேர்ந்து எப்படியோ ஆறுமாதங்கள் கழிந்துவிட்டன. அவன் எதிர்பார்த்த சுகம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அன்று சனிக்கிழமை. சுப்புவைத் தவிர எல்லோரும் உறவினர் வீட்டு விருந்துக்குப் போய்விட்டனர்.

பூட்டிய வீட்டுக்குள் விடப்பட்ட சுப்புவின் மூளை தீவிரமாக வேலை செய்தது. ரமணன் படிக்கும் அறையுள் சரேலென்று புகுந்தான். அங்கே அணிவகுத்திருந்த சப்பாத்துக்களைப் பார்த்த அவன் கண்களில் ஆசை பளிச்சிட்டது. சுப்பு எதையுமே யோசிக்கவில்லை. ஒவ்வொரு சப்பாத்தாய்ப் போட்டுப் பார்த்துக் கண்ணாடியின் முன் நின்று தன்னை மறந்து இரசித்தான். குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான்.

அப்போது அவன் எதிர்பாராத அதிர்ச்சி. கிளாக்கர் அம்மா போனவேகத்தில் திரும்பி வந்து விட்டாள்.

சுப்புவைக் கண்களால் சுட்டெரித்தாள். அவனுடைய சப்பாத்துக்கால்களைப் பார்த்துப் பத்திர காளியாக மாறினாள். "மன்னிச்சிடுங்க அம்மா!" என்று விம்மி அழுதான் சுப்பு. சமையல் அறைக்குள் பாய்ந்து சென்ற கிளாக்கர் அம்மா எரியும் விறகுக் கட்டையைக் கொண்டுவந்து சுப்புவின் இரண்டு கால்களிலும் சூடு போட்டாள். அவனுடைய கதறல் லயத்துக் காம்பறாவில் கேட்க நியாயமில்லை. ■

# முடிந்த முடிவு

வெய்யில் கொடுமையின் வேகத்திற்கு ஒரு சின்ன சிலுமிசம் செய்து கொண்டிருந்தது அந்த விறாந்தையின் கூரையின் மேலிருந்த மின்விசிறி. ஆயுட்காலத் தேய்வுப் பெறுமானம் கணித்துப் பார்த்தால் அரைச் சதத்திற்கும் தேறாத அந்த அரை நூற்றாண்டு பழமை வாய்ந்த மின்விசிறியால் ஆனது அவ்வளவுதான். வைத்தியரிடம் காட்டினால் வயதாகிவிட்டது என்கிறார்கள். இருக்கும் வரை இருந்துவிட்டுப் போகட்டும். இவ்வளவு காலமும் உழைத்ததை உதறித் தள்ளுவதா?

சுரேந்திரனின் சாரீரத்தில் வியர்வை வியாக்கியானம் செய்து கொண்டிருந்தது. சூழல் வெப்பத்துடன் ஒப்பிடும்போது அவன் மனவெப்பம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. காரணம், இன்னமும் சொற்ப நாட்களில் எதிர்கொள்ளவிருக்கும் சோதனைகள் தான்.

"டேய், என்ன யோசிக்கிறாய்? அனேகமாய் அவை இந்தக் கிழமைக்குள் நாட்குறிப்பினம் போலை இருக்கு. நீ இப்பிடி இருந்தா என்ன முடிவு. கொஞ்சம் உதவி செய்யேன்." வீடு பெருக்குவதிலும் அழகு படுத்துவதிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்த சுரேந்திரனின் தாயாரான பாக்கியத்தின் கணைகள் இவை.

அவனுக்கு இவை எதுவும் காதில் நுழையாது என்பது திடமானதே. அவனின் சிந்தனைகள் எல்லாம் பழைய நினைவுகளில் படரத் தொடங்கியது.

"விமலா, விமலா" விழிகள் ஈரத் துணிக்கைகளை வாங்கிக் கொள்ள உதடுகளில் இருந்த ஈரப்பசை அகல நா வரண்டு தவித்தது.



**யாழ். ஞானகணேசன்**

"விமலா, நானும் நீயும் அடுத்த பிறப்பிலும்" அவன் முடிக்குமுன்பே அவள் அவன் கைகளை தன்கைகளில் பொருத்திக் கொண்டே சொன்னாள்.

"பிரியோம்."

ஆனால் இப்போ, விமலாவை பாக்கியத்திற்கு பிடிக்கவில்லை என்பது உண்மைதான். காரணம் எதுவென்பதுதான் புதிர். ஆனாலும் சுரேந்திரன் தன் கல்லூரி வாழ்க்கையில் கல்வியுடன் சேர்த்துக் கொண்டது அவள் காதலையும்தான். எத்தனை தடைகளைத் தாண்டி அவள் கரங்களைப் பற்றிக்கொண்டான்.

ஒரு சிறு தகராற்றின் விளைவு அவர்களை திருமணவாழ்கைக்கு விடை கொடுத்து விவாகரத்துவரை அனுப்பிட்டதே என்பதை நினைக்கும் போதுதான், அவனுக்கு காதல் என்பது வெறும் கண்ணாடி முன்நின்று முக அழகு பார்க்கும் முட்டாள்தனமல்ல என்பதும், அகக்கண் கொண்டு இதயத்தின் ஆழத்தை அறிந்து கொள்ளவேண்டும் என்பதும் புரிந்து கொண்டது.

திருமணத்தின் பின்தான் ஆரம்பித்திருக்க வேண்டும். எத்தகைய சிறுவிடயத்திலும் இணக்கம் காணமுடியாதவாறு முரண்பாடுகள் வளரத்தொடங்கின. சாப்பாட்டிற்கு உப்பிடுவதில் இருந்து சாதா முரண்பாடுகள் வளர்ந்தனவே தவிர முன்னேற்றமடைந்ததாகவில்லை. இவை யாவற்றிற்குமான காரணத்தை முழுமையாக விமலாவின் தலையில் போட்டுவிட முடியாது சுரேந்திரனுக்கும் பாதிப்பங்கிற்கு பொறுப்புண்டு.

"காதல் என்பது கண்ணாடி முன்நின்று முக அழகு பார்க்கும் முட்டாள் தனமல்ல!"

ஒருநாள் வீட்டில் ஏற்பட்ட சிறுதகராறு முற்றிய நிலையில் விமலாவின் வாய்ப்பேச்சை அடக்குவதற்காக சுரேந்திரனுக்கு கிடைத்த ஆயுத வார்த்தைகள் ஆழமாக அவள் மனதைப் புண்படுத்தியது.

"வரயிக்கை ஏதோ கொண்டுவந்தவை மாதிரிக் கதைக்கிறாய். வெறுங்கையோடு வந்ததை மறந்திடாமல் கதை."

பிழையான வார்த்தைகள் என்பது வாயில் இருந்து வந்த பின் தான் அவனால் உய்த்தறியமுடிந்தது. முடிவு இருவரையும் நீதிமன்றத்தில் நிற்க வைத்தது.

பாக்கியத்தின் கடுமையான குரல் சுரேந்திரனை இந்தயுகத்திற்கு கொண்டு வந்து நிறுத்தியது.

"டேய், மணியண்ணை வந்திட்டுப் போறார். அவைவாற திங்கட்கிழமை வைப்போமோ எண்டு கேக்கினமாம். பொம்பிளைக்கு அவர் உன்ரை பிரச்சனை எல்லாம் சொன்னவராம். பிரச்சனையில்லையாம்."

"அம்மா, எனக்கு இது விருப்பமில்லை." சுரேந்திரனின் வார்த்தைகள் தழுதழுத்தன.

"என்ன... விசர்க்கதை கதைக்கிறாய்?"

"இல்லையம்மா. என்னாலை விமலாவை மறக்க ஏலாது."

"அதுக்கு..." பாக்கியம் முடிக்குமுன்பே அவன் வீதியில் இறங்கி நடக்க ஆரம்பித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# ஐந்தும் உன்னிடம்

தருவது ரசிகன்



'மீனுக்கு வீசிய வலையில்
மான் எப்படி மாட்டியது?'
சின்னத் தோணியில் நின்றான் பொன்னன்
எண்ணம் மட்டும் ஆச்சரிய ஏணியில்!
'கடலிலே வீசாத புயல்
கரையில் மட்டும் சுழன்றடிப்பது எப்படி?'
மனதில் மையம் கொண்டது வினா.

'சிப்பிக்குள் இருந்த முத்தா
சிற்பி வடித்த கலைச் சொத்தா?'
இன்னொரு கேள்வி அலை.
'கடற்கன்னிதான்
கரைமீது உலாப் போகிறாளோ?'
ஆச்சரிய அலை மனதில் மோதியது.

'மீன் போனால் போகட்டும்
மான் காண வேண்டாமா?'
தோணியை கரைக்கு விட்டான்.
கண்டதெல்லம் கனவுமல்ல
கண்கள் உண்டதெல்லாம் பொய்யுமல்ல.

'ஊர் அஞ்சும் போர் விழிகள்
கூர் கொண்ட மார் எழில்கள்
கார் மேகக் கூந்தல் கொண்டு
தேர் என்று அசைந்து வரும்
பேர் அறியாப் பாவை இவள்'

பொன்னன் ஆசைக் கடலில்
அலையும் தோணியானான்.

'நிலவைப் பிய்த்து
நிலத்தில் எறிந்தது யார்?'

'சொர்க்கத்தை பெயர்த்தெடுத்து
கடற் பக்கத்தில் வைத்தது யார்?'

'கட்டழகுச் சித்திரத்தை
மொட்டிரண்ரோடு பத்திரமாய்
கரையருகில் படைத்தது யார்?'

'வானில் இவள் இருந்தால்
நட்சத்திர போர் நடக்கும்.
சுயம்வரத்தில் வெற்றி பெற
நட்சத்திர போர் நடக்கும்!

'ஜனகன் மகளுக்காய்
வில் உடைத்தான் இராமன்
கனவுப் பெண் இவளுக்காய்
எத்தனை பேர் பல் உடைய
சுயம்வரப் போர் நடக்குமிங்கே?'

'வலையில் மீன் விழுந்தால்
சந்தையிலே விலையும் உண்டு.
வலையில் இவள் விழுந்தால்
விலையாக சிந்தைதான் உண்டு!'

'மூழ்கி எடுக்காத முத்து
மூழ்க வைக்கின்ற அழகுக் கொத்து'
பொன்னன் எண்ணத்தில்
ஆசைப் புயல் வீசியடித்தது.

அரவம் கேட்டவள்
திருமுகம் திருப்பினாள்.
உருவம் கண்டதும்
விழிவேல் செலுத்தினாள்!

'நட்டமரம் போல நிற்கின்ற
கட்டுடல் காளை யார்?'

'சண்டைக்கு பாய்கின்ற
மஞ்சுவிரட்டு காளைபோல
தோள் உயர்த்தி நிற்கின்ற
வாள் மீசைக்காரன் யார்?'

'கையிரண்டும்
இரும்புத் துண்டோ
காலிரண்டும்
கல் தூணோ?
மார் விரிந்து நிற்கின்ற
இந்த மச்சக்காளை யார்?'

அவள் பார்க்க
அவள் விழி பாய
அவன் நினைத்தான் பல நினைவு.

'உன்னைக் கண்டேன்
உண்ணக் கண்டேன்
கன்னம் மின்னும் வண்ணத்தில்
என்னைக் கண்டேன்
கண்டு விட்டேன் கண்டுவிட்டேன்
நானும் உண்டு விட்டேன்'

அப்படித்தான் ஆரம்பித்தது
அவர்கள் காதல்.
'எப்படித்தான் வளர்ந்ததோ
செப்படி வித்தைபோல?'
இன்று வியந்தனர் இருவரும்.

நேற்று கடல் மடியில்
அவன்
இன்று அவள் மடியில்
அவன்.

எட்டநின்று இரசித்த
பருவ நிலாவை
கிட்ட நின்று தழுவுகிறான்
பருவக் காளை!
தூரத்தில் இருந்தே
முகர்ந்த மலர் மணத்தை
இதழ் ஈரத்தோடு
நுகர்ந்தான் வண்டுக் காளை!

போதும் என்று பயந்த
மோக எழில் கணைகள்
முட்டிய பின்னும்
மோதும் என்று சொன்னாரில்லை!

கடல் சுழியோ
எனப் பயந்த-அவள்
மணி வயிற்றுச் சுழி மீதில்-தன்
பணியென்று இதழ் பதித்தான்.

'நீலக் கடல் அருகே
கோல அழகையெல்லாம்
பசியாற படைத்தவளே
வேழம் என எனக்கு
கரும்பு சுவை தந்தாய்.
காலம் பல வெல்லும்
கோலக் காதல் தந்தாய்!'

"புலம்பாதீர்
மோகத்தில் பொய் இயம்பாதீர்"
என்றாள் கோலப் பெண்ணாள்.

"தணலிடை விழுந்து
வெப்பத்தில் தவித்தவர்
புனலிடை குளித்து
குளிரென்பது பொய்யோ?

"பாழ் நிலமீதில்
தாகத்தில் தவித்தவர்
கானலைக்கூட
நீரென்று நினைப்பர்!"
அவள் இடக்காகப் பேசினாள்.

"கானலல்லடி
வான் மழை நீயடி.
கானக்கிடைக்காத
தேன் சுனை நீயடி.
கானம் மீட்டிய
கலை வீணை நீயடி.
புழுதியில் உன்னை
எறிய நானென்ன
விரல்கள் இல்லாத
காளையோ சொல்லடி?!"

கேட்டவன்
இச் ஒலி எழுப்பினான்.

"ஆஹா தேவியே
ஐம்புலன் யாவும்
உயிர்த்ததே உயிர்த்ததே!"
சொக்கியே செப்பினான்.

வளையல் பூட்டிய கரத்தினாள்
வலை விழிகளால்
வீசினாள் கேள்வியை;

"ஐம்புலன் எப்படி
ஒன்றாய் இனித்தது?"

"கண்டேன்
காண எழில்கள் உள்ளன.
கேட்டேன்
கேட்க தேன் மொழி உள்ளது.
உண்டேன்
உண்ண கனிகள் உள்ளன.
முகர்ந்தேன்
முகந்திட வாசனை உள்ளது.
உற்று அறிந்தேன்
முற்றில்லை இன்பக் கடலுக்கு"

விடை கேட்டு வெட்கினாள்.
இடை தொட்டு தழுவினான்.

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டோடி கண்ணே உள"
குறள்-1101- அதிகாரம்- 111

## இலக்கிய நயம்

## சிந்தியா பதில்கள்

✉ ✍

★ மைக் டைசன் தொடர்ந்து விளையாட முடியுமா?

கே. ஆயிஸா, மாத்தளை.

*ஆயுட்காலத் தடை விதித்திருக்கிறார்கள். ஆனாலும் ஒரு வருட காலத்தில் தடையை மறுபரிசீலனை செய்யும் வாய்ப்பும் இருக்கிறது. டைசன் நல்ல பிள்ளையாக இருக்கிறார் என்று அவர்கள் தீர்மானித்தால்தான் மாற்றுவார்கள்.*

✉ ✍

★ பெப்சி கிண்ணப் போட்டியில் தெரிவான இந்திய அணி தொடர்பாக கப்டன் டெண்டுல்கருக்கு திருப்தி இல்லையாமே?

*வினோத் காம்ளியை சேர்க்கவில்லை என்று அணித் தெரிவின்போது முரண்டுபிடித்தது உண்மை. அதுபற்றி கொழும்பில்வைத்து நிருபர்கள் கேட்டபோது உள்பிரச்சனையை பூசிமெழுகியது நாகரிகம். என்னைக் கேட்டால், காம்ளியை சேர்த்திருக்கலாம் என்ற முடிவுக்கே வாக்கு.*


✉ ✍

★ சிந்தியா! உங்களிடம் ஒரு கேள்வி! கையால் சாப்பிடுவது, ஸ்பூனால் சாப்பிடுவது- எது சுகம், சுவை?

எம்.யூ. ஜரினா பேஹம், பாணந்துறை.

*சுகம், சுவை மட்டுமல்ல, சுத்தமும் கையால் சாப்பிடுவதில்தாங்க. அப்படியே ஒரு குழை குழைத்து உருட்டி ருசி பார்த்து, பதம் பார்த்து சாப்பிடும் சுவையே தனிதான்.*

*நம் நாட்டுக்காரர் ஒருவர் இலண்டனில் ஒரு விருந்தில் கலந்துகொண்டார். அவரது வழக்கப்படி கையால் உணவை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினார். பக்கத்தில் இருந்த சீமாட்டி அதனை நையாண்டி செய்தாள்.*



*"அழுக்குக் கையால் சாப்பிட உங்களால் எப்படி முடிகிறது?"*

*நம் நாட்டுக்காரர்: "சாப்பிட முன்னர் கை கழுவிவிட்டுத்தான் வந்தேன்," என்றார்.*

*அவள் சொன்னாள்: "எங்கள் கத்தி, ஃபோர்க், ஸ்பூன் எல்லாவற்றையும் வெந்நீரில் போட்டுச் சுத்தம் செய்கிறோம்."*

*நம் நாட்டுக்காரர் உடனே கேட்டார்: "அம்மணி! என் கையும், விரல்களும் என் ஒருவன் வாய்க்குள் மட்டுமே போய் வருகின்றன. உங்கள் கத்தி, ஸ்பூன், ஃபோர்க் எல்லாம் எத்தனைபேர் வாயில் போய்வருகின்றன என்று சொல்ல முடியுமா?"*

✉ ✍

★ டியர் சிந்தியா! 'தேவதை', 'ஒன்ஸ்மோர்' இரண்டில் எது அசத்தல்?

ஜி. அகஸ்ரின், கொழும்பு-08.

*'அவதாரம்' படத்தின் மூலம் வர்த்தக ரீதியில் சறுக்கிய நாசர், 'தேவதை' மூலம் நிமிர்ந்து நிற்கிறார். படத்தில் நடிப்பிலும் இயக்கத்திலும் நாசர் டச்....நச் நச்! 'ஒன்ஸ் மோர்' இன்னமும் பார்க்கவில்லை, பார்த்தவர்கள் பாதகம் சொல்லவில்லை.*

✉ ✍

★ உங்கள் புகைப்படங்களை அன்றும்-இன்றும் பகுதியில் பிரசுரிப்பீர்களா?

என். சௌவியதாசன், பெரிய நீலாவணை-02.

*நாட்டு நடப்பு போதாது என்று நான் வேறு மிரட்ட வேண்டுமாக்கும்!*

✉ ✍

★ கவிஞர் வைரமுத்துவின் சமீபகாலப் பாடல்களில் பொருள் ஆழம் குறைந்து வருகிறதே- ஏன்?

வி. யோகசுந்தரம், பண்டாரவளை.

*இசையமைப்பாளர்களின் விருப்பத்துக்கு ஏற்ற ரெடிமேட் பாடல்கள் அப்படித்தானிக்கும் என்கிறாரே! நிற்க, நீங்கள் வைரமுத்து அபிமானி என்றால் ஒரு தகவல்: 'தமிழுக்கு நிறம் உண்டு' என்ற தலைப்பில் ஒரு கவிதைத் தொகுதியை தனது 44 வயது பிறந்ததினப் பரிசாக வெளியிட்டிருக்கிறார்.*

✉ ✍

★ இன்று ஆசிரியர்- மாணவர் உறவு எப்படி இருக்கிறது?

ஸரீமா ஸனூன், கம்பளை.

*பாராட்டும்படியாகவும் இருக்கிறது; பரிதாபப்படும்படியாகவும் இருக்கிறது.*

*ஒரு பாடசாலையில் மாணவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் தருவதைவிட, தங்கள் தோற்றங்களுக்கு முக்கியத்துவம் தருவதை ஆசிரியர் கண்டித்தார்.*

*"உங்கள் அழகைக் கண்டு தேவதைகள் வெட்கித் தலை குனியும். ஆனால் உங்கள் மூளையைப் பற்றித் தெரிந்தால் கழுதைகள் கூட உங்களைச் சட்டை செய்யாது."*

*ஒரு புத்திசாலி மாணவி எழுந்து சொன்னாள்:*

*"எங்கள் தோற்றம் இறைவன் கொடுத்த அன்பளிப்பு; ஆனால் எங்கள் புத்தி உங்களைப் பார்த்து அல்லவா இயங்குகிறது?"*

✉ ✍

★ தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா யாரை நம்பி மறுபடி அரசியலில் தீவிரமாக இறங்கியுள்ளார்?

செ. ராஜேஸ், வவுனியா.

*மக்களின் மறதியை நம்பித்தான்! சமீபத்திய ஜெயலலிதா கூட்டங்களுக்கு சனக்கூட்டம் திரள்கிறதாம். இதனை பத்திரிகைகள் சொன்னதால் கலைஞர் கசந்து போயிருக்கிறார்.*

✉ ✍

★ டியர் சிந்தியா! அப்பாஸ் மார்க்கெட் எப்படி இருக்கிறது?

ஸகீரா பானு, நீர்கொழும்பு.

*'வி.ஐ.பி.' (வேலை இல்லாத பட்டதாரிகள்) படமும் கைகொடுத்திருக்கிறது. சந்தோசம்தானே!*

✉ ✍

★ பெப்சி போட்டியில் எந்த அணி வெல்லும்?

ஜெ. நிசாந்தன், கொழும்பு-04.

*ஏன் இலங்கை அணி வெல்லக்கூடாது? அதில் பாருங்கள் நிசாந்தன், கிரிக்கெட் ஒரு சூதாட்டம் மாதிரி, கணிப்பது கஷ்டம். தவிர மூன்று யானைகள் மோதும்போது முன்கூட்டியே முடிவு பண்ணுவது கஷ்டம். ஆனாலும் முதல் போட்டி மூலம் இலங்கை அணி களத்தில் கால் ஊன்றியிருக்கிறது. உலக சாம்பியனை அதன் கோட்டைக்குள்ளேயே புகுந்து சாய்க்கப் போகிறார்களா? அல்லது கிண்ணத்தை கொடுத்துவிட்டு வாபஸாகப் போகிறார்களா?- என்பதுதான் விலை உயர்ந்த கேள்வி.*

✉ ✍

★ மட்டக்களப்பு பா.உ. பரராஜசிங்கம் கலந்து கொள்ளாத கூட்டமொன்றில் நாற்காலியொன்றை அவராகக் கருதி மாலை போட்டார்களாமே?

ஆ. ஸ்ரீகரன், மட்டக்களப்பு.

*நாற்காலியென்றதும் ஞாபகம் வருமளவுக்கு மக்கள் அவரைப் புரிந்துவைத்திருக்கிறார்களே! பாராட்டவேண்டிய காரியம்தான்.*

✉ ✍

★ இரண்டு மாதகாலத்துக்குள் தமிழுக்கு உரிய அந்தஸ்த்து வழங்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளாரே, என்ன நினைக்கிறீர்?

ஆர். சுஹைர், மாவனல்லை.

*ரொம்பப் பயமாக இருக்கிறது. ஏற்கனவே நிதானமாகச் செய்யும் நேரம் இருந்தும் தமிழைக் கொலை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவசர உத்தரவைக் கேட்டுவிட்டு என்ன பாடு படுத்தப் போகிறார்களோ?!*

✉ ✍

★ நம்நாட்டுத் தொலைக்காட்சிகளில் நீங்கள் விரும்பி ரசிக்கும் நிகழ்ச்சிகள் எவை?

செல்வி ரி. பவானி, கொழும்பு-10.

*விளம்பரங்கள்!*

✉ ✍

★ என்றுமே மன்னிக்க முடியாதவன் விரோதியா? துரோகியா?

என்.ரி. அமீனுதீன், அக்கரைப்பற்று-06.

*இக்கேள்வியை இருபது வருடங்களுக்கு முன்பாக எங்கள் தலைவர்களிடம் கேட்டிருந்தால் சரியான பதில் தரப்பட்டிருக்கும்.*

✉ ✍

★ யாருக்காவது உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிய அனுபவம் உண்டா?

கே. றமீஸ்டீன், புத்தளம்.

*முகத்தைவைத்து அகத்தையறியும் பழக்கம் சற்றுக் கைவரப் பெற்றதால் அப்படி மாட்டிக்கொண்டதில்லை. ஒரு கதை படித்ததுண்டு. சொல்கிறேன்:*

*ஒரு குடிகாரன் நன்றாகக் குடித்துவிட்டு வீடு வந்தான். பூட்டைத் திறக்க முடியாமல் அவதிப்பட்டான். எத்தனை முயன்றாலும் பூட்டின் துவாரத்தில் சாவியை நுழைக்க முடியாமல் ஆடினான். பக்கத்து வீட்டுக்காரனை உதவிக்கு அழைத்தான்.*

*அவன் இவனிடம்: "சாவியைக் கொடு. நான் திறந்துவிடுகிறேன்," என்றான்.*

*குடிகாரன் சொன்னான்: "நீ திறக்க வேண்டாம், நானே திறக்க முடியும். இந்த வீடு என்ன ஆட்டம் போடுகிறது! கடிகாரத்தின் பெண்டுலம் மாதிரி இப்படியும் அப்படியும் ஆடித் தொலைக்கிறதே. நீ வீட்டை ஆடாமல் கெட்டியாகப் பிடித்துக்கொள்! நான் பூட்டைத் திறந்து விடுகிறேன்."*


## ஸ்போர்ட்ஸ்

## நடிகராகும் விளையாட்டு வீரர்

**1994ம்** ஆண்டு நடந்த உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் தன்னுடைய சிறப்பான ஆட்டத்தின் மூலம் இரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் பிரேஸில் வீரர் ரொமாரியோ.

பிரேஸில் அணிக்குத் தன்னுடைய சிறப்பான ஆட்டத்தின் மூலம் உலகக் கோப்பையை வெல்லக் காரணமாக இருந்தவர் ரொமாரியோ. இதற்காக அவருக்கு 1994ம் ஆண்டிற்கான சிறந்த வீரருக்குரிய தங்கப் பந்து பரிசாகக் கிடைத்தது.

தற்போது இவரது வாழ்க்கை வரலாற்றை படமெடுக்கவுள்ளார்கள். 'ரொமாரியோ 2000' என்று பெயர் வைக்கப்பட்டுள்ள இப்படத்தில் ரொமாரியோவே கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.



இப்படத்தின் படப்பிடிப்புக்கள் பிரேஸிலின் தலைநகரான ரியோடி ஜெனீரோவில் நடைபெறவுள்ளன.

## இரண்டு புது முகங்கள்

இலங்கைக்கு வந்துள்ள இந்திய கிரிக்கெட் அணியில் இரண்டு புதுமுகங்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். ஒருவர் நிலேஷ் குல்கர்னி. மற்றவர் தேபஷிஷ் மொஹந்தி.

24 வயதாகும் மும்பாய் வீரர் குல்கர்னி இடது கைச் சுழற்பந்து வீச்சாளர். 6 அடி உயரமான குல்கர்னி, கடந்த மூன்று வருடங்களாக விளையாடியுள்ள முதல்தரப் போட்டிகளில் 93 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார்.

21 வயதான ஒரிஸ்ஸா வீரர் தேபஷிஷ் மொஹந்தி வேகப்பந்து வீச்சாளர். ஒரிஸ்ஸா மாநிலத்தில் இருந்து இந்திய அணியில் விளையாடும் முதலாவது வீரர் இவர்.

கடந்த ஆண்டு முதல், முதல் தரப் போட்டிகளில் விளையாடும் இவர், 6 போட்டிகளில் 23 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். முன்னாள் அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் டெர்னிஸ் லில்லியால் பயிற்றுவிக்கப்பட்ட மொஹந்தி, சார்க் கிரிக்கெட் போட்டியில் இந்திய 'ஏ' அணியில் இடம்பெற்றவர்.

## மற்றொரு ஆட்டம்

இந்தியா சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி அண்மையில் 'சுதந்திரக்கோப்பை' போட்டிகள் நடத்தப்பட்டது. கோப்பையை இலங்கை அணி வெற்றி கொண்டது என்பன எல்லாம் பழைய செய்திகள்.

சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி மறுபடியும் ஒரு நாள் போட்டித் தொடர் ஒன்று நடைபெறவுள்ளது. ஆனால் இதில் முன்னாள் வீரர்கள் கலந்து கொள்கிறார்கள். 'இந்தியா-பாகிஸ்தான் பொன்விழாத் தொடர்' எனும் இப்போட்டித் தொடர் வரும் ஒக்டோபர் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருநாடுகள் பங்குபற்றும் இப்போட்டித் தொடரில் இந்திய அணிக்கு டிலிப் வெங்சர்காரும், பாகிஸ்தான் அணிக்கு ஸாஹீர் அப்பாஸும் தலைமை தாங்குகிறார்கள்.

## ஷார்ஜாவில் போட்டிகள்

நான்கு நாடுகள் பங்கு பெறும் ஷார்ஜா கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இவ்வருடம் டிசம்பர் 11ம் திகதி முதல் 19 திகதிவரை ஷார்ஜாவில் நடைபெறவுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கும் இப்போட்டிகள் முதல் முறையாக ஷார்ஜாவின் மின்னொளியில் நடத்தப்படவுள்ளன.

மூன்று இந்திய வீரர்கள், மூன்று பாகிஸ்தான் வீரர்கள் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் கப்டன் றிச்சி றிச்சட்ஸன் ஆகியோர் இப்போட்டிகளின் போது கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

## இவர்தான் அவர்



சனத் ஜெயசூரிய



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 92

## சிதறி ஓடிய அரக்கர் படை

இராஜகுமாரன்

இராமபிரான் போர் முனைக்குச் செல்வதற்கு ஆயத்தமானார். இலக்குவன் தன் அண்ணனுக்குரிய ஆடை அணிகளை அணிவித்து, கோதண்டம் எனும் வில்லையும் தன் அண்ணனிடம் பயபக்தியுடன் தந்தான். முதற்போர் இலங்கைக் கோட்டையின் வடபுற வாயிலை ஒட்டியே நடைபெற்றது. அங்கு இடம் பெற்ற பெரும் போரினால் எழுந்த ஓசை எங்கும் பரந்து ஒலித்த வண்ணமிருந்தது.

போருக்குச் செல்லும் வானர சைனியம் விரைந்து வந்து இராமபிரானுக்கு மரியாதை செலுத்திவிட்டுச் சென்றவண்ணம் இருந்தது. வீரர்களின் முகத்தில் காணப்பட்ட வீரக்களை இராமபிரானை மெய்மறக்க வைத்தது. தாரை தப்பட்டைகள், முரசம் ஆகியவற்றை முழங்கிய வண்ணம் வீரர்கள் முன்செல்ல, பின்னே அணிகள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்துச் சென்றன.

சுக்கிரீவனின் போராற்றலை விபரிக்கும் கவிச்சக்கரவர்த்தி, அவனை ஒரு சுழலும் சக்கரத்துக்கு நிகராகச் சொல்கிறார்:

**வாரணத்து எதிர் வாசியின் நேர் வயத்**
**தேர் முகத்தினில் சேவகர் மேல் செறித்து**
**ஓர் ஒருத்தர்க் கொருவரின் உற்ற உயர்**
**தோரணத்து ஒருவன் எனத் தோன்றினான்.**

(யுத்த காண்டம்-1001)

பொருள்:

*யானைப் படையின் எதிரிலும் குதிரைப் படையின் எதிரிலும் தேர்ப்படையின் எதிரிலும் இவற்றின் பின்வந்த காலாட் படையின் எதிரிலும்- ஒரே சமயத்தில் சுக்கிரீவன் தோற்றமளித்தான். அத்தனை வேகத்தில் சுக்கிரீவன் சுற்றிச் சுழன்று வந்தான். இவ்வாறு சுக்கிரீவன் போர் புரிந்தமை, ஏற்கனவே இலங்கை மாநகரின் அருகே அமைந்திருந்த தோரணவாயிலில் ஏறி நின்று ஆஞ்சநேயர் போர் புரிந்ததைப் போலத்தென்பட்டது.*

### சுக்கிரீவனின் போராற்றல்

சூரியன் மகன் சுக்கிரீவன் முன்னணியில் நின்று போரிட்ட முறையினை அவதானித்த வானரப்படைகளுக்கு உற்சாகம் மேலோங்கியது. சுக்கிரீவன் வெண்கடம்பம் எனும் மராமரத்தை மட்டுமே தன் ஆயுதமாகக் கொண்டு போரிட்டான். அம்மரத்தைக் கொண்டு யானைகள் பலவற்றை வீழ்த்தினான். குதிரைகள் நூற்றுக்கணக்கில் வீழ்ந்தன. அதே போன்று பல தேர்களும் சரிந்தன. காலாட்படையினர் எய்த அம்புகளோ எறிந்த வேல்களோ சுக்கிரீவனின் உடலைத் தீண்டாத வண்ணம், மராமரத்தைப் பம்பரம் போல் சுழற்றியபடி தானும் சுழன்று சுழன்று போரிட்டான்.

வானரப் படையினரும் கற்களாலும் மரங்களாலும் தாக்கி அரக்கர் படையைத் துவம்சம் செய்தனர். அரக்கர் படையைச் சேர்ந்த நால்வகை அணிகளும் பெரும் தாக்குதல்களுக்குள்ளாகின. அரக்கர் படையினரின் தாக்குதல்களினால் ஏராளமான வானரர்களும் சாய்ந்தனர். இரத்த வெள்ளம் நதியாகப் பெருக்கெடுத்தோடி கடலில் சங்கமமாகியது.

அரக்கர் படையில் மிகவும் பராக்கிரமசாலியான வச்சிரமுட்டி என்பவன், பல குதிரைகள் பூட்டிய தனது இரதத்திலேறி வடபுற வாயிலிலிருந்து வெளியே வந்தான். சுக்கிரீவன் தனி ஒருத்தனாக மராமரத்தை மட்டும் ஆயுதமாகவும் கேடயமாகவும் கொண்டு போரிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனுடைய தாக்குதலின் வேகத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் அசுரர் படை பின்வாங்கி ஓடும் கட்டத்தை அடைந்து விட்டிருப்பதையும் அவதானித்தான். சுக்கிரீவனை முதலில் வீழ்த்த வேண்டும் என்ற நோக்குடன், இரதத்தினை அவன் பால் செலுத்துமாறு தேர்ப்பாகனுக்குப் பணித்தான். தேர் வேகமாகச் செல்லும் போது அத்தேரின் சில்லுகளுக்குள், காயம் பட்டுக் குற்றுயிராய்க் கிடந்த வானரவீரர்களும், அசுரவீரர்களும் நசுங்குண்டு உயிர் துறந்தனர்.

வச்சிரமுட்டி தன்னை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்ணுற்ற சுக்கிரீவன் வச்சிரமுட்டியை நோக்கிச் சீறிப்பாய்ந்தான். தன்னுடைய மராமராயுதத்தினால் தாக்கி வச்சிரமுட்டியின் இரதத்தில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் அனைத்தையும் சாய்த்தான். வச்சிரமுட்டியும் தனது வில்லின் மூலம் பல பாணங்களை சுக்கிரீவன் மீது ஏவினான். ஆனால் சுக்கிரீவனை அப்பாணங்களால் எதுவும் செய்துவிட முடியவில்லை. வச்சிரமுட்டியின் இரதத்தைப் பொடிப் பொடியாக சுக்கிரீவன் உடைத்தெறிந்தான். இறுதியாக வச்சிரமுட்டியைத் தாக்கி அவனுடைய உயிரைப் போக்கி, அவன் உடலை தரையில் விட்டெறிந்தான்.

### வானரப் படையின் பெரு மகிழ்ச்சி

இக்காட்சியைக் கண்ட வானரப் படைகள் பெருமகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தன. அதேவேளை தங்கள் தளபதி வச்சிரமுட்டி, சிறிதளவு நேரம்கூட நின்று பிடிக்க முடியாமல் நிலை தளர்ந்து உயிர்விட்டதைக் கண்டு அசுரப்படைகள் பெருங்கூச்சலிட்ட வண்ணம் இலங்கை மாநகருட் சென்று மறைந்து கொண்டன.

இச்சம்பவத்தை நேரடியாகக் கண்ட கும்பானு என்ற வானரசேனைத் தளபதி தனது பெரும்படையுடன் களம் புகுந்தான். வானரசேனையுடன் ஒரு பிரிவாக கரடிப் படையும் நின்றது. இக்கரடிப்படையினை இடும்பன் என்பவன் தலைமைதாங்கிச் சென்று கும்பானுவின் படையுடன் மோத விட்டான். அசுரப்படைகள் வில், வேல் போன்ற ஆயுதங்களைத் தாங்கி வந்து கரடிப்படையுடன் மோதின. கரடிகளோ சிறு சிறு குன்றுகளைச் சுமந்து வந்து அசுரர்கள் மீது வீசின. இதனால் இருதரப்பினருக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. இடும்பன் தூக்கி எறிந்த ஒரே குன்றினால் கும்பானுவின் இரதம் பொடிப்பொடியானது. குதிரைகள் நசிந்தன. கும்பானு தரையில் குதித்து இடும்பனை நோக்கி ஓடி வந்தான். இடும்பன் தன்னுடைய கைகளினால் கும்பானுவின் மார்பில் ஓங்கிக் குத்தினான். பின்னர் அவனுடைய இடையை கால்களால் தாக்கி தோள்களைப் பிடித்துத் தூக்கி, அவன் தலையில் தன் தலையால் முட்டினான். கும்பானுவின் தலை வெடித்து மூளை வெளியேறி செத்து வீழ்ந்தான். படையின் தலைவனாக வந்த கும்பானு மாண்டதைக் கண்ட அசுரப்படையினர் திணறினர். அப்படையின் மற்றுமோர் பிரிவின் அணித்தலைவனாக இருந்த பிரகத்தன் என்பவன் வீராவேசத்துடன் முன் பாய்ந்து, பின் நோக்கி ஓட நினைத்த அசுரப்படைகளுக்கு



புத்துணர்ச்சி ஊட்டத் தலைப்பட்டான். தன்னுடைய வில்லினை எடுத்து சரமாரியாகப் பாணங்களைத் தொடுத்தான். இதனால் பல வானர வீரர்கள் சாய்ந்தனர்.

### நீலனும் பிரகத்தனும்

நீலன் என்ற வானர வீரனும் பெரும் படையுடன் ஆயத்தமாக நின்றிருந்தான். இடும்பனுக்கு உதவியாக தனது படைகளையும் களத்தில் இறக்கினான். கடும்போர் மூண்டது. நீலன் தூக்கிவந்த ஒரு பெரிய குன்று, பிரகத்தன் செலுத்திய கணைகளால் தாக்குண்டு சிதறியது. உடனடியாக ஒரு பெரிய மராமரத்தை நீலன் தூக்கிக் கொண்டு தாக்க ஆரம்பித்தான். பிரகத்தனுடைய தேர் உடைந்து நொருங்கியது. குதிரைகள் செத்து வீழ்ந்தன. பிரகத்தன் தன்னுடைய தண்டு எனும் ஆயுதத்தைத் தாங்கிய வண்ணம் நீலனை எதிர்கொண்டான்.

**தேர் இழந்து சிலையும் இழந்திட**
**கார் இழிந்த உருமெனக் காந்துவான்**
**பார் இழிந்து பரு வலித் தண்டொடும்**
**ஊர் இழந்த கதிர் என ஓடினான்.**

(யுத்த காண்டம்-1030)

பொருள்:

*தன்னுடைய தேரை இழந்தான்: வில்லையும் இழந்தான். இடியானது தனது உறைவிடமான மேகத்தை விட்டு கீழிறங்கியதைப்போல தரையிலே குதித்து தனது தண்டாயுதத்தைக் கையிலெடுத்து- தனக்குரிய இடத்தை இழந்துவிட்ட கதிரவனைப் போல- எதிரியை நோக்கி ஓடலானான்- பிரகத்தன்.*

☆ ★ ☆

இருவருக்குமிடையில் பலத்த சண்டை மூண்டது. நீலன் பிரகத்தனை அவனுடைய தண்டுடன் தூக்கி வானத்தில் வீசி எறிந்தான். சிறிது தூரம்வரை வானில் மிதந்த பிரகத்தன் மீண்டும் பூமியை நோக்கி வந்தான். வந்த வேகத்தில் தனது தண்டாயுதத்தால் நீலனைத் தாக்கினான். நீலனுக்குப் பலமான அடி விழுந்தது. அவன் வாயிலிருந்து இரத்தம் வெளியேறியது. இருப்பினும் தன் வலியைப் பொருட்படுத்தாமல், நீலன் தன் வாலினால் பிரகத்தனைச் சுற்றி இழுத்து வெகு தூரத்துக்கப்பால் போய்விழுமாறு எறிந்தான். வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் பெருக்கெடுத்தோட பிரகத்தன் மடிந்தான்.

பிரகத்தன் எனும் மாபெரும் வீரன் வீழ்ந்தது அரக்கர் படைக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. மேற்கொண்டும் போர்க்களத்தில் தாக்குப்பிடித்து நிற்க முடியாமல் அசுரர் படை இலங்கை மாநகருக்குள் சென்று மறைந்தது.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 90

**சரியானவிடை:- வடதிசை.**

1. **செல்வி லாலினி சரச்சந்திரன்,** 146 கட்டுவான வீதி, ஹோமாகம.
2. **செல்வி என். ராஜம்,** 30, 2ம் வட்டாரம், களுதாவளை, மாத்தளை.
3. **எஸ். மனோரஞ்சிதம்,** பாரதி மா. வி., பசறை வீதி, பதுளை.
4. **செல்வன் எஸ். ஸ்ரீரவி,** இல 118/50 குருநாகல் வீதி, மெல்புர, சிலாபம்.
5. **வயிரமுத்து சிறிமதி வதனி,** பாலையடி ஆலய வீதி, காரைதீவு-09.(கி.மா)

**போட்டி இல. 92** கேள்வி:- முதல்நாள் போரில் ஈடுபட்ட அரக்கர்படைத் தளபதிகளின் பெயர்களைத் தருக?

ஜூலை. 26 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி– இல.92, தினமுரசு வாரமலர், த.பெ.இல– 1772, கொழும்பு.**

# இது கற்பனையல்ல கண்டு ரசித்த காட்சி!

**நம்ம காதிலை பூ கந்தசாமி சிவாஜி ரசிகராம். 'தாதா சாகேப் பால்கே விருது' சிவாஜிக்கு கிடைத்தது என்றதும் புல்லரித்துப் போனார். அதனால் இம்முறை தன் கற்பனைக்கு வேலை கொடுக்காமல், 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' படத்தில் இடம்பெற்ற உச்சக்கட்ட காட்சியை எடுத்துத் தருகிறார்.**

முதல் நாள் போரில் வெள்ளையத் தேவன் மடிகிறான். இரண்டாம் நாள் போரில் காயமுற்ற கட்டப்பொம்மனை புதுக்கோட்டைக்குத் தூக்கிச் செல்கிறார்கள். புதுக்கோட்டை அரசன் கட்டபொம்மனை பானர்மெனிடம் காட்டிக் கொடுத்து விடுகிறான். அதனால் பாளையக்காரர்கள் (வெள்ளையரிடம் சரணடைந்த தமிழ் குறுநில மன்னர்கள்) சூழ்ந்திருக்க கட்டபொம்மனை கை விலங்கிட்டு பானர்மெனிடம் (வெள்ளையர் பிரதிநிதி) இழுத்து வருகின்றனர்.

**பானர்மென்:** (பாளையக்காரர்களைப் பார்த்து) "ஏன் நிற்கிறீர்கள். உட்காருங்கள்!"

**கட்டபொம்மன்:** (ஏளனமாக) **உயிருக்குப் பயந்தவர்களே உட்காருங்கள்!**

**பானர்:** அகம் அழியவில்லை உனக்கு!

**கட்ட:** **உன்னை அழித்திருந்தால் என்னுடைய அகமும் அழிந்திருக்கும். அல்லது எட்டப்பனும் தொண்டைமானும் எங்களிடையே பிறவாதிருந்தாலும் உனக்காவது அகம் உண்டாகாமல் இருந்திருக்கும்.**

**எட்டப்பன்:** நல்லவர்களைத் திட்டாதே.

**கட்ட:** **நாய்களைத் திட்டாதே என்று கூறு.**

**எட்ட:** துரை அவர்களே, நாய் ஒன்றுதான் நன்றியுள்ளது. அதைத்தான் சொல்லுகிறான் இவனும்.

**பானர்:** அதைச் சொல்ல இவன் யார்?

**எட்ட:** அதுவும் சரிதான். அடக்கியாளும் உங்களைச் சொல்ல அடிபட்ட இவனுக்கு உரிமை ஏது?

**கட்ட:** (குமுறலோடு) **எட்டப்பா.... ஈனமொழி பேசாதே. வாழ விரும்பினாய்.... வல்லவனை அழித்தாய்! இனி நீ வாழ்ந்து கொள். வீரம் விலையற்றதென்றாய்.... வீணனை வணங்கினாய்! வேண்டுவதை வாங்கிக்கொள். ஆனால் அன்னியர் உன்னைப் போற்ற வேண்டும். அது உனக்கு இனிக்க வேண்டும் என்று மட்டும் எண்ணாதே. நீ காட்டிக் கொடுத்தாய். நான் காட்டிக் கொடுக்கப்பட்டேன். ஆனால் நாம் இருவரும் இதே மண்ணில் விளைந்தவர்கள் தான். உன்னைக் கேடு சூழினும் இனச்சத்து எங்கோ ஒன்றித்தான் இருக்கும். அதனாலே என் பேச்சுக்குத்தான் நம்மிடையே இடமுண்டு. ஏற்பதும் உனக்கு இழிவன்று. காரணம் உரிமை ஒன்று. அவனோ (பானர்மென்) நேற்று வந்தான். இன்றிருப்பான், நாளை போவான் என்ற எல்லை இலக்கணத்திற்கு உட்பட்டவன். இம்மியேனும் நம்மிடையே ஒவ்வாதவன். அவன் கத்தி பாய்ச்சினும் கலங்காதே! அவன் பேச்சு கேட்டு மட்டும் வீழாதே!**

**நான் இன்று கூறுவது உனக்கு மட்டுமல்ல. நம்மோடு சிங்கங்களாகப் பிறந்து, குரங்குகளாகக் கூடி நிற்கும் அத்தனை ஈனர்களுக்கும், மானம் விற்ற மடையர்களுக்கும் கூறுகிறேன். கூறுவதென்ன? சே... சே..... உமிழ்கிறேன்....தூ!**

**பானர்:** நிறுத்து....! போதும் உன் பேச்சு! குற்றவாளியாகிய நீ ஏதேனும் சமாதானம் கூறி குற்றத்தைக் குறைத்துக் கொள்ள முடியுமாவென்று பார். நாங்கள் நாயைக் கொல்வதானாலும் சட்டப்படி குற்றம் காணாமல் கொல்ல மாட்டோம்.



**கட்ட:** (கோபத்துடன்) **ஆ.... எத்தர்கள் நல்லவர்களாக நடிக்க ஏற்பட்ட எத்தனையோ வழிகளில் இதுவும் ஒன்று. ஊருக்கும் பேருக்கும் உன் நாடகத்தை நடத்திக்காட்டு.**

**பானர்:** நீ குற்றவாளிதானே?

**கட்ட:** **ஆம்... உன்னைக் கொல்லத் தவறிய குற்றவாளி!**

**பானர்:** எடக்குப் பேச்சு வேண்டாம்! நேர்மையான பதில் தேவை. கும்பெனி கட்டளைக்கு நீ ஏன் அடங்கவில்லை?

**கட்ட:** **கும்பெனி என்பது வாங்கவும் விற்கவும் வந்த ஒரு வர்த்தக ஸ்தாபனம். அதற்குள் அடங்க வேண்டியது பொருள்கள், புருஷர்கள் அல்ல.**

**பானர்:** கடைசியாக நாங்கள் வாங்கியிருப்பது அரசுரிமை!

**கட்ட:** **உரிமையை வாங்குவதோ விற்பதோ எங்கள் முழக்கமல்ல. எவனாவது விற்றிருந்தால் அவனைப் போய் கேட்டிருக்க வேண்டும் இந்தக் கேள்வியை!**

**பானர்:** அவன்தான் ஆற்காட்டு நவாப்பு! அவன் உங்களைக் கேட்கச் சொல்கிறான்.

**கட்ட:** **அவனையே நான் கேட்கச் சொல்லுகிறேனென்று நீ அவனிடமே போய்க்கேள்!**

**பானர்:** மீண்டும் எடக்குப் பேச்சு கோபத்தைக் குத்துவதாகும்.

**கட்ட:** **உணர்ச்சி உடையவனுக்குத்தான் கோபம் வரும். உனக்கு வருவதாகக் கூறுவது பொய்.**

**பானர்:** சே.... எடக்கு, இறுமாப்பு, ஏளனம்... உனக்கு மிக மிக அதிகம்.

**கட்ட:** **எல்லாம் உடன் பிறந்தவை.**

**பானர்:** அது ஒடுக்கப்பட்டது.

**கட்ட:** **நடக்காது நானிருக்கும் வரை. எக்காளம் இறங்காது. உரக்க உரக்க மேலெழும்.**

**பானர்:** இதோ பார்! எரிக்கும் சூரியன் இருக்கிறதே.... அது கூட எங்களைக் கேட்டுத்தான் எழும்....விழும்!

**கட்ட:** **ஆங்! அந்தக் கதையை இங்கு விடாதே அப்பனே! சூரியனே வேண்டாமென்று ஆண் கூட அல்ல ஒரு பெண் விரட்டியிருக்கிற கதையெல்லாம் இங்கு ஏற்கனவே ஏராளமாக நடந்திருக்கின்றன. வேறு ஏதேனும் கூறு.**



**பானர்:** ஏனைய பாளையக்காரர்களெல்லாம் பணிந்து விட்டார்கள்...! பலனடைகிறார்கள். நீ ஒருவன் மட்டும் பணிய மறுப்பதால் அது உனக்கு ஒரு லாபமா?

**கட்ட:** **எல்லோரும் பணிந்த பிறகு நான் ஒருவன் பணிய மறுப்பதால் அது உனக்கு ஒரு நஷ்டமா?**

**பானர்:** சே! இவன் பேசத் தெரிந்தவன்!

**கட்ட:** **ஆம்! பேசத் தெரிந்தவன். வெறும் பேச்சல்ல. மானத்திலே பாசமுற்றவன். வல்லவன், வாள்வீசத் தெரிந்தவன். அதனால் வால் பிடித்து வாழ வேண்டுமென்று அல்லாதிருப்பவன்.**

**பானர்:** இரும்புத் தலையன் என்று எனக்குப் பெயர். என்னிடமே பேசுகிறாய்...!

**கட்ட:** **உருக்க வேண்டிய பொருள்! அதனிடம் இரக்கம் காட்டிப் பேசியது தவறுதான். புல்லனே! நான் காதல், வீரம், மானம்.... அந்தக் கட்டுக்கோப்பிலே வளர்ந்தவன். எங்கள் நாடோ எல்லா வளமும் பொருந்திய நாடு! வானமும் வையகமும் ஒத்துழைக்கும் நாடு! இங்கு பிறந்தவன் பேடியாவதில்லை!**

**பானர்:** பேடியாய் இருப்பவன்?

**கட்ட:** **இந்த நாட்டின் அசல் வித்தாக இல்லாதவனாக இருப்பான். எங்கள் தென்னாட்டு மக்கள் பொன்னாட்டு மக்கள்! போர் என்றால் புலிக் குணம்! பொங்கும் இன்ப காதலென்றால் பூ மணம்! புகழுக்குரிய மானம் என்றால் உலகிற்கே ஒரே இனம்.... என்ற சரித்திரம் கண்டவர்கள்! எங்களை அடக்கியாள ஆண்டவனும் எண்ணியதில்லை! விரும்பினால் அன்பு காட்டி நண்பர்களாகத் தான் எங்களோடு வந்து வாழ்ந்ததுண்டு. இந்த புண்ணிய பூமியிலே நாடு பிடிக்க வந்தவர் நீங்கள் நரி வேஷம் காட்டி வாலை ஆட்டி நிற்கிறீர்கள்! காலம் உங்களுக்கு கருணை காட்டினாலும், நல்லவர்கள் உங்கள் காலைப் பற்றி வாழ மாட்டார்கள் என்பதை மட்டும் மறந்துவிடாதே.**

**பானர்:** போதும் நிறுத்து! மேலும் குற்றங்களைக் கூடுதலாக்கிக் கொண்டே போகிறாய். குற்றத்தைக் குறைத்துக் கொள்ள வேறு சமாதானம் இருந்தால்கூறு. கடைசியாக உனக்கு ஒரு வினாடி ஒதுக்குகிறேன்... மன்னிப்புக் கேட்டுக்கொள்!

**கட்ட:** (ஆவேசத்துடன்) **ஆ!... என்ன சொன்னாய்? எனக்கா மன்னிப்பு? நீசனே! உன் நாவை எடுத்தெறி. என் கையிலே விலங்கில்லாமல் இருந்திருந்தால் இந்நேரம் உன்னுடைய தலை கழட்டப்பட்டிருக்கும். என் தாய் கேட்டிருக்க வேண்டும் இதை. தள்ளாத வயதில் பொல்லாத புலியென பாய்ந்திருப்பாள். என்னுடைய தம்பி கேட்டிருந்தால் உன்னுடைய பரங்கித் தலை... உன் சீதளச் சீமையை நோக்கிப் பறந்திருக்கும். என் தமிழ்ப் புலவன் கேட்டிருக்க வேண்டும்.... அறம் பாடியே உன்னை அழித்திருப்பான். என்னுடைய மனைவி கேட்டிருந்தால்.... உன்னுடைய உடலையே எரித்திருப்பாள்.... அடே எட்டப்பா! நான் இறக்கப் போகிறேன். ஆனால் உனக்கோ... இந்த ஊரே சொல்லட்டும் போ!**

**பானர்:** இவனைக் கொண்டு போய் அந்த புளிய மரத்திலே தூக்கிலிடுங்கள்!

**கட்டபொம்மன்:** (அலட்சியமாக) **துணிந்தவனுக்கு தூக்கு மேடை பஞ்சு மெத்தை!**

கட்டபொம்மன் இழுத்துச் செல்லப்படுகிறான். சரணடைந்த பாளையக்காரர்கள் பல்லிளித்தபடி நிற்கிறார்கள். சிங்கம் போல நடந்து செல்கிறான் கட்டபொம்மன்.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O. (QD/43/NEWS/97)






பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# பெரிய கடி



↓ அந்துப்பூச்சி ஒன்று ஓர்க்கிட் மலரிலிருந்து தேன்குடிக்கும் காட்சிதான் இது.

அந்துப்பூச்சியின் நீளம் ஆக இரண்டு அங்குலம் மட்டுமே! ஆனால் இந்த வகையான ஒடுங்கிய இதழ்களையுடைய நீளமான பூவிலுள்ள தேனை உறிஞ்சிக் குடிப்பதற்காகவே இந்த அந்துப்பூச்சிக்கு எட்டு அங்குல நீளமுள்ள நாக்கு இருக்கிறது. தனது வாயினுள் சுருட்டி வைத்திருக்கும் நாக்கை தேவையானபோது வெளியே நீட்டிக் கொள்கிறது. தேனை உறிஞ்சிக் குடிக்கும் அதே வேளையில் மகரந்தத்தையும் கடத்துகிறது.

தேன் குடிக்கும்போது பூவிலோ வேறு இலைகளிலோ பிடித்துக் கொள்ளாமல் தனது சிறகுகளை வேகமாக அசைத்து அந்தரத்திலேயே நிற்பதையும் காணலாம். அசத்தலான டெக்னிக். பூச்சி வந்தல்லோ, தேன் குடித்தல்லோ. இக் காட்சியைக் கண்டவர் கிறங்கிப்போய் படம் பிடித்தல்லோ, அதனால் நாமும் கண்டல்லோ. ■

# தேன் குடித்தல்லோ



↑ வழக்கமான விளையாட்டுக்களில் எத்தனைநாள்தான் ஈடுபட்டுக்கொண்டிருப்பது. அதனால் அபாயகரமான விளையாட்டில் சிலருக்கு குஷி வந்துவிடும். நீலத்திரையாக விரிந்துகிடக்கும் கடலுக்குள் ஏராளமான உயிரினங்களும், எண்ணற்ற அதிசயங்களும் குவிந்து கிடக்கின்றன. உள்ளே செல்லச் செல்ல அபூர்வ காட்சிகள்தான். இப்போதெல்லாம் கடலுக்குள் புகுந்து நீந்த மட்டுமல்ல, அங்குள்ள காட்சிகளை படம்பிடிக்கவும் நவீன தொலைநோக்கி கமராக்கள் வந்துவிட்டன.

அப்படி ஒரு கமராவுடன்தான் மெக்ஸிக்கோ கடலுக்குள் புகுந்தார் நிக் கலோமியானிஸ். தாடியுடன் நிற்கிறாரே அவர்தான். உள்ளே புகுந்தவர் பார்வையில் ஏழடி நீளமான சுறாவொன்று பட்டுவிட்டது. அதனைப் படம்பிடிக்க காதலி பின்னால் அலையும் காதலன்போல இவர் அலைந்தார். சுறாவோ டிமிக்கி கொடுத்துக் கொண்டிருந்தது.

அதனை ஒரு சவாலாக எடுத்துக்கொண்ட நிக் கரைக்கு வந்து தன் குழுவினரையும் அழைத்துக்கொண்டு கடலுக்கடியில் சென்றார். சுறாவைக் கண்டவர், கமராவுடன் நெருங்கினார். மிரண்ட சுறா நிக்கின் கையில் கடித்துவிட்டு நழுவி மறைந்து விட்டது. பின்னர் நிக்கின் குழுவினருக்கு ரோஷம் வந்துவிட்டது. சுறாவைத் தேடிப்பிடித்து ஒருவிதமாகக் கொன்று விட்டார்கள். கரைக்கு கொண்டுவந்து அதன் பற்களை எடுத்துக் கொண்டார்கள்.

சுறா கடித்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிக் மரணத்தில் இருந்து மயிரிழையில் தப்பினார். மூன்று வாரங்களுக்குள் ஐந்து சத்திர சிகிச்சை செய்துதான் உயிர் பிழைக்க வைத்தனர்.

மரணவாயில் இருந்து மீண்ட ஞாபகார்த்தமாக சுறாவின் பற்களை பாதுகாத்து வைத்துக் காட்டுகிறார் பாருங்கள்.

கரையில் மனிதன் சுறாவைக் கடிக்கிறான். அதாவது சாப்பிடுகிறான். கடலில் மனிதனைக் கண்டால் சுறா கடிக்கிறது. கடிக்குக் கடி.

சுறாக்களில் 350 ரக்கங்கள் உள்ளன. நிலத்தில் யானைபோல நீரில் பெரியது திமிங்கலச் சுறா. 12 மீட்டர் நீளம்வரை வளரும். இது ஆபிரிக்க யானையைவிட பெரியது. எடை: 13 மெட்ரிக் தொன். அதாவது 13 ஆயிரம் கிலோ. ■





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657




→ எல்லைகள் தாண்டி விரிந்த பக்திக் கடலின் ஒரு பகுதி இது. அவுஸ்திரேலியாக் கண்டத்தில் உள்ள ஃபிஜித் தீவில்தான் இந்தப் பக்திக்கடல் பெருக்கெடுத்தோடியது.

திரைகடலோடி தொழில் தேடிச் சென்று குடியேறிய நாடுகளிலும் இந்துக்கள் தங்கள் பக்தியை கைவிடவில்லை.

மகாபாரதத்தின் கதாநாயகி திரௌபதியை இந்துக்கள் தெய்வமாகக் கருதி பூசைகள், திருவிழாக்கள் நடத்துவது நம்நாட்டிலும் உள்ளதுதான். ஃபிஜித் தீவில் திரௌபதி திருவிழாவின்போது தீமிதிப்பும் நடைபெறும். அதற்கு முன்னர் பக்தர்கள் தங்கள் உடல்களில் உலோகத்தாலான வேல், சூலம் போன்றவற்றைக் குத்திக்கொண்டு சமுத்திரத்தில் நீராடி மஞ்சள் பூசிக்கொள்வார்கள்.

பாருங்கள் பக்தர்கள் வெள்ளியிலான கலன்களை உடல்களில் குத்துகிறார்கள். தாடியுடன் காணப்படும் பக்தர் நெடிய வெள்ளிக் கம்பியைத் தன் தொண்டையில் குத்திக் கொள்வதைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்கிறதல்லவா!

இக்காட்சியைப் பார்த்ததும் சமீபகால சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறது. தமிழ்நாட்டில் இப்படியொரு தீமிதிப்பில்தான் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் குதித்தார். பகுத்தறிவு என்னாச்சு? என்று கேட்டன பத்திரிகைகள். உடனே 'தீமிதிப்பு காட்டுமிராண்டித்தனம்' என்றார் கலைஞர். 'இந்துக்களின் வாக்குகளை இழக்கப் போகிறீர்கள்' என்று கலைஞரை யாரோ எச்சரித்ததால், அடித்தார் பல்டி. "நான் தீமிப்பைச் சொல்லவில்லை, எமது கட்சிக்காரர் தீமித்ததைத்தான் அப்படிச் சொன்னேன்" என்றார். ■

# முற்றிய பக்தி

# பிறந்தநாள் வாழ்த்து



செல்வி டிஷானி புவனேந்திரராஜா

பெரியகல்லாறு-1ஐச் சேர்ந்த செல்வி டிஷானி புவனேந்திரராஜா தனது 1வது பிறந்தநாளை 20.07.97 அன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பா, சித்திமார், மாமாமார், தாத்தாமார், பாட்டி, அண்ணன் ரம்மியன், தங்கை ஆதினி மற்றும் உறவினர்கள் தங்களது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்கள்.

வாழ்க வளமுடன்!



உயரமான புயல் கேர்ட்லி அம்புறோஸ். நீண்டகாலமாக உலகின் முதலாவது வேகப்பந்து வீச்சாளராக இருந்த மேற்கிந்திய வீரர் என்ற பெருமையும் உண்டு. இப்போது வேகத்தில் சற்று பின்னடைந்திருந்தாலும் வீச்சில் தொய்வு ஏற்படவில்லை. 300 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்திய 12வது பந்துவீச்சாளர். நாலாவது மேற்கிந்திய வீரர். இவர் சாய்த்த 300வது டெஸ்ட் விக்கெட் இலங்கைவீரர் சஜீவ டி சில்வாவின் உடையது.

இந்த 34 வயது புயல் முதன் முதலில் களம் புகுந்த சர்வதேசப் போட்டி 1988ல் பாகிஸ்தானுடன் நடந்த போட்டியாகும். இவரது முதல் விக்கெட் முடசார் நஸார் உடையது. செண்டிமெண்டான ஒரு சமாச்சாரம் யாதெனில், இவர் வீழ்த்திய 1வது, 100வது, 200வது, 300 விக்கெட்டுக்கள் மேற்கிந்திய தீவு மைதானத்திலேயே வீழ்த்தப்பட்டன. இதுவரை மொத்தம் 303 டெஸ்ட் விக்கெட்டுக்களை சாய்த்திருக்கிறார்.

டெஸ்ட் போட்டிகளில் எந்தெந்த நாடுகளின் விக்கெட்டுக்களை அதிகமாகச் சாய்த்திருக்கிறார் பாருங்கள்: அவுஸ்திரேலியா-109, இங்கிலாந்து- 117, இந்தியா-15, நியூஸிலாந்து-13, பாகிஸ்தான் -30, தென் ஆபிரிக்கா-8, இலங்கை-11. சிறந்த பந்துவீச்சு 8/45.

அம்புறோஸ் 5 விக்கெட்டுக்களை 18 தடவையும், 10 விக்கெட்டுக்களை 3 தடவையும் பெற்றுள்ளார்.

இவர் வீசும் பந்துகளுக்கு துடுப்பாட்ட வீரரின் விக்கெட்டை மட்டுமல்ல, தலையையும் பதம் பார்க்க ஆசையோ ஆசை. அதனால் 'மண்டை ஒட்டு வேட்டைக்காரன்' என்று அழைக்கிறார்கள்.

# மண்டையில் போடுகிறார்



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 25, [illegible] உள்ள சமலை அச்சகத்தில் ஜூலை 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.